
கல்கி
KALKI
மே 22, 1955
4



"ஹா!
லைப்பாய் சோப்பை
உபயோகித்து குளிக்க
வேண்டிய நேரம் இதுதான்."
– அது சரீரத்தை சுத்தமாக்கு
வதுடன் புத்துணர்ச்சியைத்
தருகிறது!
LIFEBUOY SOAP
LIFEBUOY
SOAP
LIFEBUOY SOAP
L. 253-50 TM
இந்தியாவில் தயாரித்தது.

மலர் 14
இதழ் 43

கல்கி

மன்மத ௵
வைகாசி 8

பொருளடக்கம்

1955 மே 22

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

மே 20-ந் தேதி முதல் தென்னாடெங்கும்
சென்னையிலும் மைசூரிலும் 27ம் தேதி முதல் திரையிடப்படும்



பூரண உரிமையாளர்கள்: தேவி பிலிம்ஸ் லிமிடெட், மதராஸ்-3.

விநியோகஸ்தர்கள்: ○ சென்னை நகரம்: அசோகா பிக்சர்ஸ், மயிலாப்பூர், சென்னை; ○ வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர், பாண்டிச்சேரி உள்பட: ராஜா பிலிம்ஸ், 11, மௌண்ட் ரோடு, மதராஸ்-2; ○ மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர், காரைக்கால் உள்பட: வியாசர் பிலிம்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை; ○ சேலம்: சேலம் ராமனுஜன் பிக்சர்ஸ், சேலம்; ○ கோயமுத்தூர், நீலகிரி உள்பட: கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்; ○ மலபார் பிரதேசம்: தி பிலிம் டிஸ்ட்ரிபியூட்டிங் கம்பெனி, எர்ணாகுளம்.



மலர் 14
இதழ் 43

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵
வைகாசி 8

புதிய திறவுகோல்

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் ஹட்டனில் கூடி முடிவு செய்துள்ள தீர்மானத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

ஆரம்பத்திலேயே, பல நாளைக்கு முன்பே செய்திருக்க வேண்டிய ஒரு முடிவு. அதன் அவசியத்தை உணர்ந்து இப்பொழுது தெளிவான வகையில் ஒரு தீர்மானத்துக்கு வந்தது குறித்து மிகவும் திருப்தி அடைகிறோம்.

இந்தியாவிலிருந்து குடியேறின மக்களின் சங்கமாகிய இலங்கை ஜனநாயக காங்கிரஸ், இந்த ஆண்டுக் கூட்டத்தில் பிரஜாவுரிமை சம்பந்தமாக ஒரு முக்கிய தீர்மானம் நிறைவேற்றி யிருப்பதை நேயர்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள்.

இந்தியாவிலிருந்து குடியேறிய மக்களின் பிரஜாவுரிமை சம்பந்தமாகச் செய்யப்பட்டிருக்கும் தற்போதையச் சட்டத்திற்குப் பதிலாக, புதிய சட்டம் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

'இலங்கையில் நிரந்தரமாக வாழ வந்திருக்கிறோம்' என்று உறுதிமொழி கொடுக்கும் எல்லா மனுதாரர்களையும் அவர்களுடைய உறுதிமொழியின் பேரிலேயே வேறு பேச்சில்லாமல் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து விடவேண்டும். "நமக்கு இந்தியப் பிரஜாவுரிமை வேண்டியதில்லை, இலங்கைப் பிரஜாவுரிமையே நமக்குத் திருப்தி" என்று இலங்கையில் வாழும் ஒருவர் சொன்னால் "நீ சொல்வது தப்பு" என்று மறுக்கும்படியான உரிமை இலங்கை அதிகாரிகளுக்கு இருக்கக்கூடாது. இவ்வாறு கோருவதென்று ஜனநாயக காங்கிரஸில் உறுதியாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இதை இலங்கை சர்க்கார் ஒப்புக் கொள்வதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு, நிர்வாகக் கமிட்டிக்கு அதிகாரமும் அளித்திருக்கிறார்கள்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு அஸீஸ், தாம் நிகழ்த்திய தலைமைப் பிரசங்கத்தில் குறிப்பிட்ட ஒரு விஷயம் இலங்கை சர்க்காரின் உள்ளத்தில் பதியும் என்று எதிர்பார்க்கிறோம்.

"இலங்கையை வளமாக்குவதற்குத் தங்கள் வியர்வையைச் சிந்தி உழைத்த குடியானவர்களின் குடும்பங்களுக்குச் சர்க்கார் நியாயம் வழங்க விரும்பினால், இப்போதுள்ள பிரஜா உரிமைச் சட்டங்களை ரத்துச் செய்து விட்டுப் புதிய பரந்த நோக்கத்துடன் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும் என்று கோருகிறேன். சிக்கல் நிறைந்த முறைகள் பயன்படமாட்டா" என்று அஸீஸ் குறிப்பிட்டார். இதையே வரவேற்புத் தலைவர் திரு வெள்ளையன் அவர்கள் நிகழ்த்திய உரையிலும் வெகு அருமையான முறையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாண்டுங்கில் சீன இந்தோனீஸிய அரசாங்கத் தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் பற்றி எழுதும்போது அது இலங்கைக்கு வழிகாட்டும் ஒரு உடன்படிக்கை என்று கூறியிருந்தோம். "தென்னாப்பிரிக்காவின் துஷ்ட பாடத்தை விட்டு விட்டு. இந்தோனீஸியாவிட மிருந்து நீதி முறைப்பாடம் கற்றுக் கொள்ளவேண்டும்" என்று இலங்கை சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

இந்த முறையிலேயே இலங்கை ஜனநாயக காங்கிரஸும் இப்பொழுது தீர்மானித்திருப்பது மகிழ்ச்சிக்கு உரிய காரியமாகும்.

"புத்த பெருமான் காட்டிய வழியில் நடந்து புகழ் பெறுவார்களாக. சிக்கலும் நிபந்தனைகளும் புகுத்திக் குழப்பிக் கொண்டு. போகாத ஊருக்கு வழி தேடவேண்டாம்.

இந்தோனீஷியா செய்தபடி செய்து விடுவார்களாக" என்று ராஜாஜிகூறிய யோசனை இதுவே.

இந்தச் சிறந்த தீர்மானத்தை உறுதியாகக் கடைப்பிடித்து நல்ல வழியில் கிளர்ச்சி செய்து இந்தியாவிலிருந்து குடியேறிய நம்முடைய இலங்கை மக்கள் விரைவில் வெற்றி பெறுவார்களாக! நிபந்தனைகள் போட்டுத் தொந்திரவு படுவதும், தொந்திரவு கொடுப்பதும் பயனற்ற துறையாகும். "இனிமேல் யாரும் இந்தியாவிலிருந்து நமது தீவுக்கு வரக்கூடாது, நம்முடைய சொத்தில் பங்கு கேட்கக்கூடாது" என்று இலங்கை மக்கள் சொன்னால் அதற்கு நாம் ஆட்சேபிக்க வேண்டியதில்லை. ஏற்கனவே குடியேறி யிருக்கும் மக்களை வெளியேற்றக் கூடாது. அவர்களை இலங்கை மக்களாகவே கருத வேண்டும். அவர்கள் உள்ளத்தை அவர்களே ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டுமே தவிர, நிபந்தனைகள் போட்டுக் குழப்பமும் கவலையும் உண்டாக்கக் கூடாது. இதுவே நம்முடைய நீதி பொருந்த கோரிக்கை. இதை இலங்கை சர்க்கார் ஒப்புக்கொண்டு இலங்கையிலுள்ள ஏழைகளைத் திருப்தி செய்து விட்டு, 1955-ம் வருஷத்துடன் இந்த விவாதம் முடிந்தது என்று சரித்திரத்தில் பதிவாவதற்குரிய அறிக்கையைச்சீக்கிரம் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இதனால் இலங்கை கெட்டுப் போகாது. இலங்கைக்குச் சென்றிருக்கும் புதிய இந்திய ஹை கமிஷனர் ஹட்டனில் கண்ட இந்தப் புதிய நிறவுகோலைக் கையாள்வாராக!

ஹிந்தியும் பரீட்சைகளும்

டில்லி மந்திரிகளும் காங்கிரஸ் தலைவரும் உத்தியோகப் பரீட்சைகள் ஹிந்தியில் நடைபெறுவது பற்றித் தென்னாட்டு மக்களுக்குச் சமாதானம் சொல்லி வருகிறார்கள். ஹிந்தியாவது, வேறு பிரதேச பாஷையாவது, ஆங்கிலமாவது, இஷ்டப்படி வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி வருகிறார்கள். ஹிந்தி கட்டாயம் இல்லை என்றும் சொல்லி வருகிறார்கள். இப்படித் தெளிவு படுத்தினது திருப்திகரமாக இருக்கிறது.

ஆனால் 1965-க்குப் பிறகும் இதே முறையை அனுசரிக்க வேண்டும் என்பதே தென்னாட்டு மக்களுடைய கட்சியாகும். அரசியல் நிர்ணயச் சட்டத்தில் 343-வது பிரிவில் இருக்கிற நிபந்தனையானது அரசியல் நிர்வாக பாஷையைப் பற்றியே தவிர பரீட்சைகளைப் பற்றியல்ல. தவிர அந்தப் பிரிவின் மூன்றாவது உட்பிரிவில் ஹிதப்படி செய்ய இடமும் இருக்கிறது. மக்களுடைய தாரதம்மியத்தைப் பார்க்க வேண்டுமானால் விஷய ஞானம் ஒரு புறம் இருக்க, ஒரு பிரதேசத்தாருடைய பாஷையின் மூலமே பரீட்சை செய்யப்படும் என்று சொன்னால் அது பட்சபாதமேயாகும். தற்போது மத்திய சர்க்கார் அனுசரித்து வரும் முறையில் பட்சபாதம் இல்லை. இந்த முறை எப்போதுமே இருக்க வேண்டும். 1965 வரையில் என்று ஒரு கால வரம்பு இருக்கக் கூடாது. ஹிந்தி பாஷை அரசாங்க ஊழியர் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமே. இதற்காகப் பரீட்சையில் ஒரு அம்சமும் ஏற்படுத்த வேண்டியது நியாயம். எல்லாப் படிப்பையும் ஹிந்தியிலேயே பரீட்சை செய்ய வேண்டும் என்று சொல்வதுதான் தவறு. இது வரையில் பிரதம மந்திரி முதலியவர்கள் தெளிவுபடுத்தியது திருப்தியாக இருந்த போதிலும், இன்னும் தெளிவுபடுத்த வேண்டிய விஷயம் எஞ்சி நிற்கிறது. அதாவது, நிரந்தர ஏற்பாடு என்ன என்பது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் சொல்லி யிருப்பதைப் பரீட்சைகளுக்கு ஏற்றிக் குழப்பப்படுத்திப் பாரபட்சத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை வற்புறுத்துகிறோம்.

சாஸ்திரியார் நினைவு மண்டபம்

'ரைட் ஆனரபில்' ஸ்ரீனிவாச சாஸ்திரியார் என்றால் அந்த நாட்களில் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருப்பவர்கள் பயந்து போய்த் தமிழில் பேச ஆரம்பிப்பார்கள். பிறகு தமிழில் சரியாகப் பேசவரவில்லை என்பதை உணர்ந்து கொண்டு வாய் மூடிக்கொண்டு மௌனமாகி விடுவார்கள்!

அவரது ஆங்கிலப் பாண்டித்தியம், உச்சரிப்பு முறை, பிரசங்க பாணி — ஆகியவை கண்டு அந்த நாட்களில் ஆங்கிலத்தைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களே வியந்து மதித்துப் பாராட்டியிருக்கின்றனர். அவருக்கு ஆங்கில பாஷையில் மோகமாயினும், தாய் நாட்டின் மீதுதான் அதிக பக்தி. ஆங்கில மொழியையும் அதில் தாம் அடைந்த புலமையையும் தேசத்தின் நலத்துக்காகவே பயன்படுத்தி வந்தார். மகான் கோகலே அவருடைய குரு. கோகலே தொடங்கிய செர்வண்ட்ஸ் ஆப் இந்தியா சொஸைட்டியின் மூலம் நாட்டுக்குத் தொண்டு புரிந்தார். தென் ஆப்ரிக்கா முதலிய நாடுகளுக்கு இந்தியர்களின் நலன்களைப் பாதுகாக்கச் சென்றார். வட்ட மேஜை மகாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக பிரிட்டிஷ் சர்க்காரால் அழைப்புப் பெற்றுப் போய் இருந்தார். இப்படி ஆங்கிலத்திலும் அரசியலிலும் மூழ்கியிருந்தும் தமிழகப் பண்பாடும், நமது ராமாயண பாரத இதிகாசங்களில் நல்ல ஈடுபாடும் கொண்டு அரிய உபந்யாஸங்கள் செய்து வந்



மண்டபத்தை அலங்கரிக்கும் படம்

தார். இப்படிப்பட்ட ஒரு பெரியாருக்கு, நினைவு மண்டபம் தோற்றுவித்துத் தமிழகம் பெருமையுற்றது.

சென்னை மயிலாப்பூரிலுள்ள ரானடே வாசகசாலைக் கட்டடத்தின் மேல்மாடியாக சீனிவாச சாஸ்திரி நினைவு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை ஸர் மிர்ஸா இஸ்மாயில் பெங்களூரிலே இருந்து வந்து, சென்ற ஞாயிறன்று மங்களத் திறப்புச் செய்தார். சீனிவாச சாஸ்திரியாரின் நினைவு மண்டபம் ஏற்படுத்த நிதி வசூலிக்கத் தொடங்கியபோது, ஸர் மிர்ஸா இஸ்மாயில் ரூ. 25,000 ஹைதராபாத் சர்க்காரின் சார்பில் வழங்கினார். அந்தக் காலத்தில் அவர் ஹைதராபாத் திவானாக இருந்தார்.

இப்படி சீனிவாச சாஸ்திரி நினைவில் ஈடுபாடு கொண்ட ஸர் மிர்ஸா இஸ்மாயில் இம் மண்டபத்தைத் திறந்து வைத்தது சாலப் பொருத்தமாக இருந்தது. அன்று அவர் மண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சிந்தனையைத் தூண்டும் சில கருத்துக்களைக் கூறினார்.

"நம்முடைய பொதுமக்கள் சமாதானப் பிரியர்கள். சட்டத்துக்கு அடங்கும் சுபாவம் கொண்டவர்கள். சிறு நன்மைகள் செய்தாலே மிகத் திருப்தி யடையக் கூடியவர்கள். பழைய வழக்கங்களில் பற்றுக் கொண்டவர்கள். அவர்களுக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு அப்பழக்கங்களை மாற்றியமைக்க நாம் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளாமல் இருப்போமாக. மாற்றும் பொறுப்பைக் காலக் கிரமத்துக்கு விட்டு விடுவோம். ஏனெனில் காலம் என்பது கடவுளின் பெயரே. அது எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும்" என்றார்.

இதை நமது அரசியல் வாதிகள், சமூக சீர்திருத்த ஊழியர்கள் மனத்தில் கொள்வார்களாக!

ஆங்கிலத்திலும் வட மொழியிலும் தமிழிலும் மேதையாகவும், சுதந்திர இந்தியாவை நிர்மாணித்த ஆரம்பச் சிற்பிகளில் ஒருவராகவும், நம் நாட்டின் பண்பாட்டை மதித்த ஒரு அறிஞராகவும் விளங்கிய சாஸ்திரியார் அவர்களின் நினைவு மண்டபம், சென்னை மக்களின் சிந்தனையை அறிவு மார்க்கத்தில் செலுத்தும் ஒரு கோயிலாகப் பயன்படுமாக.

மேலே கூறப்பட்ட வைபவத்தின் காட்சிகளைப் பக்கத்தில் காணலாம். நடுவில் பேசிக் கொண்டு நிற்பவர் தான் ஸர் மிர்ஸா இஸ்மாயில். அவர் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் இவ் விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர். இவ் வைபவத்துக்கு ராஜாஜி முதலிய பிரமுகர்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.



என்ன சேதி

ஆஸ்த்ரியாவுக்கு விடுதலை

சென்ற பதினேழு ஆண்டுகளாக அன்னியரின் ராணுவ பலத்துக்கு அடங்கி அல்லலுற்று வந்த ஆஸ்த்ரியா, சென்ற வாரம் ருஷ்யாவின் தனி யோசனையின் பேரில் விடுதலை அடைந்து விட்டது. ஆஸ்த்ரியாவில் உள்ள எழுபது லட்சம் மக்களும் மேற்படி விடுதலையைக் குதூகலத்துடன் கொண்டாடினர்.

1938-ம் ஆண்டில் ஆஸ்த்ரியா ஹிட்லரின் ஆட்சியில் ஜெர்மனியோடு சேர்ந்து விட்டது. 1945-ல் நாத்ஸியர்களிடமிருந்து ஆஸ்த்ரியாவை ருஷ்யத் துருப்புகள் விடுவித்தன. எனினும், அதன் பலனாக ஆஸ்த்ரியா சுதந்திரம் பெறவில்லை. அங்கு நாத்ஸியர் ஆதிக்கம் மறைந்து, இரண்டாவது மகா யுத்தத்தில் வெற்றி பெற்ற நேச தேசத் துருப்புக்களும் உள்ளே புகுந்து ருஷ்யாவுடன் ஒன்றுகூடி, ஆக்கிரமிப்பு ஏற்பட்டு விட்டது.

ஆனால் இப்போது அந்த வல்லரசுகள் ஆஸ்த்ரியாவில் தங்களுக்கு உள்ள ஆதிக்கத்தை விட்டுவிட முடிவு செய்துள்ளன. சென்ற மகா யுத்தத்துக்குப் பிறகு அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் இந்த நாலு வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து செய்த நல்ல காரியம் இது ஒன்றுதான்! மேற்படி வல்லரசுகளின் அபிப்பிராய பேதத்துக்கு விலக்கணமாக இருந்து வந்த ஆஸ்த்ரியாப் பிரச்னை இவ்வளவு திருப்திகரமாகத் தீர்ந்தது உலக சமாதானத்துக்கு நல்லதே யாகும்.

ஆஸ்த்ரியா விஷயமாக இப்போது வல்லரசுகளுள் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின்படி ஆஸ்த்ரியா நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பது நிபந்தனை. அதாவது எந்த வல்லரசுகளுடனும் கட்சி செய்து கொள்ளக் கூடாது என்பது.

ஐரோப்பாவில் தற்போது ஸ்விட்ஸர்லாந்தைத் தவிர ஐரோப்பாவைச் சேர்ந்த வேறு எந்த நாடும் இம்மாதிரி நடுநிலைமை வகிக்கவில்லை. அவைகள் அமெரிக்கா, பிரிட்டன் கட்சியிலோ அல்லது ருஷ்யாவின் கட்சியிலோ சேர்ந்து கொண்டுள்ளன. அதனால் ஐரோப்பாவை மாத்திரமல்ல, உலகத்தையே பாதிக்கக் கூடிய பிரச்னைகள் கட்சிப் போட்டி காரணமாகக் குழப்பப்பட்டு வருகின்றன. இந்தியா போன்ற நாடுகள் எந்தக் கட்சியிலும் சேரவில்லை. இது கட்சிப்பான்மை கொண்ட வல்லரசுகளுக்குப்பிடிக்கவில்லை. தங்கள் கட்சியில் சேராத நாடு தங்களுக்கு விரோதமானது என்ற மனப்பான்மையும் வல்லரசுகளிடையே நிலவி வருகிறது. இப்போது ஆஸ்த்ரியா நடுநிலைமை வகிப்பதற்கு வல்லரசுகள் இணங்கியிருப்பது மிகவும் முக்கியமாகும். உலகில் எந்தக் கட்சியிலும் சேராத நடுநிலைமை நாடுகளின் தொகை அதிகமாகும் பட்சத்தில், பல சர்வ தேசத் தகராறுகள் தீருவதுடன், 'உலக சமாதானம் ஏற்படுவதற்கான சூழ்நிலையும் உண்டாகும் என்பது நிச்சயம்.

ஜெர்மனிக்கு விடுதலை

மேல் பகுதி ஜெர்மனியும் இப்போது பூரண சுதந்திரம் பெற்று விட்டது. இதற்கு பிரிட்டன் அமெரிக்க வல்லரசுகள் முக்கிய காரணமாக இருந்து இதை முடித்தார்கள். மேற்கு வல்லரசுகள் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்காகவே, ஜெர்மனி தேசத்துக்கு இராணுவ உரிமையுடன் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்த்ரியாவைப் போல் தடஸ்தமாக ஜெர்மனி இருப்பதற்கில்லை. இந்தக் காரணத்தினால் கிழக்குப் பகுதி ஜெர்மனி மேற்குப் பகுதியிலிருந்து பிளவுபட்டே நிற்கும். ஆயினும் இப்போது அரசியல் நிபுணர்கள் தீவிரமாகச் சிந்தனை செய்து வருகிறார்கள்,–இரு பகுதி ஜெர்மனியையும் ஒன்றாகச் சேர்த்துவிட்டு, ஆஸ்த்ரியாவைப் போலவே தடஸ்தமாக ஜெர்மனியை வைத்து விடலாம்; இதற்கு ருஷ்யாவும் ஒப்புக் கொள்ளும். இரு சாராருக்கும் இதுவே நன்மையாகும் என்று. ஒருவேளை இப்படியும் முடிவாகலாம். ஜெர்மானிய மக்களுக்குத் தற்போது யுத்தவெறி இல்லை என்பது மாத்திரமல்ல, யுத்தத்தையே வெறுக்கிறார்கள். உற்பத்தித் துறையில் தற்போது முன்போலவே நல்ல நிலையை மறுபடி அடைந்து விட்டார்கள். ஆயினும் யுத்த யோசனைகளில் சேராமல் இருக்கவே பிரியப்படுகிறார்கள். ராணுவ முயற்சிகளில் மனம் செல்லவில்லை.

இரண்டு யுத்தங்களில் அடைந்த படிப்பினால் ஜெர்மானிய மக்களின் மனப்பான்மை இந்த நிலைமையை அடைந்திருக்கிறது. ஒருவிதமாகப் பார்த்தால், இதுவே மகத்தான வெற்றி ஆகும்.

அணுகுண்டு விஷயம்

வல்லரசுகளுக்கு ருஷ்ய சர்க்கார் சமீபத்தில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அணு குண்டு முதலிய ஆயுதங்களை

ஒழித்து எல்லா ராணுவ திட்டங்களையுமே குறைத்து விடுவதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டு அறிக்கை விட்டிருக்கிறார்கள். எல்லா நாடுகளிலுமே ராணுவச் செலவுகள் மிதமிஞ்சிப் போய் மக்களுக்கு வேண்டிய பல காரியங்கள் தடைபட்டுப் போனதாகத் தெரிகிறது. ஆனால் எல்லா அரசாங்கங்களுமே இப்போது வீண் செலவுகளைக் குறைப்பதற்குத் தயாராக இருக்கின்றன. எந்தக் காரணமாயினும் சரி, நல்ல முடிவுக்கு வந்தால் உலகத்துக்கு க்ஷேமம். வெகு சீக்கிரத்தில் வல்லரசுகளின் தலைவர்களே கூடிப் பேசப் போவதாகச் சொல்லி வருகிறார்கள். அமெரிக்காவும் ஒப்புக் கொண்டு விட்டது. ஆகையினால் பிசாசு குண்டுகளுக்குச் சீக்கிரத்தில் ஒரு முடிவு ஏற்படலாம்.

"நாம் நியாயமாக நடந்து கொண்டாலும் நம்முடைய விரோதிகள் மோசம் செய்து விடுவார்கள். திடீரென்று ஒப்பந்தத்தை மீறிப் புது ஆயுதங்களைப் பிரயோகித்து விடுவார்களே, இதற்கு என்ன செய்வது?" என்பது பெரிய ஆட்சேபணையாக இதுவரையில் இருந்து வந்தது. தற்போது ஞானோதயம் ஆனதாகத் தோன்றுகிறது. மிகத் தீவிரமான ஒரு ஆங்கிலப் பத்திரிகையே ஏப்ரல் 28-ந் தேதி கீழ்க்கண்டபடி சொல்லிற்று:—"ராணுவப் பிரயோகம் செய்வதில்லை என்று ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு, மோசம் செய்து பிரயோகித்தால் அப்போது அமெரிக்க அரசாட்சி கடுமையான முறையைப் பிரயோகிப்பதற்கு நல்ல காரணத்தைக் கொண்டு பிரயோகித்து விடலாம் அல்லவா? எந்தக் கட்சியார் மோசம் செய்தாலும் இது பொருந்தும்." இவ்வாறு அந்த ஆங்கிலப் பத்திரிகை எழுதியிருப்பது நல்ல சகுனம்.



திரு கா. பொ. இரத்தினம்

கவிஞருக்குப் பாராட்டு

சென்ற வாரம் 12-ந் தேதி கோயமுத்தூரில் நாமக்கல் கவிஞர் திரு ராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள திருக்குறளின் புது விரிவுரைக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. ராஜா முத்தையசெட்டியார் தலைமை வகித்தார். கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா புதுமுறைத் தென்னாட்டு வழக்கத்தின்படி 'பொன்னாடை' போர்த்தினார். மந்திரி ஸ்ரீ சுப்ரமணியம் ரூ. 1330 கொண்ட ஒரு பண முடிப்பைப் பொதுமக்கள் சார்பில் வழங்கினார்.

"நவில் தொறும் நூல் நயம்" என்றார் திருவள்ளுவர். அதற்கு இலக்கியமாக இருப்பது திருக்குறள்! அதைத்தான் எத்தனை பேர் எத்தனை விதங்களில் துய்க்கிறார்கள். எத்தனை பேர் உரைகள் எழுதியிருக்கிறார்கள். இப்பொழுது நாமக்கல் கவிஞர் தாம் கண்ட நயங்களை விளக்கித் தம்முடைய இந்த நூலை வெளியிட்டிருக்கிறார்.


நல்ல உணவை மெல்ல மெல்ல ருசி அதிகம் என்பது உணவு நிபுணர்களுக்கும் அலை மென்று சாப்பிட்டவர்களுக்கும் தெரியும். உண்மையை இடித்துச் சுருக்கித் தந்திருக்கிறார் திருவள்ளுவர். வாயில் போட்டு மெல்ல மெல்ல, அதனுடைய சுவை அதிகரிக்கும். இந்தப் பணியைச் செய்து தந்த நாமக்கல் கவிஞருக்கு யாரே நன்றி செலுத்த மாட்டார்!

திருவள்ளுவர் திருநாள்


வைகாசி அனுட நாள் நீண்ட காலமாகத் திருவள்ளுவர் திருநாளாகத் தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இம்முயற்சியில் இலங்கைத் தமிழ் மறைச் சங்கத்தின் தலைவர் பண்டித கா.பொ.இரத்தினம் அவர்கள் ஈடுபட்டுப் பெரும் பணியாற்றி வருகிறார். அவருடைய தீவிர முயற்சியினால் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தமிழகமெங்கும் வைகாசி அனுட நாள் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சிங்கப்பூர், சென்னை, திருச்சி, தில்லி முதலிய வானொலி நிலையங்களிலும் விசேஷ நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு ஒலி பரப்பப் பட்டன. அவருடைய வேண்டுகோளுக் கிணங்க இந்த ஆண்டிலும் வைகாசி அனுடத் தன்று (ஜூன் 4-ம் தேதி) தமிழ் நாடு முழுதும் திருவள்ளுவர் திருநாள் கோலாகலமாகக் கொண்டாடப் படும் என்று எதிர்பார்க்கிறோம்.

அந்த நாளை விடுமுறை நாளாக ஆக்க வேண்டுமென்று சிலருடைய அபிப்பிராயம். ஆனால் சர்க்கார் விடுமுறை நாட்களின் தொகை வரம்பு கடந்து போனதாகவும், வேலை செய்யாமலே இருப்பது தான் பெரியோர்களை மதிக்கும் முறை என்பது அல்ல என்றும், கவனிக்க வேண்டிய காரியங்களைக் கவனித்துக் கொண்டே பெரியோர்கள் நினைவை நன்றாகவும் அழகாகவும் கொண்டாடலாம் என்றும் கருதுகிறார்கள் போலத் தோன்றுகிறது. விடுமுறை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி விழாவைக் கொண்டாடுவோம்!

கான மயிலாட......வான்கோழி!




நல்ல குதிரை!



ராஜாஜி கூறிய யோசனையையே இலங்கை காங்கிரஸ் இப்போது தீர்மானமாக மேற்கொண்டுள்ளது

பம்பாயில் பருவ மழை!



பம்பாய் சர்க்காரின் பாஷைக் கொள்கையைப் பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

தீர்த்துவிட வேண்டியதுதான்!



கூண்டில் அடைத்துக் காப்பாற்ற முடியாது!

விடுமுறை நாளாகச் சர்க்கார் செய்தாலும் நமக்கு சந்தோஷமே!

தாயுமானவர் வித்யாலயம்

வேதாரண்யத்தில் சர்தார் வேதரத்தினம் அவர்களின் தீவிர முயற்சியின் பயனுகப் பல பள்ளிக்கூடங்கள் காந்தி மகான் காட்டிய ஆதாரக் கல்வி முறையில் நடந்து வருகின்றன. ஸ்ரீ தாயுமானவர் வித்யாலயம் அத்தகைய பள்ளிகளுள் ஒன்று. ஆதாரக் கல்வியில் தீவிர உணர்ச்சி கொண்டு வேலை செய்யும் சர்தார் வேதரத்தினம் அவர்களின் புதல்வர் திரு வே. அப்பாக்குட்டி இந்த வித்யாலயத்துக்குப் பிரதம நிர்வாகியாக இருந்து வருகிறார்.

இந்த வித்யாலயம் தொடங்கி ஒன்பது ஆண்டுகள் ஆகி விட்டன. அதன் ஒன்பதாவது ஆண்டு விழா கடந்த ஏப்ரல் 27-ந் தேதி யன்று வேதாரண்ய சமுதாய நல அதிகாரி அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது என்று அறிந்து மகிழ்கிறோம். கதம்பக் கலை நிகழ்ச்சிகளும், "கலையும் கடமையும்" என்னும் நாடகமும் மாணவர்களால் நடத்தப்பட்டன. சுமார் இரண்டாயிரம் பேர் வந்திருந்து விழாவினைப் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தார்கள்.

அகில உலகச் சிறுகதைப் போட்டி முடிவு

இரண்டாவது அகில உலகச் சிறு கதைப் போட்டியின் முடிவு வெளியாகி விட்டது என்பதையும், அந்தப் போட்டியில் பரிசு பெற்ற கதைகளில் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட கதையும் ஒன்று என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

"நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்" என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகையால் இரண்டாவது தடவையாக நடத்தப்பட்ட அகில உலகச் சிறு கதைப் போட்டி விவரங்கள் "கல்கி"யில் வெளியாகி யிருந்தது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தப் போட்டியை ஒட்டிப் பதினெட்டு நாடுகளிலிருந்து மொத்தம் ஐம்பத்தேழு கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, "நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூனு"க்கு அனுப்பப்பட்டன.

முதல் பரிசுத் தொகையான 5000 டாலருக்கு (ரூ. 22,500) உரிய வாக்குகள் எந்தக் கதைக்கும் கிடைக்காததால், போட்டி நிர்வாகிகள் அதை மூன்று பரிசுகளாகப் பிரித்தனர்.

அதன்படி முதல் பரிசுத் தொகையான 2000 டாலர், ஒவ்வொன்றும் ஐந்து வாக்குகள் வீதம் பெற்ற இரண்டு கதைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

இரண்டாவது பரிசுத் தொகையான 2000 டாலர், நாலு வாக்குகள் வீதம் பெற்ற நாலு கதைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மூன்றாவது பரிசுத் தொகையான 1000 டாலர், மூன்று வாக்குகள் வீதம் பெற்ற ஐந்து கதைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

மூன்றாவது பரிசு பெற்ற ஐந்து கதைகளில் ஸ்ரீ நிர்மல குமார் முஸ்தபி எழுதிய "பகைவன்" என்ற ஆங்கிலக் கதையும் ஒன்று.

இக் கதை, ஏற்கெனவே "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையால் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளில் நாலாவது பரிசான ரூ. 600 பெற்ற கதை என்பதையும் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

மேற்படி கதை சென்ற ஜனவரி மாதம் 16-ந் தேதி "கல்கி" இதழில் வெளியாயிற்று.

1951-ம் ஆண்டில் நடந்த அகில உலகச் சிறுகதைப் போட்டியில் ஓர் இந்தியக் கதை இரண்டாவது பரிசு (800 டாலர்) பெற்றதை அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

உலகப் பரிசுபெற்ற கதைகளின் பிரதிகள் கிடைத்ததும் அவை "கல்கி"யில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

சக்கரவர்த்தித் திருமகன்



69. ஜானகி ஆறுதல் அடைந்தாள்

மரத்தில் மறைந்திருந்து ஹனுமான் மிருதுவான குரலில் சீதையின் காதில் விழும்படி ராமனைப் பற்றி மதுரமாகப் பேசலானான்.

* * *

“ராஜா தசரதன் கோசல தேசத்தை ஆண்டான். அவனுடைய சேனை ரதங்களும் யானைகளும் குதிரைகளும் அடங்கிய பெரும் சேனை. புண்ணிய சீலன். மிகப் பெரும் காரியங்களைச் சாதித்தவன். சத்தியத்தைக் காத்தவன். பெரும் புகழ் பெற்ற அரசர்களுக்குள் முதன்மைப் பதவி அடைந்தவன். ரிஷிகளுக்குச் சமானமான குணமும் சீலமும் பெற்ற சக்கரவர்த்தி. தேவேந்திரனைப் போல் சாமர்த்தியம் அடைந்தவன். யாரையும் துன்பப்படுத்த மாட்டான். யாரையும் வெறுக்காதவன், யாருக்கும் தீமை செய்யாதவன். அவன் முயற்சிகள் எதுவும் வீணானதில்லை. ஆனபடியால் ‘சத்திய பராக்கிரமன்’ என்கிற பெயரை அடைந்த அரசன். இக்ஷ்வாகு குலத்து ஸ்ரீமான். அரசர்களுக்குள் ஏறு, பூமண்டல அதிபதி. சுகம் தருபவன், சுகமாக இருப்பவன். அவனுடைய நான்கு குமாரர்களில் மூத்தவன் ராமசந்திரன். பூரண சந்திரனைப் போன்ற முகத்தை யுடையவன். மிகுந்த அறிவாளி. ராமன் சிரேஷ்டமான பண்பு அடைந்து தனுர் வேதம் நன்றாகக் கற்று எல்லோராலும் விரும்பப்பட்டான். ராஜ்யத்திலுள்ள மக்களிடம் மிகுந்த அன்பு கொண்டவன். தருமத்தில் தளராத பற்றுடையவன். வீரன். பட்டத்துக்கு உரியவன். ஆயினும் முதுமையடைந்த தன் தகப்பனாரின் புகழும் பெயரும் சத்தியமும் மாசு அடையாதிருப்பதற்காகத் தன் மனைவி சீதையுடனும், தம்பியுடனும் ராஜ்யத்தை விட்டு வனம் சென்று அங்கேயே வசித்து வந்தான். அரண்ய வாசம் செய்யும்போது அநேக கொடிய ராக்ஷசர்களை எதிர்த்து ரிஷிகளைக் காப்பாற்றினான். கரன், தூஷணன் என்ற ராக்ஷச தலைவர்களையும் அவர்களுடைய பெரும் சேனையையும் வதம் செய்து அழித்தான். இதை யறிந்த ராவணன் பழி வாங்குவதற்காக மாய மான் வடிவத்தில் ஒரு ராக்ஷசனை ஏவி ராமனை ஏமாற்றி ராஜகுமாரர்கள் பக்கத்தில் இல்லாத சமயம் பார்த்து சீதையைப் பலாத்காரமாகத் தூக்கி எடுத்துக் கொண்டு போய் விட்டான். துயரம் அடைந்த ராமன் மனைவியைத் தேடிக் கொண்டு சென்றான். சுக்ரீவன் என்ற வானரனை அடைந்து அவனுடன் நட்பு செய்து கொண்டான். வாலி என்கிற வானர ராஜனைக் கொன்று தம்பி சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் சம்பாதித்துத் தந்தான். அந்த சுக்ரீவன் தன்னுடைய வானர வீரர்களைப் பூமண்டலம் முழுதும் சீதையைத் தேடும்படி அனுப்பினான். விரும்பிய வடிவம் எடுக்கும் திறமை கொண்ட வானர வீரர்கள் எல்லாத் திசைகளிலும், காணாமற்போன சீதையைத் தேடினார்கள். அவர்களில் நான் ஒருவன். சம்பாதியினிடம் பெற்ற துப்பைக் கொண்டு

ராஜாஜி



நான் நூறு யோஜனைக் கடலைத் தாண்டி இவ்விடம் வந்தேன். ராகவன் எனக்குத் தன் தேவியைப் பற்றிச் சொன்ன ரூபம், நிறம், லக்ஷணம் இவற்றுக்கெல்லாம் ஒத்த உருவத்தை இப்போது நான் காண்கிறேன்.''

இவ்வாறு மெதுவாகச் சொல்லி ஹனுமான் நிறுத்திக் கொண்டான்.

இந்த மதுரமான சொற்கள் — யாராலோ எங்கிருந்தோ சொல்லப் பட்டதைக் கேட்டு ஜானகி வியப் படைந்தாள். மகிழ்ந்தாள். நாலா பக்கமும் பார்த்தாள். யார் இப்படி மிக இனிய குரலில் மிக இனிய விஷ யங்களைப் பண்பட்டுத் தெளிந்த பாஷையில் பேசினது என்று நாலா பக்கமும் மேலும் கீழும் பார்த்தாள். பேச்சுக்கு ஒத்த மனித உருவம் எங்கும் காணவில்லை. மேலே மரத்தில் ஒரு அழகிய வானரத்தைத்தான் கண்டாள்.

நிகரற்ற புத்திமானும் வானர ராஜனுக்கு மந்திரியுமான வாயு புத்திரன் பால சூரிய தேஜஸ் கொண்ட சிறு வானர வடிவமா யிருந்தவனைப் பார்த் தாள், ஜானகி. வாசகர்களே! ஜானகி யின் பார்வை ராமதூதன் பேரில் பட் டதும் அவனுடைய மகிழ்ச்சியை நீங்கள் கற்பனா சக்தியைக் கொண்டு உணர்வீர்களாக! உணர்ந்தால் உங்கள் உள்ளம் நிர்மலமான கோயிலாகும். உங்கள் எல்லாத் துக்கமும் தீரும். உங்கள் உள்ளத்தில் இடம் கிடைக் குமோ என்று சமயம் பார்த்துக் கொண் டிருக்கும் நாராயணன் தன் பாற்கடலையும் விட்டு வந்து உங்கள்

உள்ளத்தில் புகுவான். நம்முடைய உள்ளங்களே அவனுக்குப் பாற்கடல் பள்ளியாகும்,

"அங்கு அனந்தன் அணைக்கிடக்கும் அம்மான்,
அடியேன்மனம்தன் அணைக்கிடக்கும்வந்து"

என்று முதலாழ்வார் பாடியபடி.

• • •

ஹனுமானைப் பார்த்த ஜானகி, 'இதென்ன நான் கேட்ட சொற்களும் காணப்படும் உருவமும் எல்லாம் கனவாகத்தா னிருக்க வேண்டும். எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கும் எண்ணங்கள் கனவில் காணப்படுமல்லவா? நான் தியானித்துத் தியானித்து வந்த என் பிராணநாதனுடைய கதையை யாரோ சொல்லுவதுபோல் காதில் படுகிறது. இது உண்மையாக இருக்காது. கனவே.—கனவில் குரங்கின் உருவம் பார்த்தால் பந்துக்களுக்குக் கெடுதி நேரும் என்கிறார்களே! ராமனுக்கு மங்களம் ஆகுக! லக்ஷ்மணனுக்கு மங்களம் ஆகுக! மிதிலையில் எல்லோரும் க்ஷேமமாக இருக்க வேண்டும்.—இல்லை, இல்லை! இது கனவல்ல! இன்னும் அதே உருவம் ஸ்திரமாகத் தெரிகிறது. காணும் காட்சி இடமாகவும் இருக்கிறது. கனவல்ல. தவிர நான் எங்கே தூங்கினேன்? தூங்கினால் அல்லவோ கனவு காணுவேன். இது கனவல்ல. உண்மையே. ஓ தேவர்காள்! உண்மையில் இந்த வானரம் என் பிராண நாதனிடமிருந்து வந்த தூதனா? அப்படியே ஆகுக. வாக்கினுக்குத் தேவனான வாசஸ்பதியே, உன்னை வணங்குகிறேன். அக்னி பகவானே, உன்னை வணங்குகிறேன். சுவயம்புவே, உன்னை வணங்குகிறேன். தேவர்களே! என்னைக் காப்பாற்றுவீர்களாக. இவன் ராமதூதனே ஆகுக' என்று எல்லா தேவர்களுக்கும் பிரார்த்தனை செலுத்தினாள்.

ஜானகியைக் கண்ட மகிழ்ச்சியால் ஹனுமான் திவ்விய மங்கள தேஜஸுடன் பொலிந்தான். கீழே இறங்கி சீதைமுன் கைகூப்பி வணங்கி நின்றான்.

"தாயே! தாமரை யிதழ்களைப் போன்ற உம்முடைய கண்ணிதழ்களி னின்று தண்ணீர்த் துளிகள் விழுகின்றனவே! யார் நீர்? கண்ணீர் விட்டு மரக் கிளைமேல் சாய்ந்து துயரம் படர்ந்த முகத்தோடு நிற்கிறீர், நீர் தேவகன்னியா? நாக கன்னியா? உம்முடைய தேககாந்தியைப் பார்த்து இப்படிக் கேட்கிறேன். சந்திரனிடமிருந்து பிரிந்து வந்த ரோஹிணி தேவியா? வசிஷ்ட பகவானோடு ஏதேனும் வித்தியாசப்பட்டு இறங்கி வந்த அருந்ததியா? கவனித்துப் பார்த்தால் மானுட ஸ்திரீயாகவே காணப்படுகிறீர். ராஜகுமாரியாகக் காணப்படுகிறீர். தயவு செய்து நீங்கள் யார் என்று சொல்லுவீர். மங்களம்! மங்களம்! ராவணனால் ஜனஸ்தானத்திலிருந்து பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு வரப்பட்ட சீதா தேவியா நீர்? ராமசந்திரன் மனைவி சீதையைப் பார்க்கும் பாக்கியம் பெற்றேனா?" என்று ஹனுமான் தன்னுடைய மதுர ஸ்வரத்தில் வணங்கிக் கேட்டான்.

சீதை பரவசமானாள். "அப்பனே! நான்தான் சீதை. விதேஹ ராஜனுடைய புத்திரி. ராமசந்திரனுடைய பாரியை. பன்னிரண்டு வருஷம் சகல சுகங்களையும் அவனுடன் அயோத்தியில் அனுபவித்தேன். பதின்மூன்றாம் வருஷம் சக்கரவர்த்தியானவர் அவருடைய மூத்தகுமாரனாகிய என் ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்தார். அப்போது மகாராஜாவினுடைய இளைய தேவி



கைகேயி தன் மகனுக்குப் பட்டம் கொடுக்க வேண்டும், ராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட வேண்டும், இல்லாவிடில் உணவு உண்ண மாட்டேன், தண்ணீர் அருந்த மாட்டேன், உயிரை விடுவேன் என்று ஹடம் செய்து வற்புறுத்தினாள். முந்தி கைகேயிக்குக் கொடுத்திருந்த வாக்குப்படி அரசன் அவள் பிடிவாதம் பண்ணிக் கேட்டதற்கு ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. மகாராஜன் ராஜ்யத்தைப் பரதனுக்குக் கொடுத்து விடு என்று ராமனைக் கேட்டுக் கொண்டான். ராமன் ஒரு க்ஷணமும் தாமதிக்கவில்லை. 'தகப்பனார் தந்த வார்த்தையைச் சத்தியமாக்குவதே என் பாக்கியம், ராஜ்ய போகத்தை விடத் தந்தையைச் சத்திய சந்தனாக்குவதே என் ஆசை, என் சந்தோஷம்' என்று ராஜ்யத்தைப் பற்றிய எண்ணத்தை உடனே முற்றிலும் துறந்து விட்டு வனம் சென்றான். புருஷன் வனம் சென்றால் நான் பிரிந்திருக்க முடியாது, நானும் கூடவே வனம் செல்வேன் என்று வற்புறுத்தினேன். முந்தியே தம்பி லக்ஷ்மணன் மரவுரி தரித்து அண்ணனுக்குத் துணையாக வனம் போக நிச்சயித்து விட்டிருந்தான். மூவரும் வனம் சென்றோம். தண்டகாரண்யத்தில் வசித்து வந்தோம். ஒரு நாள் துராத்மாவான ராவணன் வந்து என்னைப் பலாத்காரமாகத் தூக்கி இவ்விடம் இந்த அசோக வனத்தில் சிறை வைத்திருக்கிறான். பன்னிரண்டு மாத கால வரை வைத்திருக்கிறான். இன்னும் இரண்டு மாத காலம் மிகுதி யிருக்கிறது. அது முடிந்தவுடன் என் உயிரை நீப்பேன்" என்றாள், துக்கத்துக்கு மேல் துக்கமாக வந்து திக்கற்று நின்ற பிராட்டி.

இவ்வாறு ஹனுமான் சொன்னதும் ஜானகி சொன்னதும் இரண்டு சிறிய அத்தியாயங்களில் வால்மீகி ராமாயணத்தில் பாடப் பட்டிருக்கிறது. பெரிய கதையை ஆஞ்சனேயனுடைய வாயாலும் ஜானகியின் வாய் மொழியாகவும் வால்மீகி முனிவர் உலகத்தை அளந்த திரிவிக்ரமன் பலியினிடம் வாமன வடிவம் எடுத்துச் சென்றது போல் அழகிய சிறிய உருவத்தில் தந்திருக்கிறார். ஆஞ்சனேயனும் பிராட்டியுமே நமக்கு ராமாயணம் சொல்லுகிறார்கள், நமக்கு வேறு என்ன பாக்கியம் வேண்டும்? ஹனுமான் சொன்ன இந்த ராம கதையை, ஜானகி சொன்ன இந்த ராம கதையை பக்தியோடு படித்து வாமனன் மகாபலிச் சக்கரவர்த்தியை வசப்படுத்தி அவன் அகங்காரத்தினின்று அவனைக் காத்ததுபோல் நம்முடைய அகங்கார மமகாரங்களினின்று நாமும் காக்கப் படுவோமாக.

* * *

"பன்னிரண்டு மாதத் தவணையில் இரண்டு மாத காலம் மிஞ்சி யிருக்கிறது. அது முடிந்ததும் என் உயிரும் முடிவு அடையும்" என்று சீதை தன் கதையைச் சொல்லி முடித்தாள்.

துக்கத்தில் மூழ்கி இப்படிப் பேசிய சீதைக்கு ஹனுமான் ஆறுதல் தரும் படியான வார்த்தைகள் சொன்னான்:

"வைதேஹி! உத்தமர்களுக்குள் உத்தமன், வீரர்களுக்குள் வீரனான ராமன், சக்கரவர்த்தித் திருமகன் உமக்கு க்ஷேமத்தைச் சொல்லியனுப்பி யிருக்கிறான். அவன் அன்புக்குப் பாத்திரமான தம்பி, உம்முடைய நிலையை நினைத்து நினைத்து இடைவிடாமல் துயரப் பட்டுக் கொண்டிருக்கும் லக்ஷ்மணனும் தன்னுடைய வணக்கத்தைச் சொல்லச் சொல்லி என்னை அனுப்பி யிருக்கிறான்" என்றான்.

ராம லக்ஷ்மணர்களுடைய பெயர்களையும் அவர்கள் சொல்லியனுப்பிய நற் செய்தியும் கேட்ட சீதையினுடைய உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கிற்று.

"ஆகா! என்ன சந்தோஷம் அடைந்தேன். உயிரை வைத்திருந்தால் என்றைக்காவது நன்மையை அடையலாம், விட்டு விட்டால் அது இல்லை என்று பாமர ஜனங்கள் சொல்லுவதின் உண்மையை இப்போது உணர்ந்தேன்" என்றாள் சீதை.

திடீர் என்று, முன்பின் அறியாத இருவருக்கும் அற்புதமான நம்பிக்கையும் பிரியமும் உண்டாயிற்று. ஹனுமான் தன்னுடைய ஆனந்த பரவசத்தாலும், அவளுடைய துக்கத்தை எப்படியாவது தீர்த்துத் தைரியம் உண்டாக்க வேண்டுமென்கிற கருத்தைக்



கொண்டும் சீதைக்குப் பக்கமாக அணுகி நின்றான்.

திடீர் என்று சீதை மறுபடியும் பயந்து போனாள். ஹனுமானுடைய சொற்களைக் கேட்டு உண்டான நம்பிக்கையை இழந்து சந்தேகத்தால் மறுபடியும் பீடிக்கப் பட்டாள். மரக் கிளை மேல் சாய்ந்திருந்தவள் அதை விட்டு விட்டுக் கண்ணை மூடிக் கொண்டு விலகி உட்கார்ந்தாள். ஹனுமான் இதைக் கண்டு மிக வினயமாகக் கை கூப்பிய வண்ணம் நின்றான்.

"நான் ஏமாந்தேன். நீ ராவணனே! முன் சந்நியாசி வேஷம் பூண்டு வந்து வஞ்சித்தாய். இப்போது மற்றொரு வேஷம் பூண்டு வந்து ஏதோ பேசுகிறாய். இதுவெல்லாம் உனக்கு நன்மையல்ல. இப்படி என்னை வருத்தாதே, ராவணா! துக்கத்தில் மூழ்கி அன்ன ஆகாரமின்றியிருக்கும் என்னை மாயங்கள் செய்து தொந்தரவு செய்யாதே! உனக்கு இது நல்லதல்ல. விலகிப் போ!" என்றாள் ஜானகி.

பிறகு மறுபடியும் யோசிக்கலானாள். 'இல்லை, இல்லை. இவனைப் பார்த்தால் எனக்கு அடக்க முடியாத பிரீதியும் நம்பிக்கையும் உள்ளத்தில் உண்டாகிறது. இவன் பகைவனாக இருக்க முடியாது. இவனை நான் சந்தேகித்தல் தகாது.' இவ்வாறு யோசித்து,

"வானரமே! உண்மையில் நீ ராமனிடமிருந்து வந்த தூதனா? உனக்கு மங்களம் ஆகுக! ராமனைப் பற்றிச் சொல்லுவாய். நான் உள்ளம் குளிரக் கேட்கின்றேன்!" என்றாள்.

உடனே மீண்டும் சந்தேகத்தில் மூழ்கினாள். 'பிரமை பிடித்து இப்படி நற்செய்தி வந்ததாக எண்ணுகிறேனா? கனவா? மகிழ்ச்சி தரும் இந்தக் கனவைக் காண்கிறேன். இந்தக் கனவு தீர்ந்து போகுமா? எனக்கு ஆசை காட்டித் துயரம் உண்டாக்குவதற்கே இப்படிக் கனவு வந்திருக்கிறதா? சித்தப் பிரமையால் இப்படியெல்லாம் காண்கிறேனா? இல்லை, சரியாகத்தானே எல்லாம் எண்ணி யோசித்து உணர்ந்து பேசி வருகிறேன். பிரமை பிடித்த நிலையில் இல்லை. நல்ல நினைவில் தான் இருக்கிறேன். ஆனால் நூறு யோஜனைக் கடலைத் தாண்டி விட்டு இங்கே வந்தேன் என்கிறான், இவன். இது உண்மையாயிருக்க முடியாது. இவன் ராவணனே!' என்று மனத்தில் தீர்மானித்துக் கொண்டு ஹனுமானைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

ஹனுமான் சீதையின் பயத்தையும் சந்தேகத்தையும் உணர்ந்தான். அரக்கனால் வஞ்சிக்கப்பட்டவள் இப்படிப் பயப்படுவதும் சந்தேகப் படுவதும் இயற்கையே என்று கண்டான். என்ன செய்வது என்று யோசித்து உடனே தீர்மானித்தான். 'இவளுடைய உள்ளத்தில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் உண்டாக்க வேண்டும். ராமனுடைய நற்குணங்களை எடுத்து இவள் காதில் படும்படியாகத் துதிப்பேன். அந்த இனிய மொழிகள் தாமாகவே இவளுடைய பயத்தையும் சந்தேகத்தையும் போக்கும்' என்று எண்ணிப் பேசலானான்.

"சூரியனுடைய தேஜஸ் பெற்ற ராமன், குளிர்ந்த சந்திர தரிசன இன்பத்தை மக்களுக்குத் தன் தரிசனத்தால் கொடுக்கும் ராமன், பூமியை ஆளும் அரசர்கள் அனைவரும் குபேரனைப் போல் மதிக்கும் ராமன், மகாவிஷ்ணுவைப்போல் பராக்கிரமம் பெற்ற ராமன், பிருகஸ்பதிக்குச் சமமான அறிவும் மன்மதனுக்கு ஒரு மன்மதனைப் போன்ற அழகு கொண்ட ராமன், உண்மையும் மதுரமும் கலந்த பேச்சை எப்போதும் பேசும் ராமன், நியாயமும் இடமும் பார்த்தே கோபம் கொள்ளும் நிகரற்ற வீரன் ராமன் அனுப்பிய தூதன் நான். அரக்கனை

மானைக் காட்டி வஞ்சித்து உம்மைத் தனிப்படுத்தி விட்டு அந்த சமயத்தில் பலாத்காரமாக உம்மை ராவணன் பிடித்து எடுத்து வந்து விட்டான். இந்த அக்கிரமத்தின் பயனை ராவணன் சீக்கிரம் அடைவான். அதை உம் கண்ணால் பார்ப்பீர். சீக்கிரத்தில் ராம லக்ஷ்மணர்களுடைய பாணங்கள் பாய்ந்து வந்து லங்கையை எரிக்கப் போகின்றன. அரக்கர்கள் கூட்டத்தையும் ராவணனையும் அழித்து நிர்மூலம் செய்வதைக் காண்பீர். ராமனால் அனுப்பப்பட்டு உம்மிடம் வந்திருக்கிறேன். உம்முடைய க்ஷேமத்தைத் தெரிந்து கொண்டு போக வந்திருக்கிறேன். உம்முடைய க்ஷேமத்தை ராமசந்திரனுக்காக நான் வணக்கமாக விசாரிக்கிறேன். லக்ஷ்மணனுக்காக அவன் வணக்கத்தை உமக்குச் செலுத்துகிறேன். வானர ராஜன் சுக்ரீவனுக்காக உமக்கு வணக்கம் செலுத்துகிறேன். ராம லக்ஷ்மண சுக்ரீவர்கள் இடைவிடாமல் உம்முடைய நினைவாக இருக்கிறார்கள். உயிருடன் நீர் இருப்பதைப் பார்த்தது என்னுடைய பாக்கியம். இனி தாமதமில்லை. சீக்கிரத்தில் ராமனும் லக்ஷ்மணனும் சுக்ரீவனும் வானர சேனையும் லங்கையில் வந்து இறங்குவார்கள். சுக்ரீவனுடைய அமைச்சன் நான். ஹனுமான் என்பது என் பெயர். கடலைத் தாண்டிக் குதித்து லங்காபுரியில் இறங்கியிருக்கிறேன். துராத்மாவான ராவணனுடைய தலைமேல் என் காலை வைத்தேன் என்று எண்ணுவீராக. என் பராக்கிரமத்தால் கடலைத் தாண்டி உம்மைப் பார்க்க வந்த ராம தூதன் நான். என்னைச் சந்தேகிக்க வேண்டாம். தேவி, என் இவ் வார்த்தையை நம்புவீராக" என்று ஹனுமான் கண்களில் நீர் ததும்பச் சொன்னான்.

இப்படி ஹனுமான் பேசிய இனிய மொழிகள் சீதையின் பயத்தைக் கரைத்து விட்டன. தைரியமும் நம்பிக்கையும் கொண்டாள்.

"வானரனே! நான் சந்தேகித்ததைக் கண்டு நீ வருத்தமடையக் கூடாது. வஞ்சக அரக்கர்களால் மோசம் செய்யப்பட்ட நான் இப்படிப் பயப்படுகிறேன். ராமனிடமிருந்து வந்த நண்பனே, நீ எப்படி ராமனைச் சந்தித்தாய்? ராஜ குமாரனான ராமன் வானரர்களை எப்படி நட்பு கொண்டான்? இந்தச் சரித்திரத்தை விவரமாகச் சொல்லுவாய்" என்றாள்.

மறுபடியும் ஹனுமான் அவளுடைய நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்ய ராம லக்ஷ்மணர்களுடைய குண விசேஷங்களையும் சீலத்தையும் ரூப லக்ஷண சம்பத்தையும் வர்ணித்தான்.

"உலகத்தையெல்லாம் தன் அன்பினால் ஆட்கொள்ளும் ராமன் என்னையும் என்னுடைய அரசன் முதலான வானரர்களையும் வசீகரித்ததில் என்ன வியப்பு?" என்றான்.

பிறகு விஸ்தாரமாக நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவளுக்கு எடுத்துச் சொன்னான். வாலிக்கும் சுக்ரீவனுக்கும் இருந்த பகை, எவ்வாறு ராம லக்ஷ்மணர்களை முதலில் சுக்ரீவன் சந்தித்தான், அவர்கள் எப்படி நண்பர்களானார்கள், வாலியை வதம் செய்து அவனுக்கு வானர ராஜ்யம் சம்பாதித்துத் தருவதாக ராமன் வாக்களித்தது, சீதை கீழே போட்ட ஆபரணங்களை வானரர்கள் எடுத்து வைத்திருந்தது, ராமனுக்கு அவற்றைக் காட்டியது, அவற்றைக் கண்டதும் அவனுடைய துக்கம் இரு மடங்கானது, சுக்ரீவனுடைய பட்டாபிஷேகம், மழை காலம் முடிந்ததும் வானரப் படை பூமண்டலம் முழுதும் தேடிப் போனது, தெற்கே சென்ற அங்கதன் முதலானோர் சீதையைக் காணாமல் பிராயோபவேசம் செய்யத் தீர்மானித்தது, சம்பாதியைக் கண்டு அவனிடம் உறுதியான துப்பு அடைந்தது, அதன் பின் தான் கடலைத் தாண்டி வந்தது, தான் ராவணனுடைய அந்தப்புரம் எல்லாம் தேடியது, இவை எல்லாவற்றையும் சொன்னான். எல்லா நிகழ்ச்சிகளையும் சொல்லி விட்டு, தான் கொண்டு வந்திருந்த கணையாழியையும் அவளுக்குத் தந்தான்.

சீதை மோதிரத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு ஆனந்த பரவசமானாள். இது ஒரு ராவணன் மோசமோ அரக்கர் மாயமோ என்கிற பீதி முற்றிலும் ஒழிந்து, ஹனுமானிடம் பரிபூரண நம்பிக்கையும் அளவு கடந்த பிரியமும் அடைந்தாள்.

"அப்பனே! நான் எப்படிப்பட்ட தவறு செய்தேன்! உன்னையா சந்தே

இத்தேன்!" என்று தன்னை நொந்து கொண்டாள்.

வாயு புத்திரனான ஹனுமான் தான் யார் என்பதையும் தன் பிறப்பைப் பற்றியும் எடுத்துச் சொன்னான். "வாயு பகவானுடைய அனுக்கிரகம் பெற்ற நான் என் சாமர்த்தியத்தை நானே சொல்லிக் கொள்ளக் கூடாதாயினும் உம்முடைய துக்கத்தைத் தீர்ப்பது அவசியம். அதற்காகச் சொன்னேன். வானர வீரர்களும் படையும் வந்து அரக்கனையும் அவன் ராஜ்யத்தையும் வெகு சீக்கிரத்தில் நிர்மூலம் செய்து விடப் போகிறார்கள். நான் திரும்பிப் போய் விஷயத்தைச் சொல்ல வேண்டியதுதான் தாமதம்" என்று சொல்லி தேவியின் பிரிவால் ராமன் படும் துக்கத்தையும் அவன் விரத வாழ்க்கையைப் பற்றியும் ஜானகியின் மனம் உருகும்படி எடுத்துச் சொன்னான்.

சீதை தன் துக்கத்தையும் மறந்து ராமனுடைய துயரத்தைப் பற்றி வருந்தலானாள்.

பாலசந்தரின் வீணைக் கச்சேரி

"சுப்புடு"

ஆதௌ கீர்த்தனாரம்பத்தில் பாலசந்தர் சித்தார் வாசித்துக் கொண்டிருந்தார். அபூர்வ முறையில் கர்நாடக சங்கீதத்தை அதில் கொண்டுவர முயற்சித்து ஓரளவு வெற்றியும் கண்டார்.

அப்போதெல்லாம் இந்த மேதை வீணையைக் கையாண்டு வெற்றியின் சிகரத்தை எட்டக் கூடாதா என்று ஏங்கியதுண்டு.

என் ஏக்கம் வீண் போகவில்லை; ஏப்ரல் மாதம் 23-ந் தேதி தில்லியில் ஷண்முகானந்த சங்கீத சபையின் ஆதரவில் ஸ்ரீ பாலசந்தரின் வீணைக் கச்சேரி நடந்தது. பாலசந்தர் வீணை வாசிக்கிறார். அசுர சாதகம் செய்திருக்கிறார். வாத்தியம் சொன்னபடி கேட்கிறது என்பதை விடக் கேட்டாக வேண்டும் என்று சொல்லலாம்.

ஏகம், திஸ்ரம், சதுச்ரம், மிச்ரம், சங்கீர்ணம் எல்லாம் ராவணன் தர்பாரில் கைகட்டி நிற்கும் பஞ்சபூதங்கள் போல் குற்றேவல் புரியக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு மீட்டிலும் அதிகாரம் த்வனிக்கிறது. மனத்தினாலும் ஸ்மரிக்க முடியாத சங்கதிகள் அனாயாசமாய்ப் பேசுகின்றன. விரல்கள் ஜாலங்கள் புரிகின்றன. படேகுலாம் அலிகான் போல் பல்டி நிரவல்கள் ஸர்க்கஸ் வேடிக்கைகள் செய்கின்றன.

எல்லாம் சரிதான். ஆனால், கர்நாடக சங்கீதமே இவ்வளவுதானா? வெறும் வித்தைக்காரன் மூட்டையா? மேடை மீது ஏதோ குல்மால் வேலை நடக்கிறது என்று சபையோர் ஒரு குஸ்திப் பந்தயத்தின் பயனை அனுபவித்ததுதான் மிச்சம்.

பாலசந்தர் மனது வைத்தால் சம்பிரதாய சுத்தமாய் வாசிக்க முடியும் என்பதை அவர் வாசித்த பைரவி நிரூபித்தது. சபையோர்கள் சொக்கிப் போனார்கள்.

ஆனால் அவரது இந்த மனநிலை தாற்காலிகமாகத்தான் நிலைத்தது.

பல்லவி; பழைய பாலசந்தரையே காட்டியது. சதுச்ரஜாதி அடதாளத்தில் பல்லவி. பேருக்குப் பக்கவாத்தியக்காரர்களை வைத்துக் கொண்டு, மனோதர்மம், கற்பனை என்ற பெயரில் புரியா ஸ்வரப்பிரஸ்தாரங்களில் மூழ்கி, ஒருவருக்கும் விளங்காமல் உயிரை விடுவது எந்த பகவானுக்கு ப்ரீதி என்று கேட்கிறேன்?

இடையில் ரஸமான சம்பவம் ஒன்று. பல்லவி கெரடான வழியில் சென்றதாலும், கற்பனை காலப்பிரமாணத்தை மிஞ்சி விட்டதாலும் இடம் இழுப்பில் வந்து விட்டது. பழி, தாளம் போட்ட சபா பாகவதர்மேல் விழுந்தது வழக்கம் போல். ராமநாதபுரம் ஈஸ்வரன் "கெட்டியாக"த் தாளம் போடச் சம்மதித்தார். ஆனால் சந்தேகத்துக்கு இடமில்லாமல் சபை அறிய "தாளம் போடுகிறேன்! ஓடாதே" என்று சொல்லி விட்டுத்தான் தாளம் போட ஆரம்பித்தார். மிகுந்த மன வருத்தத்துடன் வீடு திரும்பினேன்.

பாலசந்தர் ஒரு மேதை; மறுக்க முடியாத உண்மை.

ஆனால் குறுக்கு வழிகளில் புகுந்து இவர்கள் புகழ் தேட முயற்சிக்கும்போது ரஸிகர்களின் மனம் புண்ணாகி விடுகிறது.

இது ஒரு அவசர உலகம். நின்று நிதானித்துச் செய்ய யாருக்கும் அவகாசமில்லை. அது நமது கர்நாடக சங்கீதத்தையும் பாதித்திருக்கிறது.

"அசுர சாதகம் ஐயா" என்று எல்லாரும் மூக்கின்மேல் விரலை வைக்கிறார்கள்.

நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் நான் அசுர சாதகம் செய்து மூக்கினால் சாப்பிடுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த அசுர சாதகம் வேண்டுமா, கேட்கிறேன்.

மனது வைத்தால் உலகம் வியக்கும் முறையில் கர்நாடக சங்கீதத்தின் சிகரத்தை அடையும் ஆற்றலை பாலசந்தருக்கு ஆண்டவன் அளித்துள்ளான். நல்ல வழியில் நன்மை பயக்க நாரணன் அருளட்டும்!



வெள்ளித் திரை

ஆஸாத்

ஸோமாஸ்

எல்லோரும் பார்த்து ரஸிக்கும்படியான எல்லா அம்சங்களையும் கொண்ட ஒரு நல்ல தமிழ்ப்படம் சென்ற வருஷம் திரையிடப்பட்டு எல்லா ஊர்களிலும் சக்கைப் போடு போட்டு விட்டது. பிரசித்தி பெற்ற டைரக்டரும் படாதிபதியுமான ஸ்ரீ எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு தயாரித்த "மலைக்கள்ளன்" படத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

நாமக்கல் கவிஞர் எழுதியது "மலைக்கள்ளன்" கதை. கள்ளன் என்ற பெயரில் ஒரு கண்ணிய மானவனை, பரோபகாரியை, நிரலை அறிமுகம் செய்து வைக்கிறார் கவிஞர்.

மனிதர்கள் கலபத்தில் நுழைய முடியாத மலைக் காட்டில் வாழும் மர்ம மனிதனை மலைக்கள்ளன், மனித இதயம் கொண்டவன்; கல்லாயிருக்க வேண்டிய அவன் உள்ளத்தில் கனிவும் கசிவும் ததும்பி வழிந்தன; ஏழைபடும் பாட்டைக் கண்டு கரைந்த அவன் இளகிய நெஞ்சம் அவர்களுக்கு நேரும் இடர்களைக் களையவும் முனைந்து நின்றது; அபலைகளுக்கு இடர் விளைவிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, கொலை, களவுகளுக்கு அஞ்சாத பாதகர்களின் பாதையில் நெரிஞ்சி முள்ளாக இருந்தான்; போக்கிரிகளைத் தண்டிப்பதில் போர் வீரனாயிருந்தான்; போலீஸ் இலாக்காவுக்கு ஒரு புரியாத புதிராக இருந்தான்; பொது மக்களின் கற்பனையில் பொல்லாத கள்ளனாயிருந்தான்; அவன் மாமன் மகள் பூங்கோதையின் உள்ளம் கவர் கள்வனாகவும் இருந்தான்; காட்டுப் பாதையில் வழித்துணைவனாகவும் இருந்தான்; காதல் பாதையிலும் உண்மைக் காதலனாயிருந்தான்.

மலைக் கள்ளன் (ஆஸாத்), பூங்கோதைக்கு நேர்ந்த பேராபத்துக்களை யெல்லாம் தவிடு பொடியாக்கி அவளைத் தப்புவிக்கிறான்; அப்துல் ரஹீம் சாஹிபுவாகத் தோன்றி அயோக்கிய சிகாமணிகளைக் கைது செய்ய உதவுகிறான்.

பல வீரதீர சாகஸச் செயல்களுக்குப் பின்னர் இத் திரைப்படக் கதையில் பல மர்ம முடிச்சுகள் அவிழ்கின்றன. கதை சுபமாக முடிகிறது.

மேற்படி பிரபல "மலைக்கள்ளன்" படத்தின் ஹிந்தி உருவம் தான் "ஆஸாத்."

மலைக்கள்ளன் பெயர் ஆஸாத்தாக மாறினதும், பூங்கோதையின் பெயர் ஷோபாவாக மாறி யிருக்கிறது. இதேமாதிரி, வீரராஜன், காத்தவராயன், சொக்கேச முதலியார் என்னும் பெயர்களும்—கர்தர், சுந்தர், சரண் தாஸ், ஜாகிர்தார் என்று மாறி ஹிந்திப் படத்தைத் தத்ரூபமாக்க உதவுகின்றன. அப்துல் ரஹீம் சாஹிபு, இதில் கான்சாஹிப் என்று மாறி யிருக்கிறார்.

"மலைக்கள்ளன்" படம் பார்த்தவர்கள், ஆஸாத்தை எப்படி வரவேற்பார்கள் என்று சொல்ல வேண்டியதே இல்லை. தமிழ் மொழியின் நளினத்தையும் குழைவையும் இந்த ஹிந்தி வெளியீட்டில் எதிர்பார்க்க மாட்டார்கள்.

"ஆஸாத்"தில், ஆஸாத்தாக நடித்திருப்பவர் ஸ்ரீ திலீப் குமார். கதாநாயகி கவர்ச்சி மிகுந்த ஹிந்தி நடிகை மீனாகுமாரி; மற்றும் ஷாம்மி, அசலா சசாதேவ், ஓம்பிரகாஷ்-முதலான நட்சத்திர நடிகர்கள் இப் படத்தில் பங்கெடுத்துக் கொண்டு படத்துக்கு மகத்தான வெற்றியளித்திருக்கின்றனர்.

வடநாடெங்கும் "ஆஸாத்" படம் மிகவும் வெற்றிகரமாக, ரஸிகப் பெருமக்களின் பேராதரவைப் பெற்று, பல தியேட்டர்களில் ஓடுகிறது. சமீப காலத்தில் ஸ்ரீராமுலு நாயுடுவைப் போல் வட நாட்டில் எந்தத் தமிழ்ப் படாதிபதியும் இத்தகைய வெற்றியைப் பெற்றதில்லை என்றே கூறலாம்.

எத்தனையோ தமிழ்ப் படங்கள் சிறந்த கலை நுணுக்க அம்சங்களுடன் தயாரிக்கப் பட்டிருக்கும், கைதேர்ந்த புகைப்பட நிபுணர், ஒலிப்பதிவாளர் முதலிய திரைப்பட வெற்றிக்கு இன்றியமையாத கலைஞர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் திறமையைக் காட்டியும், பொது மக்களின் வரவேற்பைப் பெற முடியாமல் ஒரேயடியாகப் 'பணால்' ஆகி யிருக்கின்றன.

அனேக படங்கள் பல அம்சங்களில் சிறந்து விளங்கி, நாடெங்கும் நல்ல படம் என்று புகழ்க் கொடி நாட்டி யிருக்கலாம். ஆனால்

மேற்படி படம் நல்ல பெயருடன் முதல் வாரத்திலேயே நிறுத்தப் பட்டிருக்கும். ஆனால் புகழ்க்கொடியுடன் வசூல் விஷயத்திலும் வெற்றிக் கொடி நாட்டினால்தான் அந்தப் படத்தை நூற்றுக்கு நூறு வெற்றி என்று கூறலாம். பெரு மூச்சு விடும் அளவுக்குப் பெரிய முதல் போட்டுத் தயாரித்த படத்தில், நடிகர்கள், டெக்னிஷியன்கள், ரஸிகப் பெரு மக்கள் ஆகியவர்களின் பூரண ஒத்துழைப்பின் மேல்தான் வசூல் வெற்றியையும், புகழையும் ஒரு படாதிபதி எதிர்பார்க்க முடிகிறது. அந்த விஷயத்தில் ஸ்ரீ எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு மிகவும் அதிர்ஷ்டக்காரர்தான்.

வட நாட்டில் பல ஊர்களில் ஏககாலத்தில் திரையிடப்பட்டுப் புகழ்க் கொடியும் வெற்றிக் கொடியும் நாட்டி வரும் கோவை, பக்ஷிராஜாவின் "ஆஸாத்" படம் திரையுலகில் ஒரு மாபெரும் வெற்றிதான் என்பதில் ஐயமில்லை.

வட்ட மேஜை

தென் இந்தியப் படாதிபதிகள்

தென்னாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் அகில இந்தியாவும் வியக்கும்படியாகக் காரியங்கள் செய்து வருகிறார்கள் என்பது தென் இந்தியர்கள் எல்லாரும், அதிலும் என்னைப் போன்று வட இந்தியாவில் வாழும் தென்னிந்தியர்கள் எல்லாரும் பெருமைப் படும் காரியம் அல்லவா !

சில ஆண்டுகளுக்கு முன்பு "சந்திரலேகா" என்னும் படத்தின் மூலம் திரு எஸ். எஸ். வாஸன் வட இந்தியப் படாதிபதிகள் பார்த்து வியக்கும்படி, வட இந்திய மக்கள் எல்லாரும் பாராட்டும்படி வட இந்தியாவில் தமது கொடியைத் தூக்கிப் பறக்க விட்டார்.

அந்தக் காலத்தில், பம்பாய், கல்கத்தா முதலிய பல வட இந்திய நகரங்களில் திரும்பிய பக்கமெல்லாம் "சந்திரலேகா" விளம்பரங்கள்தான். வீட்டை விட்டு வெளியே கிளம்பி விட்டால் சந்திரலேகா நம் கண்களைக் கவர்வாள். போகும் இடங்களில் எல்லாம் நம் முன்னால் வந்து நாட்டியமாடுவாள். இதைக் கண்டு அதிசயிக்காதவர்களே இல்லை என்று சொல்ல வேண்டும். அவர் விளம்பரத் திறமையைக் கண்டு பல வடநாட்டுப் பட முதலாளிகள் மூர்ச்சையடைந்தே போனார்கள். பஸ்ஸில், டிராமில், நாலு பேர் கூடி நிற்கும் இடங்களில் எல்லாம் ஸ்ரீ வாஸன் அவர்களைப் பற்றியும், அவர் சந்திரலேகா படத்தைப் பற்றியும்தான் பேசிக் கொள்வார்கள். சந்திரலேகா படத்தின் மூலம் திரு வாஸன் வட நாட்டையே கவர்ந்து விட்டார்.

அவருக்குப் பிறகு இப்பொழுது இன்னொரு தென் இந்தியர் வட இந்தியர்கள் எல்லாம் பாராட்டும்படி விளங்கி வருகிறார். தென் இந்தியப் படாதிபதி திரு ஸ்ரீராமுலு நாயுடு அவர்களின் 'ஆஸாத்' படத்தின் வெற்றியைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

"மலைக்கள்ளன்" என்ற தமிழ்ப் படத்தின் மூலம் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற திரு ஸ்ரீராமுலு நாயுடு அதே படத்தை "ஆஸாத்" என்ற பெயரில் இந்தி படமாகத் தயாரித்து அகில இந்தியாவிலும் திக்விஜயத்துக்கு அனுப்பியிருக்கிறார். ஆஸாத் வட இந்தியாவில் அபாரமான வெற்றியுடன் ஓடிக் கொண்டிருக்கிறது. வட இந்திய சினிமா ரஸிகர்களின் ஆதரவை ஆஸாத் கொள்ளை கொண்டு விட்டது. ஸ்ரீராமுலு நாயுடுவின் ஆற்றலைக் கண்டு வட இந்தியப் படாதிபதிகளும் படப்பிடிப்பு சம்பந்தமான நிபுணர்களும் பிரமித்துப் போகிறார்கள்.

ஆஸாத் படத்தின் அமோகமான வெற்றி ஒரு புறமிருக்க, சினிமாப் படம் சம்பந்தமாக ஸ்ரீராமுலு நாயுடு கொண்டிருக்கும் உயர்ந்த நோக்கத்தை வியந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பொதுவாகப் படாதிபதிகள் எல்லாரும் 'சினிமாப் படத்துக்குத் தணிக்கை கூடாது' என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். "சினிமாப் படத் தணிக்கைக் குழுவைக் கலைத்து விட வேண்டும்" என்று சொல்லும் படாதிபதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்காகப் பெரும் இயக்கமே நடத்தவும் சிலர் தயாராக இருக்கிறார்கள்.

இதற்கு மாறாக ஸ்ரீராமுலு நாயுடு சினிமாவுக்குத் தணிக்கை அவசியம் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல; இப்பொழுதுள்ள சினிமா தணிக்கை விதிகளை இன்னும் கடுமையாக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். கடுமையான தணிக்கை விதிகள் இருந்தால்தான் சினிமாவின் தரம் உயரும், நல்ல படங்களைத் தயாரிக்க முடியும் என்று அபிப்பிராயப்படுகிறார். மேலும் சினிமாத் தணிக்கையும், படத் தணிக்கைக் குழுவும் இல்லாவிட்டால் சினிமாவின் தரம் நிச்சயம் குறைந்து போகும். ஈனமான உணர்ச்சிகளைத் தூண்டி மனிதனை மிருகமாக்கும் மிக மட்டமான முறையில் போய்க் கொண்டிருக்கும் சினிமாப் படங்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தகுந்த பாதுகாப்பே இல்லாமல் போய் விடும் என்றும் கூறுகிறார். இவ்வாறு சினிமாப் படத் தணிக்கையின் அவசியத்தை வரவேற்றும், சினிமாப் படத் தணிக்கைக் குழுவின் முக்கியத்தை உணர்ந்தும் அதற்கு ஆதரவளிக்கும் திரு ஸ்ரீராமுலு நாயுடுவைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

இத்தகைய ஆற்றலும், செயல் திறமையும், படத் தணிக்கை விஷயத்தில் தாராள உள்ளமும் உடைய ஒரு சிறந்த படாதிபதியைத் தென் இந்தியா பெற்றிருப்பது குறித்து வட இந்தியாவில் வாழும் தென் இந்தியர்களாகிய நாங்கள் பெருமைப் படுகிறோம். அகில இந்தியாவும் போற்றிப் புகழும் நல்ல படங்களைத் தயாரித்துச் சிறப்புடன் விளங்கத் தமிழ் நாட்டுப் படாதிபதிகள் பாடுபட்டு உழைக்கக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு அத்தகைய தைரியத்தையும் ஊக்கத்தையும் அளிக்க உதவ வேண்டுமென்று தமிழ் நாட்டு சினிமா ரஸிகர்களைப் பிரார்த்திக்கிறேன்.


பம்பாய்
12—5—55

ஆர். கண்ணன்



விளையாட்டு அரங்கம்

ஒவ்வொரு நாடும் சில விளையாட்டுக்களில் தனித்தேர்ச்சி பெற்றிருக்கிறது. இங்கிலாந்தில் கிரிக்கட்டும், கால் பந்தும் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் கிரிக்கெட்டும், டென்னிஸும் பிரதானமானவை. அதேபோல், இந்தியா ஹாக்கி விளையாட்டில் முதன்மை பெற்று விளங்குகிறது. 1929-ம் ஆண்டு முதல் 1952 வரை இந்தியா உலக ஹாக்கி பந்தயத்தில் தோல்வியைக் கண்டதில்லை.



திரு தியான் சந்த்

ஹாக்கி விளையாட்டை எல்லோரும் பார்த்திருப்பார்கள். முதன் முதலில் இந்த விளையாட்டு எங்கே ஆரம்பமாயிற்று என்பதைப் பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். முதன் முதலில் பாரசீகத்தினர் ஹாக்கி "மாதிரி" ஒரு விளையாட்டை ஆரம்பித்தனராம். பிறகு கிரீஸ், இத்தாலி முதலிய தேசங்களில் மும்முரமாகப் பயிற்சி செய்தார்களாம். ஐரிஷ்காரர்களும், ஸ்காட்லண்டு தேசத்தினரும் யார் முதலில் இந்த விளையாட்டை ஆரம்பித்தார்கள் என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் 1875-ல்தான் முதன் முதலாக இங்கிலாந்தில் இந்த விளையாட்டு சரிவர ஆரம்பிக்கப்பட்டது என்று அறிகிறோம்.

இந்தியாவிலும் இந்த விளையாட்டு பல வருஷங்களாக இருந்ததாம். ஆனால் 1880-ல் தான் ஆங்கிலேயர்கள் தங்கள்முறையை இங்கு பரப்பினார்கள். அகில இந்திய ஹாக்கி சங்கம் 1925ல் நிறுவப்பட்டது. 1929ல் முதன் முதலாக இந்திய ஹாக்கி விளையாட்டுக்காரர்கள் உலக ஹாக்கி மன்னர்களாக ஆனார்கள்.

ஹாக்கி விளையாட்டில் இந்தியாவுக்குப் புகழ்தேடித் தந்தவர் தியான் சந்த். அவர் 1929ம் வருஷ முதல் 1936 வரை உலகப் பந்தயங்களில் விளையாடித் தம்முடைய திறமையினால் இறவாத புகழ் தேடிக் கொண்டார்.

அடுத்த வருஷம் மீண்டும் ஒரு உலகப் பந்தயம் நடக்கப் போகிறது. இந்தியாவில் நடக்கும் பல்வேறு முக்கியப் போட்டிகளில் கலந்து கொள்ளுபவர்களைப் பார்த்து 50 நபர்களைப் பொறுக்கி எடுக்கப் போகிறார்கள். இவர்களுக்குத் தீவிரமாக இரண்டு மாதப் பயிற்சி கொடுக்கப் போகின்றனர். பிறகு இவர்களில் ஒரு கோஷ்டியைத் தேர்ந்தெடுத்து ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப் போகிறார்கள். மற்ற நாடுகளுக்கும் போவார்கள்.

சமீபத்தில் இந்தியாவின் முக்கிய ஹாக்கிப் போட்டி சென்னையில் நடந்தது. இந்தப் பந்தயத்தில் சென்னை முதன் முதலாக வெற்றி பெற்றது. மதராஸும், சர்விஸஸும் அந்த அழகிய ரங்கசாமிக் கோப்பையைப் பகிர்ந்து கொண்டன.

இந்த வருஷம் மதராஸ் விளையாட்டுக்காரர்கள் தனியான புகழை நமது ராஜ்யத்துக்குத் தேடிக் கொடுத்திருக்கின்றனர். கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவின் முக்கிய பரிசான ரஞ்சிக் கோப்பையைப் பெற்றனர். ஹாக்கியிலும் பரிசு வாங்கினார்கள். டென்னிஸில் இந்தியாவின் முதல்தரமான விளையாட்டுக்காரர் திரு ஆர். கிருஷ்ணன் அவர்கள். நான்காவதாக உடல்கலைப் போட்டியில் ஜனார்த்தனராவ் முதற் பரிசைப் பெற்றார்.

நமது விளையாட்டுக்காரர்களுக்குச் சென்னை மேயர் சமீபத்தில் நகரசபையின் சார்பில் ஒரு பாராட்டு விழா நடத்தினார். ராஜாஜி அவர்கள் நமது விளையாட்டுக்காரர்களுக்கு ஆசி கூறினார்கள். ஆண்டுதோறும் நமது ராஜ்யம் விளையாட்டுக்களில் தலைசிறந்து விளங்குவதாக!

—பந்து.

ஹாக்கி விளையாட்டில் ரங்கசாமி கோப்பையைப் பெற்ற சென்னை ஹாக்கி கோஷ்டியின் தலைவர் திரு ரீட்டரும், சர்விஸஸ் கோஷ்டியின் தலைவர் திரு போஸையும் கீழே படத்தில் காணலாம்.





இது என்ன சொர்க்கம்?

கல்கி

ராவ்பகதூர் வியாக்ரபாத சாஸ்திரிகள் மிகுந்த வியாகூலத்துடன் போய்க் கொண்டிருந்தார். அவருடைய கண்கள் அங்குமிங்கும் ஆவலுடன் நோக்கின. தெரிந்த முகம் ஏதாவது கண்ணுக்குத் தென்படாதா என்ற ஏக்கம் அவருடைய உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது. அம்மா! இங்கு வந்து வருஷம் பன்னிரண்டுக்கு மேலாகிறது. பன்னிரண்டு வருஷந்தானா! பன்னிரண்டு யுகம் போல அல்லவா தோன்றுகிறது!—இருக்கட்டும்; இந்தப் பன்னிரண்டு வருஷத்தில் பழக்கமான முகம் ஒன்றைக் கூடக் காணவில்லை. பழைய ஞாபகங்களைப் பற்றிக் குஷாலாகப் பேசிக் கொண்டிருக்க ஒரு ஆத்மாகூட அகப்படவில்லை. "இது என்ன சொர்க்கம்!" என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார் வியாக்ரபாத சாஸ்திரிகள். விஷயம் என்னவென்றால், அவருக்குச் சொர்க்கம் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இந்தச் சொர்க்கத்தை அடைவதற்காகப் பூலோகத்தில் அவர் செய்த காரியங்களை நினைத்தால் அவருக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. இந்தச் சொர்க்கத்தை அடைவதற்காக அவர் செய்யாத காரியங்களை நினைத்தால் அவருக்கு அழுகையாய் வந்தது. ஆனால், தரித்திரம் பிடித்த இந்தச் சொர்க்கத்தில் சிரிக்க முடியுமா? முடியாது! அழத்தான் முடியுமா? அதுவும் முடியாது!—இதற்குப் பேர் சொர்க்கமாம். சிவ! சிவா! ராம! ராமா! — இல்லை, பிசகு! வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். சிவனையும் ராமனையும் பிரார்த்தித்துப் பிரார்த்தித்துத்தான் இந்த சொர்க்கத்துக்கு வந்து சேர்ந்தேனே! போதாதா! சொர்க்கத்திலிருந்து பூலோகத்துக்குப் போவதற்கு யாரைப் பிரார்த்திக்கலாம்? சனீசுவரனைப் பிரார்த்தித்துப் பார்க்கலாமா? — "சனீசுவரா! சனீசுவர சனீசுவர சனீசுவர...!"

"யார், சாஸ்திரிகள்வாளா!" என்று பழகிய குரல் காதில் விழுந்ததும், சாஸ்திரிகள் மூன்று துள்ளுத் துள்ளி ஒரே குதியாய்க் குதித்தார். பார்த்தால், சாக்ஷாத் திவான் பகதூர் கச்சபேசுவர முதலியார் எதிரே வந்து கொண்டிருக்கிறார்.

"அடாடடா! முதலியார்வாளா! வாருங்கோ, வாருங்கோ! பார்த்துப் பதினைந்து வருஷத்துக்கு மேலாச்சே! எப்போது வந்தீர்கள்! என்ன சேதி! என்ன சமாசாரம்!..." என்று உற்சாகமாகக் கேட்டுக் கொண்டு சாஸ்திரிகள் முதலியாரின் கையைப் பிடித்துக் குலுக்க முயன்றார். ஆனால், கையில் ஒன்றும் அகப்படாமற் போகவே முகத்தில் ஏமாற்றம் தோன்றியது.

"என்ன சாஸ்திரிகள்வாள்! இது சொர்க்கம் என்கிறதே மறந்து போய் விட்டாற் போலிருக்கிறது! பூலோகத்தில் இருப்பதாகவே ஞாபகமோ!" என்றார் கச்சபேசுவர முதலியார்.

"அப்படித்தானா, அப்படித்தான்! உங்களைப் பார்த்த சந்தோஷத்திலே ஒரு நிமிஷம் இது சொர்க்கம் என்கிறதே மறந்துதான் போச்சு! பூலோகமென்றே நினைச்சுட்டேன்!" என்று சாஸ்திரிகள் கூறி, 'ஹிஹ்ஹிஹ்ஹி' என்று சிரித்தார்.

அப்போது அந்தப் பக்கமாகப் போன தேவர்களும் தேவிகளும் அவரை நோக்கி ஏளனமாகப் பார்த்துக் கொண்டு போனார்கள்.

"இந்த மாதிரி சிரிப்பைக் கேட்டுப் பத்து வருஷத்துக்கு மேலாகி விட்டது!" என்றார் கச்சபேசுவர முதலியார்.



"ஆமான்னு! அதை நினைத்தால் துக்கம் துக்கமாய் வருகிறது...ஊம் ஊம்..." என்று சாஸ்திரிகள் பலமாக அழுதார்.

"வேண்டான்னு! அழாதேங்கோ!" என்று முதலியார் கூறி, "இப்படி அழுகைக் குரலைக் கேட்டு எத்தனை நாள் ஆச்சு தெரியுமா! ஊம் ஊம்..." என்று தாமும் அழத் தொடங்கினார். இரண்டு பேரும் ஒருவருடைய கண்ணை ஒருவர் துடைக்க முயன்று, அது பிரயோஜனமில்லையென்று கண்டபோது அதனுடைய ஹாஸ்ய ரசத்தை அநுபவித்துப் பலமாகச் சிரித்தார்கள்.

"அப்படின்னா, உங்களுக்கும் சொர்க்கம் பிடிக்கவில்லைன்னு சொல்லுங்கோ!" என்றார் முதலியார்.

"பிடிக்கலையா! அழகுதான்! பிடிக்கலையான்னு கேட்கிறீர்கள்! சொர்க்கம் என்கிறது இந்த மாதிரி இருக்கும் என்று மட்டும் தெரிந்திருந்தால் அவ்வளவு தானம், தர்மம், தலையிலே குட்டிக்கிறது, மூக்கைப் பிடிக்கிறது, கோவிலுக்குப் போகிறது-ஒன்றுமே பண்ணியிருக்கமாட்டேனே! இந்த அழகான சொர்க்கத்துக்காகப் பூலோகத்தை நன்றாக அநுபவிக்காமல் போனது என்ன முட்டாள்தனம் என்பதை எண்ணும் போது..."

"என் மனத்திலிருக்கிறதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறீர்கள். சாஸ்திரிகள்வாள்! எங்கேயாவது ஓரிடத்தில் சாவகாசமாக உட்கார்ந்து பேச வேணும். இருக்கட்டும்; இப்போது எங்கே கிளம்பிப் போய்க் கொண்டிருந்தீர்கள்!" என்று முதலியார் கேட்டார்.

"எங்கே கிளம்பினேனு! ஓரிடத்துக்கும் இல்லை. இந்த அழகான சொர்க்கத்திலே எங்கே போனால்தான் என்ன! எல்லாம் ஒரே லட்சணந்தான்!" என்று சாஸ்திரிகள் மிகுந்த அலுப்புடன் கூறினார்.

"அப்படியானால், வாருங்கள்! அதோ அந்த மந்தார மரத்தடியில் உட்கார்ந்து சாவகாசமாகப் பேசலாம்" என்றார் முதலியார்.

இரண்டு பேரும் சமீபத்தில் தென்பட்ட மந்தார மரத்தடிக்குப் போய் உட்கார்ந்தார்கள்.

2

மந்தார விருட்சம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. அந்த மரங்களிலிருந்து கிளம்பிய திவ்ய பரிமள வாசனை நாலாபுறமும் சூழ்ந்திருந்தது. மரக் கிளைகளில் குயில்கள் உட்கார்ந்து 'குக்கூ' 'குக்கூ' என்று இனிய குரலில் பாடின.



மரத்தினடியில் பச்சை ஜமக்காளம் விரித்தாற்போல் பசும்புல் படர்ந்திருந்தது. ஒரு தூசி, தும்புக் கிடையாது.

சாஸ்திரிகள் ஒரு புல்லைப் பிடுங்கி வாயில் வைத்துக் கடித்தார்.

"என்ன, வியாக்ரபாத சாஸ்திரிகளே! புல்லைத் தின்கிறீர்களோ! புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா என்னும் பழமொழி என்ன கதி ஆயிற்று!" என்று முதலியார் சொல்லி ஹிஹ்ஹிஹ்ஹி என்று சிரித்தார்.

"அதெல்லாம் பூலோகத்துப் பழமொழி! இந்த தரித்திரம் பிடித்த சொர்க்கத்திலே புசிக்கும் பசியேதான் கிடையாதே!" என்று சாஸ்திரிகள் சொல்லி ஹஹ்ஹஹ் ஹா என்று சிரித்தார்.

"பின்னே என்னத்துக்காகப் புல்லைத் தின்கிறீர்கள்!"

"என்ன இருக்கிறது இங்கே தின்கிறதற்கு! அமிர்தத்தைத் தவிர வேறு ஒரு மண்ணாங்கட்டி கூட இல்லை. அமிர்தம் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப் போய் விட்டது!..."

"அமிர்தம் அலுத்துப் போய்விட்டதா! அதுதான் கேட்டேன், ஏன் சாஸ்திரிகள்வாள்! பூலோகத்திலே நீர் எதற்கெடுத்தாலும் 'அமிர்தமாயிருக்கு' என்று சொல்லி வந்தீரோ, இல்லையோ! இனிமேல் சொல்ல மாட்டீரே!"

"என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீர்! இட்லி, மிளகாய்ப் பொடி, நல்லெண்ணெய் இந்த சொர்க்கத்தில் கிடையாது என்று மட்டும் தெரிந்திருந்தால்—அமிர்தமாம்! அமிர்தமாம்!"

"பிச்சுவய்யர் ஹோட்டலிலே வெங்காயக் கொத்ஸு பண்ணுவார்களே, அதன் காலிலே கட்டி அடிக்க வேணும் இந்த அமிர்தத்தை!"

"அடாடா! நாம் லா காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது சங்கரய்யர் ஹோட்டலிலே ரவாத் தோசை சாப்பிடுவோமே, ஞாபகமிருக்கா!"

"அதை நினைச்சுண்டா நாக்கிலே ஜலம் சொட்டுகிறது—!"

"வேறு எது வேணுமானாலும் இல்லாமல் போகட்டும்! காப்பியைச் சொல்லும்! காப்பி இல்லாத சொர்க்கம் சொர்க்கமா என்று கேட்கிறேன்."

இந்தச் சமயத்தில் மந்தார மரத்தின் கிளையிலிருந்து குயில் ஒன்று எட்டிப் பார்த்து, 'குக்கூ' 'குக்கூ' என்று கத்திற்று.

"முதலியார்வாள்! இந்தக் குயிலைக் கொஞ்சம் பேசாமலிருக்கச் செய்கிறீரா? இல்லாவிட்டால், நான் எங்கேயாவது ஓடிப் போகட்டுமா! கேட்கச் சகிக்கவில்லை."

"சாஸ்திரிகளே! பூலோகத்தில் நீர் எத்தனை தடவை நல்ல குரலைப் பற்றிப் பேசும்போது 'குயில்தான்' என்று சொல்லியிருக்கிறீர்! இப்போது ஏன் இப்படி அலுத்துக் கொள்கிறீர்கள்!"



"அட சனியனே! அப்போதெல்லாம் நான் குயிலின் குரலையே கேட்டதில்லையே! அதனாலல்லவா அப்படிச் சொல்லித் தொலைத்தேன்!"

"இந்தச் சொர்க்கத்திலே சங்கீதம் எவ்வளவு கேவலமாயிருக்கிறது, பாருங்களேன்! மகா மட்டம்!"

"அடாடா! நாம் நடத்தினோமே, பட்டணத்தில் கர்நாடக சங்கீத புனருத்தாரண சபை! எவ்வளவு ஜோராக நடத்தினோம்!"

"இங்கே பாடுகிறார்களே, தலைக்குத் தலை ஒரு வீணையை மீட்டிக் கொண்டு. இது ஒரு பாட்டா? நாலு மணிச் சவுக்கத்தில் முக்காலே அரைக்கால் இடத்தில் பல்லவியை எடுத்துக் கொண்டு நாலு ஆவர்த்தம் ஸ்வரம் பாடும் வித்வான் இங்கே யார் இருக்கிறார்! நம் ஊரில் சங்கீதக் கேஸரியின் கச்சேரி நடக்கும்போது, மிருதங்கம், கஞ்சிரா, கடம், கொன்னக்கோல், டோலக் இவ்வளவு பக்க வாத்தியங்களும் சேர்ந்து என்ன அமர்க்களமாயிருக்கும்! அது சங்கீதமா! இங்கே இவர்கள் அழுது வடிகிறார்களே, இது சங்கீதமா!"

"ஆமான்னா, ஆமாம்! இங்கே நான் எத்தனையோ பேரைக் கேட்டுட்டேன், ஹார்மோனியம் வாசிக்கத் தெரியுமா என்று. அந்தமாதிரி வாத்தியத்தையே இங்கே ஒருவரும் கேட்டதில்லையாம்."

"சரியாய்ப் போச்சு, போங்கள்! அது ஒன்றுதான் இந்த சொர்க்கத்திலே நல்ல அம்சம் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய நாட்டுப் பெண் ஸுலோசனா தினம் ஹார்மோனியத்தை எடுத்து வச்சுண்டு அழுறதைக் கேட்கச் சகிக்காமல் சீக்கிரமாகச் சொர்க்கத்துக்கு வந்து விடணும் என்று ஆசைப் பட்டேன். அம்மம்மா! அவள் என்னைப் படுத்தி வைச்ச பாடு! நான் ரொம்பக் கர்நாடகமாம்! நான் பகவத் கீதைப் பிரசங்கம் பண்ணுகிறதை அவள் என்னவெல்லாம் கேலி செய்தாள், தெரியுமோ! அவள் பவுடரைப் பூசிக்கிறதும், மினுக்குகிறதும், குலுக்குகிறதும் மகா மோசம்! ஆனால், முதலியார், இதற்கு நேர் விரோதம் நம்ம பையன். உள்ளூரிலே பகவத்கீதைப் பிரசங்கம் நான் செய்தால் நம்ம பஞ்சாமிதான் கடைசி வரையில் உட்கார்ந்து சிரத்தையாய்க் கேட்டுக் கொண்டிருப்பான்......"

"சாஸ்திரிகளே! உம்முடைய மனத்தில் இருப்பதை நிஜமாகச் சொல்லி விடட்டுமோ! உம்முடைய பகவத்கீதைப் பிரசங்கத்தைக்

கேட்பதற்குச் சொர்க்கத்தில் ஒருவரும் இல்லை யென்பதுதானே உம்முடைய மனக்குறை!"

"வாஸ்தவந்தான்! இந்த சொர்க்கத்தில் இருப்பவர்கள் அந்த விஷயத்தில் மகா மோசம். பகவத்கீதை, உபநிஷத், பெரிய புராணம் ஒன்றிலுமே இவர்களுக்குச் சிரத்தை கிடையாது. சுத்த நாஸ்திகர்கள். எல்லாரும் ஆடல் பாடல்களிலேயே மூழ்கி யிருக்கிறார்கள். ஏதடா, நாளைக்குப் போகும் கதிக்கு வழி தேடிக் கொள்ள வேண்டுமே என்று ஒருவருக்கும் கவலை கிடையாது."

"இருக்கட்டும், முதலியார்! இங்கே சாயங்கால வேளையில் உங்களுக்கு எப்படிப் பொழுது போகிறது! பீச்சா, ஸினிமா, சபா கச்சேரியா ஒரு இழவுந்தான் கிடையாதே! தினம் சாயங்காலம் வந்தால், பகவத் கீதையிலேயே நாலு நாலு சுலோகமாய்ச் சொல்லிண்டு வரேன்..."

"சாஸ்திரிகளே! நிறுத்தும். பூலோகத்தில் உம்மிடம் பகவத் கீதை பிரசங்கம் கேட்டதெல்லாம் போதும். வேறு பேச்சு ஏதாவது பேசுவதா யிருந்தால் நான் இருக்கிறேன். இல்லாவிட்டால் இதோ நடையைக் கட்டுகிறேன்" என்று முதலியார் எழுந்திருக்க, சாஸ்திரிகள் அவரைக் கையைப் பிடித்து உட்கார வைக்க முயன்று முடியாமற் போகவே, "வேண்டாம், நான் பகவத் கீதையைப் பற்றிப் பேசவில்லை. வேறு ஏதாவது பேசுவோம். தயவு செய்து இப்படி உட்காருங்கள்" என்றார்.

"வேறு எதைப் பற்றிப் பேசலாம்!" என்று சாஸ்திரிகள் கேட்டார்.

"எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. உதாரணமாக, இந்த சொர்க்கலோகத்திலுள்ள ஸ்திரீகளைப் பற்றி உம்முடைய நிஜமான அபிப்பிராயம் என்ன!"

"சுத்த மோசம் என்பதுதான்."

"எந்த விஷயத்தில் மோசம்!"

"எல்லா விஷயத்திலும்தான். முக்கியமாக, சொர்க்கத்தில் எந்த ஸ்திரீயைப் பார்த்தாலும் ஒரேமாதிரி இருக்கிறாள். அதில் என்ன விசேஷம் இருக்கிறது! பூலோகத்தில், நம்முடைய காலத்திலே......என்ன......!"

"எப்படி!"

"எது!"

"யாரு!"

"அவன்தானா மிஸ்ஸஸ் லோசனா தத்..."

"அப்படிச் சொல்லுங்கோ, சாஸ்திரிகளே!"

3

இதற்குப் பிறகு சாஸ்திரிகளும் முதலியாரும் பேசிய விஷயங்கள் கொஞ்சம் விரஸமாயும், அப்படியே பிரகசிப்பதற்கு லாயக்கற்றவையாயும் இருந்தன. கடைசியாக அந்த "லோசனாதத்தின் பெயர் பத்திரிகையிலேகூடக் கொஞ்ச நாள் அடிபட்டதில்லையா!" என்றார் முதலியார்.

"ஆமான்னா, ஆமாம். பத்திரிகை என்றவுடனே ஞாபகம் வருகிறது. இந்தச் சொர்க்கத்திலே ஒரு நியூஸ் பேப்பர்கூடக் கிடையாது. பார்த்தீரா! மற்றதெல்லாம் ஒரு புறம் இருக்க, நியூஸ் பேப்பர் இல்லை என்கிறதை நினைத்தால்தான் 'இது என்ன தரித்திரம் பிடித்த சொர்க்கம்!' என்று தோன்றுகிறது."

"வாஸ்தவந்தான். நியூஸ் பேப்பர் இல்லாததுதான் பெரிய குறை. சாஸ்திரிகளே! சமாசாரம் தெரியுமா! பூலோகத்திலே இப்போது பெரிய யுத்தம் நடக்கிறதாமே!... நம்ம காலத்திலே நடந்த யுத்தத்தை இந்த யுத்தத்தின் காலில் கட்டி அடிக்க வேணுமாம்!"

"நிஜமாகவா! அடாடாடா! இப்பேர்ப்பட்ட சமயத்திலா நாம் பூலோகத்தில் இல்லாமல் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம்!— ஆனால், உங்களுக்கு எப்படித் தெரியும், முதலியார்!"

"நாலு நாளைக்கு முன்னால் ஒரு பிள்ளையாண்டான் பூலோகத்திலிருந்து வந்தான். அவனைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தேன்."

"நீர் அதிர்ஷ்டசாலி, ஓய்! பூலோகத்திலேயிருந்து வந்தவனைப் பார்த்தீரா! அவன் இன்னும் என்னென்ன சொன்னான்!"

"யுத்தம் என்றால் உங்க வீட்டு யுத்தம், எங்க வீட்டு யுத்தம் இல்லையாம். ஆகாச விமானங்களிலே கொண்டு வந்து குண்டு போடுகிறார்களாம். ஊர் ஊராய்ப் பற்றி எரிகிறதாம்......ஆமாம்; சாஸ்திரிகளே! பூலோகத்திலே நாமெல்லாம் புராணங்களிலே வாசித்துக் கொண்டிருந்தோமே, தேவர்களும் அசுரர்களும் பிரமாத யுத்தம் செய்தார்கள் என்று. இங்கே ஒரு மண்ணாங் கட்டியையும் காணோமே!"

"அது தெரியாதா உமக்கு! அசுரர்களையெல்லாம் கொன்றுவிட்டதாம்! இனிமேல் இங்கே யுத்தம் என்பதே வராதாம்!...

"சட்சட்! இவ்வளவுதானா!"

"ஆமாம், முதலியார்வாள்! யாரோ பூலோகத்திலிருந்து புதிதாய் வந்தான் என்றீரே! அவனை எங்கே பார்த்தீர்! என் கண்ணிலே ஒருவனும் தட்டுப்பட வில்லையே!"

"எங்கே பார்த்தேன் என்று கேட்கிறீர்!"

"அதைத்தான் கேட்கிறேன்."

"சொல்லப் பயமா யிருக்கிறது."

"பயமா! என்னத்துக்குப் பயம்!"

"இந்த சொர்க்கம் எங்கேதான் போய் முடிகிறது என்று பார்ப்பதற்காக நான் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். வெகு தூரம் போன பிறகு, பூலோகத்திலே நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே, மலைக் கணவாய்—அந்தமாதிரி ஒரு இடம் வந்தது. அந்தக் கணவாய் வழியாய்க் கொஞ்ச நேரத்துக்கு ஒரு தடவை புது மனிதர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்......"

"ஆமாம்; அந்தக் கணவாய்க்குள் புகுந்து அது எங்கே போகிறது என்று பார்த்தீரா!"

"இல்லை, பயமா யிருந்தது."

"என்ன பயம்!"

"சில பேர் அதற்குள் புகுந்து போனதைப் பார்த்தேன். அவர்கள் திரும்பிவரவே யில்லை."

"என்ன! நிஜந்தானா!"

"ஆமாம்."

"சபாஷ்!" என்றார் சாஸ்திரிகள்.

"எதற்கு சபாஷ்!"

"அந்தக் கணவாய்தான் பூலோகத்துக்குப் போகும் வழியா யிருக்க வேண்டும். முதலி

யார்வான்! சத்தியமாகச் சொல்லும், உமக்கு இந்தச் சொர்க்கம் பிடிக்கிறதா!"

"கட்டோடே பிடிக்கவில்லை."

"பூலோகத்துக்குப் போக வேண்டுமென்றிருக்கிறதல்லவா!"

"இருக்கிறது."

"சரி, அப்படியானால் கிளம்பும்" என்று சாஸ்திரிகள் எழுந்தார். இரண்டு பேரும் காற்று வெளியில் மிதந்து வெகுதூரம் போனார்கள்.

"அதோ!" என்றார் முதலியார்.

ஒரு நீண்ட மேக மலைத்தொடர் தெரிந்தது. அதன் நடுவில் ஒரு பிளவு தென்பட்டது.

இருவரும் அந்தப் பிளவுக்குள் போனார்கள். கொஞ்சதூரம் போனதும், மலை சட்டென்று மூடிக்கொண்டு விட்டது. அப்புறம் ஒன்றுமே இல்லை. வெறும் வெளிதான். விளிம்பின் அருகில் போய்ப் பார்த்தால் கீழே அதல பாதாளம்.

"அம்மம்மா! எவ்வளவு பெரிய பள்ளம்! இதில் விழுந்தால்......"

"பூலோகத்துக்குப் போகலாம்" என்று முதலியாரின் குரல் கேட்டது.

அவ்வளவுதான்; சாஸ்திரியார் கீழே கீழே கீழே விழுந்து கொண்டிருந்தார். கால வரம்பென்பதே இல்லாமல் அனந்த காலம் கீழே போய்க் கொண்டிருந்ததாகத் தோன்றியது. அப்புறம் அவருடைய ஞாபகம் போய்விட்டது.

*   *   *

சாஸ்திரியாருக்கு மறுபடியும் சுயப் பிரக்ஞை வந்தபோது படார், படார் என்று வெடிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவருக்குக் கீழேயும் பக்கங்களிலும் ஏதோ மிருதுவான வஸ்து இருப்பது போல் உணர்ச்சி உண்டாயிற்று. அடே! இதென்ன! சொர்க்கத்திலே ஸ்பரிச உணர்ச்சிதான் கிடையாதே! பார்க்கிறதோடு சரிதானே—ஜம்மென்று பூலோகத்திலே பஞ்சு மெத்தையில் படுத்துக் கொண்டிருப்பதுபோல் அல்லவா தோன்றுகிறது!—ஆமாம்; கச்சபேசுவர முதலியார் எங்கே!


ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. ஆனால் முதலியாரின் குரல் இல்லை; ஸ்திரீகள் குரல். யாரோ குனிந்து பார்ப்பது போல் இருந்தது. ஓஹோ! நமது பாரியாள் சீதாலக்ஷ்மி அம்மாள் அல்லவா! ஆனால் இதென்ன மாறுதல்! முகத்தில் இவ்வளவு சுருக்கங்கள்—தலை மயிர் ஒரே வெள்ளை! சரிதான்; பன்னிரண்டு வருஷம் கழித்துப் பார்க்கிறோமல்லவா!

"தாத்தாவையே உரித்து வச்சிருக்கு!" என்றாள் சீதாலக்ஷ்மி அம்மாள்.

சாஸ்திரியாருக்கு ஒன்றும் புரியவில்லை.

இன்னொரு குரல் பக்கத்திலிருந்து, "அபசகுனம் மாதிரி அப்படியெல்லாம் சொல்லாதேங்கோ. தாத்தாவுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. அவர் என் வயிற்றிலே பிறந்திருக்க மாட்டார்......" என்றது. அவருடைய மாட்டுப் பெண் ஸுலோசனாவின் குரல் அது என்று தெரிந்து கொண்டார்.

எஜமானும் வேலைக்காரனும்!



"அப்படிச் சொல்லாதேடி! மனத்துக்குள்ளே உன் மேலே அவருக்கு ரொம்ப வாஞ்சை. கடைசிவரையில் குழந்தை மாதிரி தீபாவளிக்குப் பட்டாசுக் கட்டு விடுவாரோல்லியோ! அது தான் தீபாவளியன்றைக்குப் பிறந்திருக்கார்" என்றாள் சீதாலக்ஷ்மி அம்மாள்.

அப்போது சாஸ்திரியார் மனப்பூர்வமாக வெறுத்த அவருடைய நாட்டுப் பெண்ணின் முகம்—முன்னே பார்த்ததைக் காட்டிலும் பருத்து உப்பியிருந்த முகம்—பவுடர் வாசனை மூக்கைத் துளைத்த முகம்—அவருடைய முகத்தின் மிக அருகில் வந்தது. அதைத் தடுத்துத் தள்ளுவதற்காகச் சாஸ்திரியார் கையைத் தூக்கினார். என்ன வேடிக்கை! கை துளியுண்டு இருக்கிறதே!

"என் கண்ணே! அதற்குள்ளே அம்மான்னு தெரிஞ்சு போச்சா!" என்றாள் ஸுலோசனா.

அப்போதுதான் சாஸ்திரியாருக்கு விஷயம் தெரிந்தது—விதி தன்னை எவ்விதம் கேலிக்கூத்துக்கு உள்ளாக்கி விட்டதென்று! தன்னுடைய சொந்த வீட்டில் தான் தொட்டிலில் படுத்திருப்பதையும், தன் மாட்டுப் பெண்ணுக்குக் குழந்தையாய்ப் பிறந்திருப்பதையும் உணர்ந்தார். பிரமாதமான ஆத்திரமும் அழுகையும் வந்தது. கையையும் காலையும் உதைத்துக் கொண்டு 'வீல்' என்று அழுதார்.

"அம்மா! நீங்கள் சொன்னது சரிதான். தொண்டையைப் பாருங்கோ! அசல் தாத்தா தான்" என்றாள் ஸுலோசனா.

வெளியிலிருந்து சாஸ்திரிகளுடைய குமாரன் பஞ்சாபியின் குரல் சொல்லிற்று: "எத்தனை பகவத்கீதையைப் பிரசங்கம் பண்ணி, இருக்கிறவாள் பிராணனை எல்லாம் வாங்கப் போகிறாரோ!"

இதைக் கேட்டதும் சாஸ்திரியார் மூர்ச்சையடைந்தார்!

மறுபடியும் பிரக்ஞை வந்தது; ஆனால் நல்லவேளையாய்ப் பூர்வ ஞாபகம் வரவில்லை.

"வீணை பவானி" என்ற புத்தகத்திலிருந்து.

கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி
நினைவுச் சிறுகதைப் போட்டி
2000 ரூபாய் பரிசு

தமிழில் அருமையான பல கதைகள் எழுதி அழியாப் புகழ் பெற்ற கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

தேர்ந்தெடுக்கும் கதைகளுக்குப் பரிசுத் தொகை ரூ. 2000 கீழ்க் கண்டவாறு வழங்கப்படும் :

முதல் பரிசு ரூ. 500/- :: இரண்டாம் பரிசு ரூ. 250/-
மூன்றும் பரிசு ரூ. 125- வீதம் பத்துக் கதைகளுக்கு.

இந்தப் போட்டியின் முடிவுத் தேதி 30—6—1955

நிபந்தனைகள் :

1. போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனை யாக, தமிழ் நாட்டின் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் இசைந்த முறையில் இருக்க வேண்டும்.
2. 'கல்கி' இதழில் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாத அளவில் அமைய வேண்டும்.
3. நல்ல காகிதத்தில் இடையீடுகள் விட்டு ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும்.
4. முதலாவது பக்கத்தின் தலைப்பில் 'கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், கல்கி, சென்னை - 10" என்ற விலாசத்துக்கு 1955 ஜூன் 30-ந் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.
5. முடிவுத் தேதிக்குப் பின் வந்து சேரும் கதைகள் இந்தப் போட்டி யில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.
6. ஒரே எழுத்தாளர் இந்தப் போட்டிக்கு என்று மூன்று கதைகள் வரை அனுப்பலாம்.
7. கதை அனுப்பும்போது, அத்துடன் எழுதியவர் தமது கைப்பட இக் கதை சொந்தக் கற்பனை என்றும், தமிழிலோ அல்லது வேறு மொழி யிலோ இந்தக் கதை அல்லது இதுபோன்ற கதை தம்மாலோ அல்லது வேறொருவராலோ எழுதப்படவில்லை என்றும் ஒரு உறுதி மொழி அனுப்ப வேண்டும்.
8. பரிசுக்குத் தேர்ந்தெடுத்த கதைகளைக் 'கல்கி' இதழில் வெளியிட்ட பிறகு, இக் கதைகளை வேறு மொழிப் பத்திரிகைகளிலோ அல்லது புத்தகமாகவோ வெளியிடுவதற்கு உரிய எல்லா உரிமைகளும் கதை எழுதிய ஆசிரியரையே சாரும்.
9. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கதை களுடன் போதிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். கதைகள் திரும்ப அனுப்பப்படும் என்று உறுதி கூறுவதற்கில்லை.
10. பரிசுக்குரிய கதைகள் தவிர, பிரசுரத்துக்கு என்று தேர்ந்தெடுக்கப் படுபவை, 'கல்கி' இதழ்களில் வெளியாகும். அவற்றிற்கு வழக்கம் போல் சன்மானம் அளிக்கப்படும்.
11. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு பரிசீலனைக் குழு நியமிக்கப்படும்.
12. இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

கல்கி காரியாலயம்
சென்னை—10

சதாசிவம்
மானேஜிங் டைரக்டர்



ஈத் முபாரக்

ஆர். பி. மல்லாரி

அன்று ஈத் கா(ஹ்)வில் ஒரே கூட்டம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஜனத் திரள். ஒரு மாத நோன்பை, முழு மனத்துடனும் சேவை உணர்ச்சியுடனும், தெய்வ வழிபாட்டுடனும், புனிதமாக முடித்து, மலர்ந்த முகத்துடன் எல்லாம் வல்ல இறைவனை நோக்கி அவன் புகழ் பாடி 'துவா' கேட்கும் ஜனக் கும்பல்! ஒவ்வொருவர் முகத்திலும் ஆனந்தமும், திருப்தியும் வெளிப்பட்டன. தம் புலன்களை எல்லாம் அடக்கி, கேவலம் மானிட இச்சைகளை வெகு அநாயாசமாக ஒரு மாதம் முழுதும் வெறுத்துத் தள்ளிய பெருமிதம்! வேண்டாம் என்றால் விலக்கி வைக்க மனத்தில் உரம் இருக்கிறது என்பதை எல்லோர் முகங்களும் பிரதிபலித்தன.

"அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்... ...ஹம்து" என்று எல்லோரும் சேர்ந்து ஒருமித்துச் சொன்னது, கேட்பவர் மனத்தைப் புல்லரிக்கச் செய்தது. அந்த ஆழ்ந்த மந்திரத்தில்தான் எத்தனை தெய்வீகத்தன்மை! சிறார் முதல் தள்ளாடும் கிழவர் வரை, தூய்மையான எளிய உடை அணிந்த ஏழை முதல், படாடோபமாக ஜரிகை சதிரியா அணிந்து வந்த சென்ற பரம்பரையைச் சேர்ந்த சீமான் வரை, எல்லோரும் ஒருமைப்பட்டு, இந்த தெய்வ முழக்கத்தில் ஈடுபட்டிருந்தனர்.

டவுன் காஜி ஸாப் கடைசியில் வந்தார். சில விநாடிகள் பரபரப்பு ...... எல்லோரும் எழுந்து நின்றார்கள். எல்லோரையும்விட ஆண்டவன்தான் உயர்ந்தவன் என்ற ஒலி யெழுப்பி அவர் தொழுகையை ஆரம்பித்தார். அணி அணியாக ஆயிரக்கணக்கில் நின்ற பக்தர்களின் சிரம் சற்றே தணிய உலகை மறந்த தெய்வஈடுபாட்டில் நின்றார்கள்.

"ஸிபஹான ரப்பியல் அலீம்."

எல்லோரும் குனிந்து மண்டியிட்டார்கள். பத்தாயிரக்கணக்கான ஜனக்கும்பல் இருந்தும், எங்கும் தெய்வீக மௌனம். உடல் சிலிர்க்கத் தொழுதார்கள்.

முபாரக் தாத்தா எவ்வளவோ மனத்தைக் கட்டுப்படுத்தித்தான் தொழுதார். ஆனால்...

எல்லோரும் மீண்டும் எழுந்து நின்றார்கள். தாத்தாவும் எழுந்து நின்றார். அவருடைய குழி விழுந்த கண்களிலிருந்து 'பொல பொல' வெனக் கண்ணீர்த் துளிகள் சிதறி விழுந்தன. புதிய ஜமுக்காளம் விரித்திருந்தபடியால், அந்தக் கிழவரின் கண்ணீர்த் துளிகள், தாமரை இலைமீது விழுந்த துளிகள் போல அப்படியே கிடந்து, அவரையே கவனித்துப் பார்த்தன.

இதற்குப் பிறகு என்ன கட்டுப்படுத்தியும் அவர் மனம் அவர் விருப்பப்படி இயங்கவே இல்லை. எங்கோ சென்று அவருடைய இற்றுப் போன உடலை உலுக்கிக் கொண்டிருந்தது.

ஒரு கண்ணீர்த் துளியில் சட்டென்று அவன் பேத்தி சல்மாவின் அழகான உருவம் தெரிந்தது. அதே சிரித்த முகம். அவளுடன் இணை பிரியாமல் இருக்கும் அந்த மைனா... அவளைச் சுற்றிச் சுற்றி வரும் அவள் ஆடு ரங்கிலா... அவள் ஆசையாக வளர்த்த மல்லிகைப் பூங்கொடி.... அவள் கையால் நட்டு வைத்த நீல ரோஜாச் செடி.... அவள் குதித்து விளையாடிய பட்டு நூல் ஊஞ்சல்...

முபாரக் தாத்தா மயக்கம் அடையும் நிலைமையில் இருப்பது போல உணர்ந்தார். நல்லவேளை சுதாரித்துக் கொண்டார். மனத்தை மிகவும் கஷ்டப்படுத்தி, தம் வழியே திருப்ப முயன்றார். இயலவில்லை.

இன்னொரு கண்ணீர்த் துளி அவரை உற்று நோக்கியது. யாரது அமீரின் உருவம். போன ரம்ஸான் ஈதுக்கு முன், அமீர் யாரென்று அவருக்குத் தெரியாது. அவனும் தொழத்தான் வந்திருந்தான். வரச் சில நிமிஷங்கள் தாமதமாகி விட்டன. அவனும் 'ஜமா'வில் சேர்ந்து தொழ எண்ணினான். சாதாரணமாகத் தொழ 'ஜமா' கூடும்போது, முதல் சில வரிசைகளில் வயதான பெரியோர்கள்தான் நிற்பது வழக்கம். இவன் இடம் தேடிக்கொண்டிருக்கும்போது, மூன்றாவது வரிசையில் கோடியில் நின்ற முபாரக் தாத்தா இவனைத் தம் பக்கத்தில் அழைத்து நிறுத்திக் கொண்டார். தொழுகை முடிந்தது. தொழுகை முடிந்ததும், மார்போடு மார்பை அணைத்து, தோளோடு தோள் சேர்த்து, அந்தச் சிறுவனை அணைத்துக் கொண்டார். அத்துடன் தம் இருதயத்தையும் அந்த அமீரிடம் பறி கொடுத்து விட்டார். என்னவோ அவனைக் கண்டதும் அவருக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது.

ஒரு சில மாதங்கள் கழிந்தன. எப்படியோ சல்மாவுக்கும் அமீருக்கும் கல்யாணம் என்று ஏற்பாடாகி விட்டது. அமீர் முதல்தாரத்தை இழந்தவனும்! எப்படி அந்தச் சிறு வயதுக்குள் அவனுக்குக் கல்யாணமாகி, எப்படி அவன் தன் மனைவியையும் இழந்து விட்டான் என்பதே ஆச்சரியமாக இருந்தது! அவன் அவ்வளவு நல்லவன்! நல்லவர்களைச் சோதனை செய்வதே ஆண்டவன் வேலையல்லவா!

"ஒரு தடவை,—'சேரா' கட்டி–மல்லிகைப் பூவினால் மணமகன் முகம் மறைக்க அணிவிக்கப்படும் மாலையோடு, வாழ்ப் பார்த்தது போதாதா! இனி வேண்டாம்!" என்று

அமீர் மறுத்தான்—தீர்மானமாக மறுத்தான்! ஆனால் அவன் தாயார் அதற்கு இடம் கொடுக்க வில்லை. காரணம், வரப் போகும் மருமகளிடம் அவள் சொக்கி விட்டாள். மூபாரக் தாத்தாவும் இதற்கு மனப் பூர்வமாக இசைந்தார். தன் பந்தம் நீங்க இந்தக் கடமையைச் செய்து விட்டால், மனச் சாந்தியுடன் ஹஜ் யாத்திரைக்குப் போய் வந்து விடலாம் என்று அவர் மனம் கோட்டை கட்டிக் குதூகலித்தது. காரியங்கள் மளமள வென நடந்தன. 'பாரம்பாத்' மாதத்தில் பெண் பார்த்தல்—அதே மாதத்தில் நல்ல நாளில் நிச்சயம் செய்தல்—பிறகு மதார், காதர் நல்ல மாதங்களில்லை என்று ரஜப் மாதத்தில் பந்தக்கால் நட, அந்த மாதக் கடைசியிலேயே நிக்காஹும் முடிந்து விட்டது. சல்மா விம்மி விம்மி அழுது, தன் தாத்தாவைப் பிரிய முடியாமல் பிரிந்து கணவன் வீட்டுக்குச் சென்றாள்.



மூபாரக் தாத்தாவின் கண்கள் மறுபடியும் பொல பொலவெனக் கண்ணீரை உகுத்தன.

டவுன் காஸியின் குரல் கணீரென்று கேட்டது—"அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!"

தொழுகையின் அடுத்த 'ரக்—ஆத்'துக்காக எழுந்து நின்றார்.

மூபாரக் தாத்தா எழுந்திருக்க முடியாமல் எழுந்து நின்றார். முழங்கால்கள் இற்றுப் போனதைப் போலத் தளர்ந்தன. தள்ளாடித் தம் உடலைச் சுமந்து எழுந்து நின்றார்.

கீழே சிதறிக் கிடந்த இன்னொரு கண்ணீர்த் துளி அவரைப் பார்த்துச் சிரித்தது.

அன்று அவர் வீட்டில் ஒரே கோலாகலம்—கல்யாணம் முடிந்து 'அஞ்சாம் வெள்ளிக் கிழமை'. அமீர் ஆரம்பத்தில் கல்யாணம் வேண்டாம் என்றாலும், தன் மனைவி சல்மாமீது உயிராக இருந்தான். அவன் தன் உயிரையே அவளிடம் ஒப்படைத்து விட்டான். அவ்வளவு சுலபத்தில் அவள் எப்படித் தன் தாத்தாவையும் மறந்து அவனிடம் ஐக்கியமாகி விட்டாள் என்பது அவளுக்கே புரியாத ஒரு புதிர்!

"டேய்! அமீர்! இன்னைக்கி மூணு தாழம்பூ கொண்டு வந்தாகணும்!"—இது அமீர் தாயாரின் குரல். அந்த சுபநாளில் தன் மருமகளுக்குத் தாழம்பூ வைத்துப் பின்ன அவளுக்கு ஆசை!

"கிடைச்சா பார்க்கலாம்!" என்று அமீர் சொன்னபோதிலும், எப்படியும் தாழம்பூவுடன் தான் திரும்புவது என்று அமீர் கிளம்பினான். அவன் அதிர்ஷ்டம் ஊரில் ஒரு மடல் கூடக் கிடைக்கவில்லை. பக்கத்துக் கிராமத்தில் ஏதோ தாழம்பூக்காடு இருக்கிற தென்று அங்கேயே சென்று விட்டான். அவன் அவசரம், தானே காட்டுக்குள்ளும் நுழைந்தான். தாழம்பூவிலிருந்த ஒரு பூ நாகம்......

நாலாவது கண்ணீர்த் துளியில் தன் சின்ன மருமகனின் ஜனாஸா அடக்கத்தின் காட்சியை மூபாரக் தாத்தா கண்டார்!......

அடுத்த கண்ணீர்—சல்மாவின் உருவம், ஆடாமல் அசையாமல், ஒரு வார்த்தையும் பேசாது, சோகச் சிலையாக அவள் இருந்த கோலம்...

ஆறாவது கண்ணீர்த் துளி......

யாரோ இரண்டு பாட்டிகள் பேசிக் கொண்டார்கள் — மெதுவாகத் தான்! பக்கத்தில் இருந்த சல்மா தூங்குவதாக எண்ணினார்கள். அவளுக்கு இனிமேலும் தூக்கம் உண்டா! ஒரேயடியாகத் தான் ஆண்டவன் அவளிடமிருந்து தூக்கத்தைப் பிடுங்கிக் கொண்டானே.

அவர்கள் பேசிக் கொண்டார்கள்......

"சின்னஞ் சிறுசு இதை இப்படியே விட்டுடறதா!"

"அமீருக்குத் தம்பி முறைமை உள்ளவன் கூட யாரோ இருக்கானுமல்ல..."

"நம்ம மஸ்ஹபுலேதான் இரண்டாம் கலியாணத்துக்கு இடமிருக்குதே!..."

"ஹா! எனக்கு மீண்டும் கல்யாணமா!" என்று பதறி எழுந்தாள் சல்மா. அவள் நெஞ்சடைத்தது! அமீர் போன்ற ஒரு கணவனுடன் வாழ்ந்து விட்டு, பிறகு மீண்டும் ...மேலே அவள் எண்ணவில்லை. எண்ண ஓட்டமே தடைப்பட்டது. ஏதோ அவள் நெஞ்சை அடைத்தது. நிரந்தர மௌனி ஆனாள்! பேதை! நிர்ப்பந்தமாக இரண்டாவது கல்யாணத்தை முடிக்க வேண்டும் என்று மஸ்ஹபில் கட்டளை! மணமகளுக்கு இஷ்டமில்லை யென்றால், அந்தக் கல்யாணம் சட்டபூர்வமாகாது என்பதை அவள் அறியவில்லையா......அல்லது......பிரிவைத் தாங்காது......

பொலபொல வென்று தாத்தாவின் குழி விழுந்த கண்கள் இன்னும் கண்ணீரைச் சிந்தின.

ஒரு கண்ணீரில்...அவர் சீராட்டி, பாராட்டி, வாழ்வின் ஊன்றுகோல் போல வளர்த்த அவர் அருமைப் பேத்தி சல்மாவின் ஜனாஸா—இறுதி ஊர்வலச் சடங்கு......

பிறகு 'துவா ஆ' முடிந்ததும், ஜனத் திரள் எல்லையற்ற உற்சாகத்துடன் எழுந்து, ஒருவரை மற்றவர் கழுத்தோடு கழுத்தாக அணைத்து, தம் தம் ஹிருதயத்தை இன்னும் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தது. மூபாரக் தாத்தாவையும் யாரோ மார்போடு அணைத்தார்கள். ஒரு வாலிபன் தான்! "ஈத் மூபாரக் தாத்தா!" என்றான். அவரும் அவனை அணைத்தார். கையில் வலிவில்லாமல் அவரால் அணைக்க முடியவில்லை. அந்த முதியவரிடம் ஆசி பெற அந்த வாலிபனுக்கு ஆவல்!

"ஈ...த்...மூபா...ரக்!" என்று அவர் வாய் முணு முணுத்தது. யாருக்கு ஈத் மூபாரக்!

கடைசியில் மிஞ்சி இருந்த ஒரு கண்ணீர்த் துளியும் அவர் கண்ணிலிருந்து உதிர்ந்தது.

"ம்...விதி!" என்றார் நீண்ட பெருமூச்சுடன்.

இரண்டே எழுத்துக்களால் கட்டப்பட்ட சுமைதாங்கிதானே—விதி!



19. பாடலிபுத்திரம்

வடநாட்டில் கங்கையும் சோணையாறும் கலக்கும் இடத்திற்கு அருகே பாடலிபுத்திரம் என்னும் நகரம் ஒன்று முன்னாளில் பண்புற்று விளங்கிற்று. மகத நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்த அம் மூதூர், அசோகன் காலத்தில் கலைவளம் பெற்றுத் தலையெடுத்து நின்றதென்று பாரத நாட்டு வரலாறு தெரிவிக்கின்றது.

தமிழ் நாட்டிலும் ஒரு பாடலிபுத்திரம் கெடில நதிக் கரையில் எழுந்தது. சமண சமயத்தைப் பேணி வளர்த்த அப் பெரும் பதியில் சான்றோர் பலர் வாழ்ந்தனர். அங்கிருந்த சமணப் பள்ளியில் பன்மொழிப் புலவர் பலர் பணியாற்றினர். செந்தமிழ்க் கல்வி செழித்தோங்கித் தழைத்தது.

இத்தகைய புகழ் பெற்ற நகரத்தின் அருகே அமைந்த திருவாமூர் என்ற சிற்றூரில் திருநாவுக்கரசர் பிறந்தார். மருள் நீக்கியார் என்னும் பிள்ளைப் பெயருடைய அவ் அறிஞர் இளமையிலேயே பெற்றோர் இருவரையும் இழந்தார். தமக்கையாகிய திலகவதியாரே தஞ்சம் எனக் கருதி வாழ்ந்தார். அம் மங்கைக்குப் பெரியதோர் இடர் வந்துற்றது. அவர்க்கு மணமகனாக உறுதி செய்யப் பெற்றிருந்த தலைமகன் திருமணம் நிகழ்வதற்கு முன்னமே போர்க் களத்தில் உயிர் கொடுத்துப் புகழ் கொண்டான். அக் கால வழக்கத்திற்கு ஏற்பத் திலகவதியார் கற்பு நெறி வழுவாமல் உயிர் துறக்கத் துணிந்தார்.

பன்னிரண்டு நிரம்பாத திலகவதியாரின் கருத்தை அறிந்தார் மருள்நீக்கியார்; மனம் பதைத்தார்; கண்ணீர் வடித்தார். தமக்கையின் அடிகளில் விழுந்து துடித்தார். "மங்கையர் திலகமே! அறியாப் பருவத்தில் தந்தையும் தாயும் இழந்தேன்; உம்மையே நம்பி உயிர் வாழ்கின்றேன்; என்னை நீரும் கைவிட்டால் ஏழையேன் என்ன செய்வேன்? எவ்வாறு உய்வேன்? உயிர் துறக்கும் கருத்தை நீர் மாற்றுவிட்

டால் நும் கண்ணெதிரே என் உயிரை மாய்ப்பேன்" என்றார்.

அருமைத் தம்பியார் வடித்த கண்ணீர் திலகவதியாரின் உள்ளத்தைக் கரைத்தது. வழக்கத்தைத் தழுவி இறப்பதோ? அன்றிக் கடமையைக் கருதி இருப்பதோ? என்ற கேள்வி அவர் மனத்தை அலைத்துக் குலைத்தது. ஆயினும் சிறிது பொழுதில் ஒரு நிலைப்பட்டது அவருள்ளம். உடன் பிறப்பு என்னும் பாசம் உடன்கட்டை யேறும் விருப்பத்தை வென்றது. தம்பியார் வாழ்தல் வேண்டும் என்னும் ஆசையால் ஊரார் கூறும் வசையையும் பொறுக்கத் துணிந்தார் திலகவதியார்.

"தம்பியார் உளராக வேண்டுமென
வைத்த தயா
உம்பர் உலகணையஉறு நிலைவிலக்க
உயிர் தாங்கி
அம்பொன்மணி நூல் தாங்காது
அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
திலகவதி யார் இருந்தார்!"

தயா - கருணை, நூல் - தாலி.

என்று அம் மங்கையின் தியாகத்தைப் பாடுகிறது திருத்தொண்டர் புராணம்.

தமிழ் மொழியில் உள்ள அருங் கலைகள் அனைத்தையும் கற்றுணர்தல் வேண்டும் என்ற ஆசை மருள் நீக்கியார் மனத்தில் நிரம்பி நின்றது. பல்கலைக் கழகம் என விளங்கிய பாடலிபுத்திரப் பள்ளியை நாடிற்று அவர் உள்ளம். அப் பள்ளியிலே சமண சமயப் பாடங்களோடு நீதி நூல்களும், அளவை நூல்களும், காவியங்களும் முறையாகப் படிப்பிக்கப்பட்ட செய்தி அறிந்து அளவிறந்த ஆர்வம் உற்றார்.

அந்நாளில் தமிழகத்தை அணி செய்த சமணப் பள்ளிகள் சிறந்த கல்விச் சாலைகளாகத் திகழ்ந்தன. கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த சான்றோர் பலர் அப் பள்ளிகளில் ஆசிரியராய் இருந்தனர்; தமிழ் மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் மாணவர்களைப் பயிற்றினர். அதற்குச் சாதனமாக நிகண்டுகளும் இலக்கணங்களும் இயற்றினர். சாதி மத வேற்றுமையின்றி மாணவராக வந்தடைந்த இளைஞர்க்கெல்லாம் மாசறக் கல்வி பயிற்றிய காரணத்தால் பள்ளி என்னும் சொல் கல்விச் சாலையைக் குறிப்பதாயிற்று. பள்ளிக்கு வைத்தல் என்றால் படிக்க வைத்தல் என்று கருதினர் கற்றோரும் மற்றோரும். எனவே,—தமிழ் நாட்டில் உள்ள கல்விச் சாலைகள் பள்ளி என்றும் பள்ளிக்கூடம் என்றும் பெயர் பெற்றன.

இத்தகைய பள்ளிகளுள் தலைமை சான்ற பாடலிபுத்திரப் பள்ளியில் மாணவராகச் சேர்ந்தார் மருள் நீக்கியார்.

திருத்தொண்டர் புராணம் இச் செய்தியைத் தெரிவிக்கின்றது. பள்ளியில் மட்டற்ற ஆசையோடு கலை பயின்றார் மருள் நீக்கியார். அங்கு அருங்கலை பயிற்றிய சமணச் சான்றோர்களின் சீலமும் புலமையும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. சமண சமயமே மேலான சமயம் என்னும் கருத்து அவ் இளமையுள்ளத்தில் மெல்ல அரும்பிற்று. தெள்ளிய அறிவும் திருந்திய சொல்வன்மையும் வாய்ந்த மருள் நீக்கியார் படிப்படியாக உயர்ந்து அப்பள்ளியின் தலைவர் ஆயினார். அந்நிலையில் மருள் நீக்கியார் என்ற பெயரை நீக்கி அவர்க்குத் தரும சேனர் என்ற பெயரை இட்டனர் சமணச் சான்றோர். சேனர் என்பது சமண சமயத்தில் உயர்ந்த நிலை அடைந்தோர்க்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. அப்பெயர் பெற்ற சிலர் தேவாரப் பாட்டிலே குறிக்கப் படுகின்றனர்.

"சந்துசேனனும் இந்துசேனனும்
தருமசேனனும் கருமைசேர்
கந்துசேனனும் கனகசேனனும்"

என்ற திருஞான சம்பந்தர் பாசுரத்தில் சமண சமயத்தில் சிறப்புற்று விளங்கிய சில பெயர்களைக் காணலாம்.

அக்காலத்தில் பல்லவ குல மன்னர் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு தமிழ் நாட்டை ஆண்டு வந்தனர். அம் மன்னருள் ஒருவன் மகேந்திர வர்மன். அவன் சமண சமயத்தைச் சார்ந்தவன். அச் சமயத்தைப் பேணி வளர்த்தவன். அவன் ஆதரித்த மதம் தமிழகத்தில் செழித்து ஓங்கி வளர்ந்தது. வாக்கு வாதம் பட்டி மண்டபங்களில் பாங்குற நிகழ்ந்தது.

சமணப் பள்ளியின் தலைவராக வீற்றிருந்த தருமசேனர் புத்தரோடு வாக்கு வாதங்கள் புரிந்து வெற்றி பெற்றார். அதனால் அவரது புகழ் எங்கும் பரந்தது.

"அந்துறையின் மீக்கூரும்
அமைதியினால் அவ்விடத்தில்
சிந்தநிலை அறியாத
தேரரையும் வாதின்கண்
உய்த்தஉணர் வினில்வென்றே
உலகின்கண் ஒளியுடைய
வித்தகராய் அமண்சமயத்
தலைமையினில் மேம்பட்டார்"

தேரர்—புத்த முனிவர்

என்று பெரிய புராணம் பாடிற்று. பாடலிபுரப் பள்ளியின் பெருமை யெல்லாம் தன் பெருமை ஆக்கிக் கொண்டார் தரும சேனர் என்று தமிழகம் அவரைப் போற்றிப் புகழ்ந்தது.

புதிய

ASPRO

REG. TRADE MARK




'ஆஸ்ப்ரோ'

வலி மற்றும் ஜூரத்தை

அதி துரிதமாக

நிறுத்துகிறது!



புதிய 'ஆஸ்ப்ரோ'

ஒன்று தான் இந்த எல்லா அனுகூலங்களும் கூடியது.

✱ **உதிரி வில்லைகளே கிடையாது!** வில்லைகள் உதிரியாக இருந்தால் தூசியும் ஈரமும் அதை எளிதில் பாதித்து, அதன் விளைவாக வயிற்றுக்கு கோளாறு ஏற்படக் கூடும். புதிய 'ஆஸ்ப்ரோ' பரிபூரண பாதுகாப்புடையதாக இருப்பதற்கு காரணம் ஒவ்வொரு வில்லையும் தனித்தனியாக, காற்றுப்புகாத வகையில் விசேஷ முறையில் மூடி உறையிடப்பட்டுள்ளது.

✱ **பாதுகாப்பு!** 'ஆஸ்ப்ரோ' இருதயத்திற்கோ, வயிற்றுக்கோ கெடுதி விளைவிப்பதில்லை. துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்து எதுவும் இதில் சேர்க்கப்படவில்லை. புதிய 'ஆஸ்ப்ரோ'வை குழந்தைகள் கூட பயமின்றி உட்கொள்ளலாம்.

✱ **மதிப்பு:** இரண்டே அணா செலவில் உங்களுக்கு துரிதமாக வேலை செய்யும் மூன்று புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கிடைக்கின்றன. எவ்வளவு மலிவு!

புதிய 'ஆஸ்ப்ரோ' ஒரு அற்புதமான புதிய முறையில் தயாரிக்கப்படுவதன் காரணமாக, அதை உட்கொண்டவுடன் மூன்று க்ஷணத்திற்குள்ளாகவே அதன் வேலையைத் தொடங்கி விடுகிறது. இப்பொழுது உங்களுடைய சகலவிதமான நோவுகள், தலைவலி, ஜலதோஷம் மற்றும் ஜுரத்தை வேறெந்த மருந்தைக் காட்டிலும் மிக துரிதமாக நிவர்த்திசெய்யக்கூடிய புதிய 'ஆஸ்ப்ரோ' கிடைக்கின்றது. 'ஆஸ்ப்ரோ' இருதயம் அல்லது வயிற்றுக்கு எவ்வித கெடுதியும் விளைவிக்காது.

276-TAM

✱ **தாமதிக்காதீர் — இன்றே புதிய 'ஆஸ்ப்ரோ' கேட்டு வாங்குங்கள்**


தெம்பூட்டுகிறது,
மணமூட்டுகிறது!
மலரின் பனித்துளிகள் போல புதுமையையும், ரம்மிய மணத்தையும் உங்கள் மேனியில் பெய்கிறது எக்லா டால்க். குளித்தபின், உடையணியுமுன் உடம்பில் எக்லா டால்கம் பவுடரைப் பூசுங்கள்.
வெப்ப நாளிலும் குளுமை, இதம் அளிப்பது எக்லா. அது வியர்வையை உறிஞ்சும். மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட.
கால்கேட்
எக்லா
டால்க்பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE
இந்தியா விரும்பும் நறுமண டால்க்
EC/G/I



அத்தியாயம் 15

அன்னையின் ஆசி

நான் கட்டிலில் படுத்துக் கொண்டு விசித்து விசித்து அழுது கொண்டிருந்தேன். தோளின் மேல் ஒரு அன்புக் கரத்தின் ஸ்பரிசத்தை உணர்ந்தேன். திரும்பிப் பார்த்தேன். "ஆகா! நீங்களா!" என்றேன். அவர் பரிவோடு என் கண்களைத் துடைத்தார். ஆகா! அந்த அன்பில் தான் என்ன ஆறுதல் ஏற்பட்டது?

"இந்து! ஏன் அழுகிறாய்? நான்தான் வந்து விட்டேனே!" என்று சொல்லிப் புன்னகை புரிந்தார். "ஏன் என்னை விட்டு விட்டுப் போனீர்கள்?" என்று கோபித்துக் கொண்டேன். "இனி மேல் விட்டு விட்டுப் போக மாட்டேன், இந்துமதி! இப்போது உன்னை அழைத்துக்கொண்டு போவதற்குத் தானே வந்திருக்கிறேன். எனக்கு வேலை கிடைத்து விட்டது. அஸ்ஸாமுக்குப் போகிறேன். உடனே என்னுடன் புறப்பட்டு வா" என்றார் ரங்கதுரை. நானும் கூடப் புறப்பட்டு விட்டேன். நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றோம்.

ரயிலில் ஏறி உட்கார்ந்தோம். உலகத்தையே மறந்து நான் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தேன். ரயில் வேகமாக ஊதும் சத்தம் கேட்டது.

திடீரென்று கண் விழித்தேன். ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் உள்ள நாற்காலியில் சாய்ந்து கொண்டு கனவு கண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். ரயில் ஒரே கடபுடா என்ற சத்தத்துடன் வந்து நின்றது. 'என்ன இன்பகரமான கனவு? நான் வேறு எப்போதும் அவ்வளவு நன்றாக ரங்கதுரையைக் கனவில் பார்த்ததில்லை. எப்போதும் ஏதோ லேசாகத்தான் கனவு காண்பேன். உடனேயே மறந்தும் போய் விடும். ஆனால் அந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நான் கண்ட கனவு இன்னும் என்னுடைய நெஞ்சை விட்டு அகல வில்லை. ரங்கதுரையின் கணீர் என்ற குரல்தான் எவ்வளவு நிஜமாக இருந்தது?

அருகிலிருந்த சிறிய பெட்டியை எடுத்துக் கொண்டு துயரத்துடன் ரயிலில் ஏறினேன். அன்று எனக்கு உலகத்திலிருந்த ஆஸ்தியெல்லாம் அந்தப் பெட்டியும், கழுத்தில் நான் அணிந்து கொண்டிருந்த என் அருமை அன்னையின் சங்கிலி ஒன்றும் தான். ரயிலில் ஏறி உட்கார்ந்த எனக்கு

என்னுடைய நிலையைப் பற்றி எண்ணிய பொழுது சிரிப்புத்தான் வந்தது. எப்படியெல்லாம் நினைத்தேன்! என்னவெல்லாம் கனவு கண்டேன். என் வாழ்க்கையே கனவாகி விடுமோ என்று எண்ணினேன்.

உண்மைதான். 'இல்லா விட்டால் இருபத்து மூன்றுவது வயதில் இப்படி இந்தச் சிறையில் அடைபட்டுக் கிடப்பேனா? தண்டனையை எதிர் நோக்கி, இங்கே அடைந்து கிடக்கும்போது வாழ்க்கையைக் 'கனவு' என்று எண்ணினால் தான் ஆறுதல் ஏற்படுகிறது.

நான் உட்கார்ந்திருந்த பெட்டியில் ஆடவர்கள் நாலைந்து பேர் மாத்திரம் இருந்தனர். விடியற்காலை சுமார் நாலரை மணி இருக்கு மென்று எண்ணினேன். எனக்கு அந்தப் பெட்டியில் உட்கார்ந்திருக்கக் கூச்சமாக இருந்தது. அதை விட்டு இறங்கி ஸ்திரீகள் பெட்டியைத் தேடினேன். அன்று அதில் ஒருவருமே இல்லை. தனியாக ஏறி உட்காரவும் பயமாக இருந்தது. இரண்டு மூன்று மூன்றுவது வகுப்பு வண்டிகளைப் பார்த்த பிறகு ஒரு பெட்டியில் ஒரு வயதான மாது படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அதில் நான் ஏறியதும் ரயில் புறப்பட்டது. உட்கார இடமில்லை. நின்றுகொண்டே இருந்தேன். ஜன்னலைப் பிடித்துக்கொண்டு ஏதோ யோசனைகளில் ஆழ்ந்தேன்.

முகத்தில் ஜிலுஜிலு வென்று பனிக் காற்று வீசவே என் மனத்தில் சற்றுத் தெளிவுண்டாயிற்று. சிந்தனா சக்தியும் ஏற்பட்டது. 'நான் செய்த காரியம் சரிதானா?' என்று என்னையே நான் ஆயிரந் தடவைகளுக்கு மேல் கேட்டுக் கொண்டாகி விட்டது.


நான் சுலோசனாவிடம் கூடச் சொல்லாமல் வந்தேனே. அது சரியா? சுலோ என்ன நினைத்துக் கொண்டிருப்பாள்? ஆனால் நான் வேறு என்ன செய்திருக்க முடியும்? அங்கே இருப்பது இயலாத காரியமாகி விட்டது. எனக்காக அப்பாவும், பெண்ணும் என்ன சண்டை போட்டுக் கொண்டார்கள்? அங்கு இருந்தாலும் கஷ்டம் தான். என்னால் அந்தக் குடும்பமே கலைந்து போவதைப் பார்த்துக் கொண்டு சும்மா யிருக்க முடியுமா? ஏதும் செய்வதற்குச் சக்தியற்ற நிலையிலிருக்கும் போது, விலகிப் போவது தானே சிறந்த வழி? நான் சுலோசனாவிடம் வைத்திருக்கும் அன்பினால் தானே அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டேன்? எனக்காக அவள் தன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வதை நான் எப்படி மனதாரப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

அப்பப்பா! அங்கே நடந்த ரகளையை நினைத்தாலே தூக்கிவாரிப் போடுகிறது. சுலோ நினைத்த மாதிரி விஷயம் அவ்வளவு சுலபமானதாக இல்லை. பத்மநாபன் துணிந்து விட்டார். எதற்கும் அஞ்ச வில்லை. அவருடைய அருமை மனைவியும் அவர் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

என்னை ஈசுவரமூர்த்திக்கு விற்பதற்குத் தேதி குறிப்பிட்டு விட்டார்கள். இதை மிகவும் ரகசியமாகச் சில நாட்களுக்கு வைத்துக் கொண்டிருந்தார்கள் போலிருக்கிறது. ஒரு நாள் சுலோவுக்கு இது எப்படியோ தெரிந்து போய் விட்டது. எப்படியென்று இப்போது ஞாபகமில்லை.

சுலோசனா தன் காலேஜ் மாணவிகளுடன் ஒரு வாரம் எங்கேயோ வெளியூர் போவதாக இருந்தாள். அந்தச் சமயத்தில் இதை நிச்சயம் செய்திருந்தார்கள். ஆகவே சுலோசனாவுக்கு அவர்களுடைய சூழ்ச்சியை நினைத்து ஆத்திரம் வந்ததில் வியப்பில்லை அல்லவா? நேரே பத்மநாபனிடம் சென்று அப்படிச் செய்வது அநியாயம் என்று கூறினாள் போலிருக்கிறது.

பத்மநாபன் அறையில் ஒரே சத்தமாக இருந்தது. நான் என்னவென்று பார்ப்பதற்காக நான்கு அடிகள் எடுத்து வைத்தேன். அதற்குள் சுலோ



வின் குரல் கேட்கவே, திக்பிரமை அடைந்து விட்டேன். அவள், "நீங்கள் என்ன சத்தம் போட்டாலும் நான் பயந்துவிட மாட்டேன், அப்பா! இந்துமதியை ஒரு கிழவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதாவது? பச்சைக் குழந்தை அவள். அப்படிச் செய்தால் மகா பாவம். என்னை அவருக்குக்கல்யாணம் பண்ணிக்கொடுத்து விடுங்களேன். உங்களுக்கும் சௌகரியமாக இருக்கும். அந்த சனீச்வரனின் மூக்கைத் திருக எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்" என்றாள்.

"சீச்சீ! நீயும் ஒரு பெண்ணுட்டமா எனக்கு வந்து பிறந்தாயே? தலையிலெழுத்து. ஏ!. சுலோ! இந்த விஷயத்தில் நீ தலையிட்டுக் கொள்ளாதே. இந்துவைப் பார்த்துக் கொள்வதாக அப்பா ஏற்றுக் கொண்டாரா? நீ ஏற்றுக் கொண்டாயா? அவரவர்கள் தங்களுடைய காரியத்தைப் பாருங்கள்." இது கோமளவல்லி யம்மாளின் குரல்.

"செத்துப் போன மனுஷர் இந்துவைக் காப்பாற்றச் சொல்லி அப்பாவைக் கேட்டுக் கொண்டார். ஆனால் நான் யாரும் கேட்காமலேயே அவளைப் பார்த்துக் கொள்வதாகத் தீர்மானித்துக் கொண்டேன். கேட்டுக் கொண்டும் நீங்கள் கடமையைச் சரியாகச் செய்ய வில்லையே? அப்போது அது என்னுடைய கடமையாகிறது."

"சுலோ! நாவை அடக்கிப் பேசு. எனக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியும். உன்னிடம் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை."

"நான் கற்றுக் கொடுத்தாகவேண்டியிருக்கிறது. இந்துமதியின் குங்குமத்துறை வீட்டை நீங்கள் எதற்காக விற்றீர்கள்? அது ரொம்ப சரியான காரியமோ?" என்றாள்.

"அதைப் பற்றி நீ கேட்க வேண்டியதில்லை. நான்தானே அவளுக்குக் 'கார்டியன்?' அதை விற்க எனக்கு உரிமை உண்டு" என்றார் வக்கீல்.

சுலோ தன் குரலைத் தணித்துக் கொண்டாள். என்ன சொன்னாளென்று காதில் விழவில்லை. வைர விஷயமாகத்தான் ஏதோ சொல்கிறாள் என்று ஊகித்தேன்.

"அடி சண்டாளி! பாதகி. என்ன சொல்லுகிறாய்? உன்னைக் கொன்று விடுவேன். இதற்குத்தான் பெண்களைப் படிக்க வைத்துச் சுதந்திரம் கொடுக்கக் கூடாது என்பது. உன் பேரில். சிறிதும் தவறில்லை. நான் உன்னை அப்படிக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டேன்."


"ஆமாம். பெண்களைப் படிக்க வைப்பது தவறுதான். ஏனென்றால் உங்களைப் போன்றவர்கள் செய்யும் அநியாயங்களைத் தடுத்து விடுவார்களே."

"எதடி அநியாயம்?" என்று கோமளவல்லி அம்மாள் சீறினார்.

"அவள் எப்படிப்பட்ட குற்றத்தைச் செய்து விட்டு இங்கு வந்திருக்கிறாள் தெரியுமா? அதைப் பற்றி வெளியில் தெரிந்தால் என்ன ஆகும் என்பது நினைவில் இருக்கட்டும். ஈசுவரமூர்த்தி அப்படி ஒன்றும் நேராமல் அவளை நன்றாகப் பார்த்துக் கொள்வார். இதில் என்ன தவறு?"

"அப்பா! உங்களுக்கு மனச் சாட்சி என்று ஒன்று இருக்கிறதா?"

ரமேஷின் குரல்கேட்டது. "ஷீலா! நீ வீணாக எதற்குப் பேசுகிறாய்? விஷயத்தை மாத்திரம் சொல்லு. மற்றதைப் பற்றிப் பேசாதே. 'இந்துவை ஈசுவர



மூர்த்திக்குக் கொடுக்கக் கூடாது.' விஷயம் அவ்வளவுதானே. 'நீ ஏன் அதை விட்டு வரம்பு மீறிப் பேசுகிறாய்?'' என்றார்.

என் மனம் நன்றியால் நிறைந்தது. சுலோசனா இத்தனை கெட்டிக்காரியாக இருந்தும் அவளுக்குச் சற்று ஆத்திரம் அதிகம். ரமேஷ் அமைதியான ஆழ் கடலை ஒத்தவர். அவரிடம் சலனத்தையே காண முடியாது.

முதலில் சில நாட்களுக்கு ரமேஷ் என்னிடம் பிரியமாகப் பேசியபோது கூடப் பயமாக இருந்தது. ஏற்கெனவே அனுபவித்திருந்த துன்பங்களி



னால் என் மனம் அடியோடு கலங்கிப் போயிருந்தது. நல்லதெல்லாம் கூடக் கெடுதலாகப் பட்டது. ரமேஷ் ஒரே மாதிரிதான் இருந்தார். ஆனால் என் மனம் முதலில் கலங்கியிருந்தது. தெளிந்த பிறகு தான் அவர் ஒரு உத்தமர் என்று தெரிந்து கொண்டேன். மேல் நாட்டு நாகரிகம் அவருடைய வெளியுலகில்தான் புகுந்திருந்தது. அவரது உள்ளம் தூய்மையாக இருந்தது.

ஆயினும் அவர் எனக்காகப் பத்மநாபனிடம் பரிந்து பேசுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதை விரும்பவும் இல்லை. அப்படி அவர் எனக்காகப் பரிந்து பேசினால் அதற்கு அவர்கள் விகல்பமாகப் பொருள் கற்பிப்பார்கள் என்பதை நான் நன்கு உணர்ந்திருந்தேன். நான் நினைத்தது வீண் போகவில்லை.

"உனக்கும் பொடி போட்டு மயக்கி விட்டாளா, அந்தப் பாதகி!'' என்று கோமளவல்லி அம்மாள் இரைந்தார்.

ரமேஷ், "அம்மா! அப்படியெல்லாம் திடீரென்று எதையாவது சொல்லாதே. பிறகு ரொம்ப வருத்தப்படுவாய். பேசும் போது சற்று யோசித்துப் பேசுங்கள்'' என்றார்.

பிறகு எல்லாரும் சற்றுத் தணிந்த குரலில் பேச ஆரம்பித்தார்கள். எனக்கு ஒன்றும் காதில் விழவில்லை. எவ்வளவு கேட்க வேண்டுமோ அவ்வளவு கேட்டாகி விட்டது. மெதுவாக என் அறைக்குச் சென்றேன்.

அறையில் சென்றதும் அம்மாவின் படத்துக்கு நமஸ்கரித்தேன். "அம்மா! நான் இனிமேல் இங்கிருப்பது சரியில்லை. நான் இதை விட்டுப் போய் விடுகிறேன். நீ என்னுடன் துணைக்கு வா'' என்று வாய்விட்டுக் கூறினேன். ஜன்னல் வழியாகக் காற்று வீசியது. அம்மாவின் படத்தின் மேல் வைத்திருந்த ரோஜாப் புஷ்பம் என் தலை மீது விழுந்தது. அது எனக்கு அம்மா நான் சொன்னதைச் சம்மதித்து, ஆசீர்வதித்தது போல் தோன்றியது.

என்னுடைய சிறிய பெட்டியில் முக்கியமான சில சாமான்களையும், என்னுடைய நாலைந்து புடவைகளையும் எடுத்து வைத்துக் கொண்டேன். அதைக் கட்டிலுக் கடியில் தள்ளி விட்டு, கட்டிலின் மேல் உட்கார்ந்து யோசித்தேன்.

சுலோவிடம் சொல்லி விட்டுப் புறப்பட முடியாது. சொன்னால் அவளுக்கும் கஷ்டம்; எனக்கும் கஷ்டம். போவதைத் தவிர வேறு வழியே இல்லை. அங்கிருந்தால் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்துவார்கள். அது நிச்சயம். அதனால் மேலும் மேலும் சுலோ அவர்களுடன் சண்டை பிடிப்பாள். அதற்கு இடங் கொடுக்கக் கூடாது. இந்த எண்ணம் எனக்குக் கடந்த ஒரு மாத காலமாகத் தோன்றிக் கொண்டிருந்தது. இன்றுதான் நிச்சயமாயிற்று. சென்ற ஒரு மாதமாகவே பத்திரிகையைப் பார்க்கும் போதெல்லாம், 'போவதாக இருந்தால் எந்த ஊருக்



குப் போகலாம்?' என்று பார்க்கத் தொடங்கினேன்.

ஒரு நாள், கூனூரில் ஒரு சேவா ஆசிரமம் இருப்பதாகவும் அதில் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள ஆள் தேவையாக இருப்பதாகவும் ஒரு சிறிய விளம்பரத்தைப் பார்த்தேன். அதை ஒரு காகிதத்தில் குறித்துப் பெட்டியில் வைத்திருந்தேன். 'சம்பளம் வேண்டாம், வேலை செய்கிறேன் என்றால் சாப்பாடு போட மாட்டார்களா? எப்படியாவது காலத்தை ஓட்டி விடலாம். கையில் ஐந்து ரூபாய் பணம் இருக்கிறது. சுலோவின் டிராயரிலிருந்து பத்து ரூபாய் எடுத்துக் கொண்டால் போதும்' என எண்ணினேன்.

காகிதத்தை எடுத்துச் சுலோவுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

அன்புக்குரிய சுலோ!

உன்னை நான் என்றும் மறக்கவே முடியாது. உன் அன்புக்கு ஈடாக நான் எதையும் தரவே முடியாது. உன்னைப் பற்றிய நினைவே என் எண்ணத்தையெல்லாம் இனிக்கச் செய்கிறது. உன்னையும், ரமேஷையும் போன்றவர்கள் இருப்பதால்தான் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது.

நான் போய் விட்டேனே என்று நீ வருந்த வேண்டாம். உன்னிடம் சொன்னால் நீ என்னைப் போகக் கூடாது என்பாய். ஆனால் நான் போய்த்தான் ஆக வேண்டும். உனக்கு நான் செய்யக் கூடிய கைம்மாறு அதுதான்.

என் இதயத்தில் உன் உருவம் என்றும் நிலைத்திருக்கும். உனக்கு வாழ்க்கையில் ஆனந்தமும், அன்பும் தழைத்து ஓங்க அருள்புரியும்படி நான் எங்கிருந்தாலும் பிரார்த்தனை செய்து கொண்டே இருப்பேன்.

ரமேஷுக்கு என் அன்பு நிறைந்த நமஸ்காரங்களைச் சொல்லு. குழந்தைகள் மீரா பாலு இருவருக்கும் என் அன்பு. உங்களை விட்டுப் போக எனக்கே வருத்தமாக இருக்கிறது. ஆனால் வேறு வழியில்லை. என் அருமை அன்னை இங்கிருந்து என்னைப் புறப்படச்சொல்லிவிட்டார். அவர் என்னைக் காப்பார். நீ கவலைப்பட வேண்டாம். இந்தக் குழப்பங்களெல்லாம் தீர்ந்து, நாம் சந்திக்கும் நாள் விரைவில் வர வேண்டுமென்று பிரார்த்தனை செய்.

உன் மேஜை டிராயரிலிருந்து பத்து ரூபாய் பணம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். என்னைத் தேடுவதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்யக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்துமதி

என்று எழுதிக் கடிதத்தை ஒரு கவரில் போட்டு ஒட்டினேன்.

அத்தியாயம் 16

டிக்கட் பரிசோதகர்

கவரை எடுத்துக்கொண்டு சுலோவின் அறைக்குச் சென்றேன். சுலோ அறையில் இல்லை. அவளுடைய மேஜையிலுள்ள அறையைத் திறந்து கடிதத்தை வைத்து விட்டு வந்தேன். அன்றைய தினப் பத்திரிகையை எடுத்துப் புரட்டினேன். கூனூருக்குப் போகும் ரயில் புறப்படும் நேரத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்.

மெதுவாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு பின்பக்கமாகப் புறப்பட்டு விட்டேன். வீட்டின் பின்புறத்தில் 'கேட்' இருக்கிறது. அதன் வழியாகச் சென்றேன். அதிர்ஷ்டவசமாக என்னை ஒருவரும் பார்க்கவில்லை. "போகாதே, போகாதே!" என்று ஒரு குரல் கூறிக் கொண்டேயிருந்தது. ஆனால் நான் திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடந்தேன். டாக்ஸி ஸ்டாண்டுக்குச் சென்று ஒரு டாக்ஸி வைத்துக் கொண்டு ஸ்டேஷனை அடைந்தேன்.

ஸ்டேஷனில் எனக்குத் திக்கு திசை புரியவில்லை. மனத்தில் துயரமும் சேர்ந்து பாறாங்கல்லாக அழுத்திக் கொண்டிருந்தது. டிக்கட் வாங்குமிடம்கூட எனக்குத் தெரியாது.

டாக்ஸி டிரைவருக்குப் பணம் கொடுக்கும்போது "டிக்கட் வாங்குமிடம் எது என்று காட்டப்பா!" என்றேன். அவன் உடனே, "நான் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறேனம்மா!" என்றான்.



புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலில் சுரணையுள்ள இடங்களிலும் பவுடரை நன்ருக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.

நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.



சார்மிஸ்

டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோஹரமான நறுமணமுள்ளது.

CH-1 8/2

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரையில் சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறுநீரும் குறைகிறது. 3வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்கு மேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

•

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0

(பாக்கிங், தபால் செலவு இனம்)

•

Venus Research Laboratory (K.M.)

POST BOX No. 587, CALCUTTA

"கூனூருக்கு ஒரு மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்கிக்கொண்டு, வா" என்று கூறிப் பத்து ரூபாய் பணம் கொடுத்தேன். அவன் பத்து நிமிஷங்களில் டிக்கட் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். உடனே அந்தக் கூட்டத்தில் மறைந்து விட்டான். நானும் கூனூர் செல்லும் வண்டியைத் தேடிப் பிடித்துச் சற்றுக் கூட்டமாக இருந்த பெட்டியாகப்பார்த்து ஏறிஉட்கார்ந்து கொண்டேன். ரயில் புறப்பட்டது. எனக்கு எதையோ பறி கொடுத்து விட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது; உலகத்தில் இத்தனை பேர் இருக்கிறார்கள். ஆனால் நான் தன்னந் தனியாக நிற்கிறேன். என்ன விந்தையான உலகமிது? பெட்டியைத் திறந்து என்மீது மிகவும் அன்பாக இருந்த சுசீலாதேவி அவர்கள் அளித்த புனித பைபிள் புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன். அதிலுள்ள படங்களைப் பார்த்தபோது என்னுடைய கஷ்டங்கள் மறந்து சிறிது மன ஆறுதல் ஏற்பட்டது.

சுலோசனுவும் நானுமாகச் சேர்ந்து அந்தப் பைபிளிலிருந்து சில சிறிய கதைகளை வாசித்திருக்கிறோம். அந்தக் கதை யுலகுக்குச் சென்று சிறிது நேரம் என்னை மறந்திருந்தேன்.

நான் இந்த உலகத்துக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இரவு சுமார் ஒரு மணி இருக்கும். ஒரு டிக்கட் பரிசோதகர் வண்டியில் ஏறினார். ஒவ்வொருவர் டிக்கட்டாகப் பரிசீலனை செய்து கொண்டு வந்தார். நான் என்னுடைய டிக்கட்டைக் கொடுத்தேன். அதை வாங்கிப் பார்த்த அவர், என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்று என் உள் மனம் சொல்லிற்று.

டிக்கட் பரிசோதகர், "நீ எந்த ஊருக்கு டிக்கட் வாங்கினாய்?" என்று என்னிடம் கேட்டார்.

"கூனூருக்கு" என்று நான் பதில் சொன்னேன்.

"டிக்கட்டைப் பார்" என்று கையில் கொடுத்தார். அதில் 'அரக்கோணம்' என்று எழுதி யிருந்ததைப் பார்த்ததும் எனக்குச் சப்தநாடியும் ஒடுங்கிப் போய் விட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் அயர்ந்து போய் விட்டேன். டாக்ஸிக்காரன் ஏமாற்றி விட்டான் என்று எப்படிச் சொல்வது?

டிக்கட் பரிசோதகர் என் நிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்டார். அவர் மிகவும் இரக்க சுபாவமுள்ளவர் எனத் தோன்றியது. என்னிடம் அவர் மிகவும் பிரியமாகப் பேசினார்.

"என்ன தவறு ஏற்பட்டது, அம்மா?" என்று கேட்டார்.

"நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன், ஸார். ஸ்டேஷனில் ரொம்பக் கூட்டமாக இருந்தது. நான் வந்த டாக்ஸி டிரைவரிடம் பத்து ரூபாய்



பணம் கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டு வரச் சொன்னேன். இந்த டிக்கட்டும் மீதிச் சில்லறையையும் கொடுத்தான். நான் அதைப் பார்க்கக் கூட இல்லை, ஸார்! ரயிலுக்கு நேரமாகி விட்டபடியால் ஓடி வந்து ரயிலேறி விட்டேன். அவ்வளவுதான் தெரியும்" என்றேன். பொங்கி வந்த கண்ணீரை என்னால் அடக்க முடியவில்லை. பெட்டியில் இருந்தவர்கள் எல்லாரும் எங்களைப் பார்க்கவே எனக்கு ரொம்ப அவமானமாக இருந்தது. யாரோ ஒருவர், "த்சு, த்சு!" என்றார். அதைத் தொடர்ந்து சிரிப்பின் ஒலியும் கேட்டது. எனக்கு உண்டான அவமானத்தைச் சொல்லி முடியாது.

பரிசோதகர் ஒருவர்தான் மனிதத் தன்மையோடு நடந்து கொண்டார்.

"ஏனம்மா! உன்னைப் பார்த்தால் படித்த பெண்ணாகத் தோன்றுகிறதே. எவனோ டிக்கட் வாங்கிக் கொடுத்தால் உடனே அதைப் பார்க்க வேண்டாமா, அம்மா? இப்படி ஏமாந்து போகலாமா?" என்று கேட்டார். அவராவது நான் சொல்வதை நம்புகிறாரே என்று எனக்கு மிகுந்த ஆறுதல் ஏற்பட்டது.

"நான் ரயில் நின்றதும் இறங்கி விடுகிறேன், ஸார்!" என்றேன்.

"உன்னிடம் பணமே இல்லையா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை" என்றேன்.

"உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது? என் கடமையைச் செய்துவிட வேண்டும். ரயில் நின்றதும் இறங்கிவிடு" என்றார்.

அப்போதுதான் அவர் முகத்தை நான் நிமிர்ந்து பார்த்தேன். சற்று வயதானவர். கண்களில் கருணை பிரகாசித்தது. அவரிடம் எனக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் நான் இறங்கினேன். அவரும் கூடவே இறங்கினார்.

நான் அளவில்லாத சோர்வுடன் ஸ்டேஷனில் கிடந்த பெஞ்சின் மீது உட்கார்ந்தேன். கையில் இருந்த சில்லறையை எண்ணினேன். ஒரு ரூபாயும் பத்தணாவும் இருந்தது. இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று யோசித்தேன். அந்த ஸ்டேஷனில்தான் எப்படி இருக்க முடியும்? பெட்டியின் மேல் கவிழ்ந்து கொண்டு விசித்து விசித்து அழுதேன்.

யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. எழுந்து உட்கார்ந்தேன். அந்த டிக்கட் பரிசோதகர்தான் நின்று கொண்டிருந்தார். "அழாதே, அம்மா! உனக்குச் சொந்த மனிதர்கள் யாரும் இல்லையா?" என்று கேட்டார்.

"நான் யாருமற்ற அனாதை, ஸார். என் அப்பா அம்மா இரண்டு பேரும் இறந்து போய் விட்டார்கள். கூனூருக்குச் சென்று அங்கே உள்ள ஒரு அனாதாசிரமத்தில் சேர்ந்து விடலாமென்று போய்க் கொண்டிருந்தேன். அது இப்படியாகி விட்டது. கையில் டிக்கட் வாங்குவதற்குக் கூடப் போதுமான பணம் இல்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை" என்றேன்.

அப்போது எனக்கிருந்த மனநிலையில் என்ன சொல்கிறோம், யாரிடம் பேசுகிறோம் என்று கூடத் தெரியவில்லை. மனத்திலுள்ளதை அப்படியே சொல்லி விட்டேன்.

பிறகு, "நீ பைபில் படித்துக்கொண்டிருந்தாயே, அது உனக்கு ஏது? உன்னைப் பார்த்தால் ஹிந்துப் பெண் மாதிரி இருக்கிறதே!" என்றார்.

"எனக்கு ஒரு கிறிஸ்தவ உபாத்தியாயினி இருந்தார். அவர் எனக்கு அதைப் பரிசாக அளித்தார்."

"நீ ரொம்ப நல்ல பெண் என்று தோன்றுகிறது. உனக்கு நான் கூனூர் போவதற்கு டிக்கட் வாங்கித் தருகிறேன். அடுத்த பாஸஞ்சர் ரயிலில் நீ போய் விடலாம்" என்றார்.

என்னால் அவர் கூறியதை நம்பவே முடியவில்லை. "நிஜமாகவா?" என்று வியப்புடன் கேட்டேன்.

"இயேசுவின் கருணை இருந்தால் எதுதான் நடக்காது, அம்மா?" என்று கூறினார் அவர்.

சற்றைக் கெல்லாம் டிக்கட் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். "என்னால் தங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்பதே தெரியவில்லை" என்றேன்.

"அவசியமேயில்லை, அம்மா. மனிதத் தன்மையோடு நடந்து கொள்வதற்கு நன்றி கூற வேண்டுமா? அது என் கடமை. எனக்கு வேலை இருக்கிறது. அடுத்த ரயில் விடியற்காலையில் வருகிறது. அதில் நீ ஏறிப் போய் விடு" என்று அவர் கூறினார்.

"தங்கள் பெயர் என்னவென்று சொல்லவில்லையே? எனக்கு உதவி செய்தவர் பெயரையாவது நான் நினைவு வைத்துக் கொள்ள வேண்டாமா?" என்றேன்.

"என் பெயர் ஜான் மாத்யூஸ்" என்று சொல்லி விட்டு அவர் போய் விட்டார். என் உள்ளம் நன்றியால் நிறைந்தது. பைபில் புத்தகத்தின் முதல் பக்கத்தில் அவருடைய பெயரைக் குறித்துக் கொண்டேன்.

இந்த மாதிரி மனிதர்களும் உலகத்தில் இருப்பதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினேன். (தொடரும்)

வீரகேசரி

துப்பறியும் தொடர் கதைப் போட்டி

○★○

நல்ல எழுத்தாளர்களுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பத்தை அளிக்க துப்பறியும் தொடர்கதைப் போட்டி யொன்றை ஆரம்பித்திருக்கிறோம்.

இந்தப் போட்டியில் பொறுக்கி யெடுக்கப்படும் சிறந்த மூன்று கதைகளுக்கு

மொத்த ரூபாய் 1000

பரிசுத் தொகையாக அளிக்கப்படும்

முதல் பரிசு	...	ரூ.	500
இரண்டாம் பரிசு	...	ரூ.	300
மூன்றும் பரிசு	...	ரூ.	200

போட்டியின் முடிவு தேதி 31-8-1955

○★○

நிபந்தனைகள் :

1. கதைகள் மேனாட்டு துப்பறியும் நாவல்களின் மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இல்லாமல் சொந்தக் கற்பனையா யிருப்பதுடன் கதை நிகழும் இடம் இந்தியா அல்லது இலங்கையா யிருக்க வேண்டும். கதையின் விறுவிறுப்பும் சுவையுமே முக்கியமாகக் கவனிக்கப்படும்.

2. கதை அச்சில் 1/8 கிரௌன் சைஸில் 500 பக்கங்கள் சுமார் வரும் அளவிற்கு இருக்க வேண்டும். நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் இடையிடையே போதிய இடம் விட்டு எழுதுவதுடன் கதையின் தலைப்பில் "வீரகேசரி தொடர் கதைப் போட்டி" என்று குறிப்பிட்டு ஆசிரியர், வீரகேசரி, தபால் பெட்டி, எண் 160, கொழும்பு. என்ற விலாசமிட்டு ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. முடிவு தேதியாகிய 31-8-55க்குப் பிறகு வரும் கதைகள் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை.

4. ஒரே எழுத்தாளர் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளையும் அனுப்பலாம்.

5. பரிசுக்குத் தேர்வு செய்யப்படும் கதைகளின் பதிப்புரிமை (காபிரைட்) வீரகேசரி ஸ்தாபனத்தைச் சேர்ந்தது.

6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைப் போதிய தபால் தலைகள் அனுப்பி வைத்தால் திருப்பி யனுப்பப்படும். பரிசுக்குரிய கதைகளைத் தவிர பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும் இதர கதைகளுக்கு ஆசிரியர் உசிதம்போல் சன்மானம் வழங்கப்படும்.

7. கதை அனுப்புகிறவர் அந்தக் கதை தமது சொந்தக் கதையென்றும் அதேபோன்ற கதை எந்த மொழியிலும் தம்மாலோ அல்லது பிறராலோ எழுதி வெளியிடப்படவில்லை யென்றும் தமது கைப்பட்ட உறுதி மொழியை அனுப்ப வேண்டும்.

8. இப்போட்டி சம்பந்தமாக எவ்விதமான கடிதப் போக்குவரத்துகளும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது. போட்டியில் வீரகேசரி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

வீரகேசரி
கொழும்பு

பகவான் புத்தரும் இன்றைய உலகமும்

சுரேஷ் ராம்

இன்று உலகில் செல்வம் எங்கு பார்த்தாலும் கொழிக்கிறது. மக்களுக்கு வேண்டிய பொருள்கள் வேண்டிய அளவுக்கு மிஞ்சியே கிடைக்கின்றன. முன் எப்பொழுதும் உலகில் இவ்வளவு செல்வம் கொழித்ததில்லை. ஆயினும் என்ன ! இன்றைய மனிதன் மனத்தில் நிம்மதியும் சந்தோஷமும் உண்டா ! வாழ்க்கையில் இன்பம் உண்டா ! கிடையாது. அதற்கு மாறாக அவன் மனத்தில் பெரும் பீதி குடி கொண்டிருக்கிறது. அடுத்த நிமிஷம் என்ன நேருமோ என்னும் கிலி குடிகொண்டிருக்கிறது. இந்த பயத்திலும் பீதியிலும் மனிதன் புழுங்கிப் புழுங்கிச் சாகின்றான்.

ஆமாம். அறிவுக்கு ஒன்றும் பஞ்சமில்லை. விஞ்ஞான அறிவு ரொம்ப தூரம் முன்னேற்றமடைந்து விட்டது. விஞ்ஞான அறிவு ஏற்பட ஆரம்பித்த காலத்தில் மனிதன் மனத்தில் எவ்வளவு சந்தோஷம் குடி கொண்டிருந்தது! மின்சாரம் கண்டு பிடிக்கப் பட்டபோது எவ்வளவு குதூகல மடைந்தான்! விஞ்ஞானம் அளித்த பிரசாதம் மின்சாரம் என்றல்லவா நினைத்தான்! இப்படி விஞ்ஞானம் அளித்த பிரசாதங்கள் எல்லாம் இன்று மனிதனுக்கு விஷமாக மாறிவிட்டன. விஞ்ஞானமே ஒரு சாபக்கேடு என்று நினைக்கும் அளவுக்கல்லவா வந்து விட்டது !

உண்மையான அறிவு, பீதி கொண்ட மனத்துக்கு ஆறுதலும் தெம்பும் உற்சாகமும் அளிக்க வேண்டும். ஆனால் இன்றைய விஞ்ஞான அறிவாளிகள் அத்தகைய காரியத்தைச் சாதிக்க முடியாது திணறுகின்றனர். இதைப் பார்க்கும்போது மனித உயிருக்கும் பண்பாட்டுக்குமே பேர் ஆபத்து வந்து விட்டதோ என்று தான் எண்ண வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு மனிதனையும் இன்று துன்புறுத்தும் கேள்வி "நான் இருப்பேனா? இறப்பேனா!" என்பதே. 'இன்று எனக்குக் கிட்டியுள்ள வாழ்க்கையின் கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொண்டால் ஏதாகிலும் பயனுண்டா !' இப்படியெல்லாம் தன்னைத் தானே கேட்டுக் கொண்டு மனத்தைக் குழப்பிக் கொள்ளுகிறான். கடைசியில் ஒரு முடிவுக்கு வருகிறான்.

கெலிலியோ பெரிய விஞ்ஞானி. நியூடன் அவரை விடப் பெரிய விஞ்ஞானி. கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டர் உலகத்தை வெல்ல முயன்ற பெரிய போர் வீரன். நெப்போலியன் அவனைவிடப் பெரிய தளபதி. இந்த விஞ்ஞானிகளையும், மண்ணாசை பிடித்த தளபதிகளையும் விட எவ்வளவோ பெரிய இதயம் படைத்த மகான்கள் கண்டு சொல்லிய பேர் உண்மையே உண்மை என்ற முடிவுக்கு இன்றைய மனிதன் வருகிறான். அப்படிப்பட்ட மகான்களில் காலத்தாலும் ஞானத்தாலும் முதன்மையானவர், பகவான் புத்தர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகில் காலத்தை எதிர்த்து நிற்கக் கூடிய உண்மைகளைக் கூறினார். அவைகளில் ஒன்று :

"இவ்வுலகில் பகைமையைப் பகைமையால் என்றும் அடக்க முடியாது: அன்பினால்தான் முடியும். இதுவே என்றைக்குமுள்ள விதி."

அதாவது ஒரு ஹிம்சையை அதைவிட பெரிய ஹிம்சையால் வெல்ல முடியாது. அஹிம்சையால்தான் முடியும்.

விரோதம் அதிக விரோதத்தை வளர்க்கும் ; ஹிம்சை அதிக ஹிம்சையை வளர்க்கும். ஆகவே விரோதம் பாராட்டும் இரண்டு கட்சிகளும் முடிவில் அழிந்துதான் போகும். இந்த உண்மையை இன்று ராணுவ நிபுணர்களும் அரசியல்வாதிகளுமே ஒப்புக்கொள்ளுகிறார்கள்!

* * *

பின், உலகில் அமைதியை நிலைநாட்ட வழி என்ன ! அமைதி என்பது என்ன! காற்றில் மிதக்கக் கூடிய வஸ்துவா, என்ன! அல்லவே. அது நிலத்தில் நன்றாக ஊன்ற வேண்டுமே.



ஸ்ரீ விநோபா பாவே

அதற்கு என்ன வழி ! உலகம் என்பது பல தேசங்களைக் கொண்டது. ஆகவே உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலை பெறச் செய்வதுதான் வழி. ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலவ வேண்டுமாயின் அந்தந்த நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் அமைதி நிலவ வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைதி நிலவ வேண்டும். அந்த ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலுமே நிலவ வேண்டும். கிராமங்களில் அமைதி நிலவச் செய்யாமல் உலகில் அமைதி நிலை நாட்ட முயல்வது, விதைவிதைக்காமலே மரம் முளைக்க வேண்டும் என்று சொல்வது போலாகும்.

கிராமங்களில் எப்படி அமைதியை நிலை பெறச் செய்வது என்பதே இப்பொழுது மூலாதாரமான பிரச்னை. கிராமங்களில் அமைதியைக் கெடுக்கும் விஷயங்களை அப்புறப்படுத்தி விட்டால், அல்லது சீர்திருத்தி விட்டால் காரியம் வெகு எளிதாகி விடும். அப்படியானால் அமைதியைக் கெடுக்கும் காரணங்கள் யாவை! கிராமத்திலுள்ள நிலங்களும், மற்ற சொத்துக்களும்தான் அமைதியைக் குலைப்பன. நிலத்தினாலும் சொத்துக்களினாலும் ஏற்படும் பூசல்களும் சண்டைகளுந்தான் நீதி மன்றங்களையும், போலீஸ் இலாக்காவையும், ராணுவ இலாக்காவையும் உயிர் வாழச் செய்கின்றன. இந்தச் சண்டைகளையும் பூசல்களையும் வெகு சுலபமாக அறவே ஒழித்து விடலாம். எப்படி! கிராம நிலங்களையும் கிராமச் சொத்துக்களையும், தனி நபர் உடைமையாக இல்லாமல் சர்க்கார் உடைமையாகவும் செய்யாமல் கிராமப் பொதுச் சொத்தாகச் செய்துவிட வேண்டும். அதாவது கிராமச் சொத்துக்களையும் நிலங்களையும் கிராம மக்களே தங்களுக்குள், யார் யாருக்கு எது எது வேண்டுமோ, அதைப் பெறும்படியாகப் பங்கிட்டுக் கொண்டு வேலை செய்தார்களானால் போதுமானது. 'யார் யாருக்கு எது எது வேண்டுமோ' என்று சொல்வதின் பொருளை நன்றாக உணர வேண்டும். வீட்டில் காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பவன் ஆயிரம் வேலி நிலத்துக்கு இன்று அதிகாரியாக இருக்கிறான். இந்த நிலை மாறி, நிலத்தில் உழுபவனுக்கு நிலம் வழங்க வேண்டும்; தறியில் வேலை செய்பவனுக்குத் தறி வழங்க வேண்டும். அவன் அச்சொத்தில் வேலை செய்து காப்பாற்ற வேண்டிய தர்மகர்த்தா. அவ்வளவுதான். ஒருவன் தான் பற்றிக் கொண்டிருக்கும் சொத்துக்களை உதறினாலே போதுமானது. அவன் தைரியசாலியாகி விடுவான். ஏனெனில் பற்றுதலும் உடைமையும்தான் மனிதனைப் பயந்தாங் கொள்ளியாக்கி விடுகின்றன.

இப்படிச் சொன்னால் ஏதோ புதிய தத்துவம் கூறுவதாகவோ, முன்பின் நடக்காத காரியம் ஏதோ கூறுவதாகவோ தோன்றும். உண்மையில் மனிதன், மேற்கண்ட தத்துவத்தை வீட்டில் கடைப்பிடித்துத்தான் வருகிறான். இல்லையென்றால் அவனுக்கு வீட்டில் அவ்வளவு அமைதியும் சந்தோஷமும் இருக்கக் காரணம் என்ன! ஆக, வீட்டில் சந்தோஷம் நிலவுவதற்குக் காரணங்கள் இவையே:

1. வீட்டில் தனி நபர் உடைமை என்பது இல்லை.

2. அங்கு ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான அளவு உணவையோ வஸ்திரத்தையோ பெறுகிறார்கள்; அவரவர் சக்தியானுசாரம் வேலை செய்கிறார்கள்.

3. வீட்டுச் சண்டைகள் வீட்டிலேயே தீர்க்கப்பட்டு விடுகின்றன.

இப்படி வீட்டில் கடைப்பிடிக்கும் கோட்பாடுகளைக் கிராம நிர்வாகத்திலும் பொருத்தமாகக் கையாளலாம் அல்லவா! உலக சமாதானமும் இதையேதான் கேட்கிறது. இன்றைய விஞ்ஞானமும் இதையேதான் கூறுகிறது. அணுவுக்கு ஒரு நியதியும் அண்டத்துக்கு வேறொரு நியதியுமில்லை. அணுவுக்குள் அண்டம் இருப்பதைத் தற்கால விஞ்ஞானம் நமக்கு உணர்த்தி விட்டது. அணுவை இயக்கும் நியதியே அண்டத்தையும் இயக்குகிறது. அதேபோல் தனி நபருக்கு நன்மை பயக்கும் கொள்கைகளே உலகத்துக்கும் நன்மை பயப்பனவாகும். தனி நபருக்கு உண்மையாக இருக்கும் கோட்பாடுகள் அகில உலகத்துக்கும் பொருந்தக் கூடியவைதான். இதையே பகவான் புத்தர் பின்வருமாறு கூறுகிறார்:


"உள்ளம்தான் உன் எஜமானன். உன்ளத்தை உணர்வதே – ஆத்ம உணர்ச்சியே – உன் லட்சியம். ஆகவே உள்ளத்தைக் கட்டுப்படுத்தி வை. நல்ல வியாபாரி ஜாதிக் குதிரையை அடக்கி வைத்திருப்பது போல் அடக்கி வைத்திரு!"

சுயநலத்தைக் கட்டுப்படுத்தினால் உலக சமாதானம் ஏற்பட்டு விடும். ஒருவன் தன் உடைமைகளைத் தானாகவே உவந்து தியாகம் புரிவது, தன் உள்ளத்தைக் கட்டுப்படுத்த முயலும் முயற்சியின் முதற் காரியமாகும்.

இது ஏதோ புதிய விஷயமல்ல. பைபிளில் கூட, "உன்னை நீ நேசிப்பது போல் உன் பக்கத்து வீட்டிலிருப்பவனையும் நேசி" என்று கூறப்பட்டிருக்கிறது. யாரும் அண்டை வீட்டானின் கஷ்ட சுகம் தெரிந்து கொள்ளாமல் நேசிக்க முடியாது. தன்னிடம் இருக்கும் பொருள்களுக்குத் தான் ஒரு தர்மகர்த்தா மாத்திரம் தான், இதன் உடைமை, பாத்தியதை முதலிய உரிமைகள் சமுதாயத்துக்குத்

தான் என்ற உணர்ச்சி ஏற்பட்டால், அண்டை வீட்டானின் கஷ்ட சுகங்கள் தன் கஷ்ட சுகமாகவே கருத முடிகிறது.

இப்பொழுது இன்னொரு கேள்வி எழுகிறது. இது காரிய சாத்தியமான விஷயமா! ஒவ்வொருவரும் தாங்களாகவே நிலத்தைத் தானம் கொடுப்பது என்பது பழைய முதலாளி போய்ப் புது முதலாளி வந்தான் என்ற கதை மாதிரித் தானே முடியும் என்று கேட்கலாம். அதுதான் இல்லை. இதுவரை நான்கு லட்ச மக்கள் சுமார் 38 லட்சம் ஏக்கர் நிலங்களையும், 150 கிராமங்களையும், தனி உடைமையைத் துறந்து விட்டுக் கிராமச் சொத்தாக மாற்றித் தந்திருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்குமுன் வினோபா தொடங்கிய பூமிதான இயக்கத்தின்மூலம் விழிப்புப் பெற்றதனால் ஏற்பட்டதாகும். இவ்வியக்கம் மக்களுக்குப் புதிய ஒளியைத் தந்திருக்கிறது. தேசம் முழுதும் புத்துணர்ச்சியையும் சுறுசுறுப்பையும் பெற்றிருக்கிறது.



இதையெல்லாம் பார்க்கும்போது புத்தரின் உபதேசங்கள் மனித உள்ளத்தில் எதிரொலிக்க ஆரம்பித்து விட்டன என்பதாகத் தோன்றுகிறது. புத்தர் நமக்கு எதைக் கற்றுக் கொடுத்தாரோ, அதைக் காரியாம்சத்தில் நிறைவேற்றி உருவளிக்க இன்றைய மனிதன் தொடங்கி விட்டான். இதனால்தான் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆசாரிய விநோபாபாவே லக்னோ நகரில் பின்வருமாறு கூறினார்:

"நான் ஏழையின் பிரதிநிதியாக உங்களிடம் நிலத்தைக் கேட்கிறேன். இதனால் பிச்சை கேட்பதாக நினைத்து விடாதீர்கள். நான் பிச்சை கேட்க வரவில்லை. மக்களுக்குச் சொத்து சுதந்திர உடைமைகளிலிருந்து பற்றற்று வாழக் கற்பிக்கத்தான் முயல்கிறேன். அதுமட்டுமல்ல. பகவான் புத்தர் மூலமாக முதன் முதலில் ஆண்டவன் இக்காரியத்தைச் செய்யத்தொடங்கினார். அதை, நான் எவ்வளவோ பலவீனனாக இருந்தும் ஆண்டவன் என் மூலமாகத் தொடர்ந்து நடத்திவருகிறான் என்றுதான் கருதுகிறேன்."

புத்தரின் உபதேசம் ஒரு நாட்டுக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. ஒரு கொள்கையுடையவருக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. மனித குலம் முழுதுக்கும் அருளிய வாக்காகும். என்றென்றும் நிலைக்கும் உண்மையைச் சுட்டிக் காட்டிப் பின்வருமாறு கூறினார்:


"மனிதன் தன் கோபமற்ற தன்மையைக் கொண்டு கோபத்தை ஜெயிப்பானாக. கொடுமையற்ற தன்மையினால் கொடுமையை வெல்வானாக. தாராள குணத்தினால் லோபத்தனத்தை வெல்வானாக. பொய்யனைத் தனது உண்மையால் வெல்வானாக!"

பூதான இயக்கம் இக்கோட்பாட்டை நடைமுறையில் கொண்டுவர உதவுகிறது. இம்மொழிகளைச் சக்தி வாய்ந்த உண்மையாகப் பரிணமிக்கச் செய்கிறது. உலகில் எத்தனையோ அரசாங்கங்கள் இருக்கின்றன. அவைகளால் தங்கள் நாட்டையே சரியாக ஆள முடியவில்லை என்பதைக் கூற அதிகம் ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. பெரிய அரசாங்கங்கள் பெரிய தோல்விகளைத் தான் அடைந்திருக்கின்றன. இதற்கு அரை நூற்றாண்டுக்குள் உலகில் இரு பெரு யுத்தங்கள் நடந்து விட்டன என்பதே போதுமான சான்று. இப்பொழுது மூன்றாவது யுத்தத்துக்கான மேகங்கள் சூழ ஆரம்பித்திருக்கின்றன. இவை யெல்லாம் உலக அரசாங்கங்களினால் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை என்பதைத்தான் உணர்த்துகின்றன. வாஸ்தவத்தில், அவைகளின் அமைப்பே உலக சமாதானத்தை நிலைநாட்ட முடியாதபடி யிருக்கின்றது.

இனி, மக்கள்தான் உலகத்தைக் காப்பாற்ற வேண்டும். புத்தர் போன்ற மகான்களும், இன்றைய விஞ்ஞானமும் காட்டுகிற வழியில் ஒன்றுபட்டு வாழ்வதோடு, தனி மனிதனின் தூய வாழ்வின் மூலமும் உலகில் சமாதானம் நிலைநிறுத்த வேண்டும். ஆயுதங்களை உதறி எறிந்து விட்டு மக்கள் தங்கள் ஆத்ம பலத்தினால் உலகில் புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். ஆம், இனி ஒரு கண நேரம் கூடப் பொறுப்பதற்கில்லை. ஏனெனில் அன்றே புத்தர் எச்சரிக்கை விடுத்து விட்டார்.

"மனிதன் நல்லது செய்ய அவசரப் படட்டும். அவன் தன் மனத்தைப் பாவ எண்ணங்களில் செல்ல விடாமல் பார்த்துக் கொள்ளட்டும். மனிதன் நல்ல காரியம் செய்யத் தாமதித்தானாகில் அவன் மனம் பாப எண்ணங்களில் இலிக்கத் தொடங்கி விடுகிறது."

புத்தரும் காந்தி மகாத்மாவும் பிறந்த நாட்டில் பிறந்தவர்களாகிய நமது பொறுப்பு இன்று மகத்தானது. அன்பும், அறமும், சத்தியமும், அஹிம்சையும் மனித குலத்துக்கு உணர்த்த நம்மாலான எல்லா முயற்சிகளையும் செய்வோம். நமது நாட்டின் உயர்ந்த லட்சியங்களுக்கு ஏற்ப வாழ்ந்து உலகில் சாந்தியை நிலவச் செய்வோம்!


களங்கமற்று புத்தம்புதியது!
தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அதி வேகமாக அனுப்பப்படும் ஒப்பற்ற முறையாலேயே ப்ரூக் பாண்ட் தேயிலை நித்தமும் புத்தம்புதியதாக இருக்கிறது.
கலவரையற்று சுத்தமானது!
காற்றுப் புகாமல் கனருக பாக் செய்யப்பட்டிருப்பதால் ப்ரூக் பாண்ட் தேயிலை மாசுமருவற்று, கலப்பற்று, களங்கமற்று விளங்குகிறது.
Brooke Bond Tea
Brooke Bond Tea
யோசித்து வாங்குங்கள்!
செலவைக் குறையுங்கள்!
மற்றெந்த
தேயிலையையும் விட
ப்ரூக் பாண்ட்
தேயிலையையே
அதிகப்படியான ஜனங்கள்
வாங்குகிறார்கள் !


USE
GEVAPAN
33
ஸ்னப் ஷாட்டுகளுக்கோ
அல்லது
சலனப் படங்களுக்கோ
கேவாபான் 33
உபயோகியுங்கள்
இலவச விபரத்திற்கும் கேவார்ட் எக்ஸ்போஷர் கால்குலேட்டருக்கும் எழுதுங்கள் :
Allied Photographics Limited
அல்லைட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்
(மெயிலிங் டிபார்ட்மெண்ட்), கஸ்தூரி பில்டிங்ஸ், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1
பிரதி வெள்ளி இரவு 8 மணிக்கு ரேடியோ சிலோனில் (31.49 மீட்டரில்) ஏ.பி.எல் ஸ்தாபனத்தாரால் வெளியிடப்படும் "போட்டோ பேன்டஸி" (PHOTO-FANTASY) என்ற நிகழ்ச்சியைக் கேட்டு ஒரு பரிசு பெறுங்கள்.

முதல் மலர்

கி.ரா.கோபாலன்

மலையிலிருந்து சிறு நீரருவி சலசலவென்று கற்பாறையின் இடைவெளிகளிடையே புகுந்து விழுந்து ஓடிக் கொண்டிருந்தது. அவள் ஒரு சிறு கற்பாறையின் மேல் அமர்ந்து தன்னுடைய அழகிய பாதத்தால் ஓடும் நீரைத் துளாவிக் கொண்டிருந்தாள். மாலை வேளை. சிலுசிலுவென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. மேற்கே அடிவானத்தை அடைந்த கதிரவன் வானில் பலவித வர்ண அழகுகளைச் சிருஷ்டித்து வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். அவள் தண்ணீர் எடுத்துச் செல்லத்தான் வந்திருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக அவள் அமர்ந்திருந்த கற்பாறைக்கு அடியில் மண் குடம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. என்ன செய்வாள், பாவம்! அவள் அங்கு வந்து விட்டால் இயற்கையின் அழகு அவளை அடிமைப் படுத்தி விடுகிறது. சிறிது நேரமாவது அங்கு உட்கார்ந்து விளையாடி இன்பம் அனுபவிக்காமல் அவளால் வீடு திரும்ப முடிவதில்லை.

அந்த மலைப் பிரதேசம் முழுவதும் அலைந்து எதையோ தேடி அகப்படாமல் களைப்படைந்த வேடன் போல், அவன் அங்கு வந்து சேர்ந்தான். நீரருவியில் ஒரு கைத் தண்ணீராவது எடுத்துக் குடித்துக் களைப்பைத் தீர்த்துக் கொள்ளும் ஆவல் அவனுக்கு. அவளைப் பார்த்து விட்டான். அவன் மனத்தில் தண்ணீரை அள்ளிக் குடிக்க வேண்டுமென்றிருந்த துடிப்பே மாறி விட்டது. அப்படியே அவளைப் பார்த்தபடியே நின்று விட்டான். பல பிறவிகளுக்கு முன்னால் அவன் ஏதோ ஒரு அழகை அநுபவித்தது போலவும், அந்த அழகையே மறுபடியும் பார்த்து அனுபவிப்பதும் போலத்தான் தோன்றியது. ஏதோ ஒரு யுகத்தில் கண்ட ஒரு இன்பக் காட்சியை அவன் மறுபடியும் காணுவது போல் தானிருந்தது.

அவள் அவனைப் பார்க்கவில்லை; அவள் பார்வை முழுவதும் சலசல'வென்று குதித்தோடும் நீர்ப் பிரவாகத்திலேயே இருந்தது. அவள் அவனைப் பார்க்காததும் அவனுக்கு நன்மையாகத்தான் பட்டது. அவளுடைய அழகைப் பூரணமாகப் பார்த்து அனுபவிக்க அது ஒரு வாய்ப்பு அல்லவா?

கதிரவன் தான் மறையப் போவதை எடுத்துக் காட்டுவதுபோல், அவன் காட்டும் கடைசிக் காட்சியாக வானின் வர்ண விசித்திரத்தில் ஒரு மாறுதலைச் செய்தான். அப்பொழுது தான் அவள் நேரமாகி விட்டது, வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதை உணர்ந்தாள். அவசரமாகக் கீழே இருக்கும் பானையை எடுத்துக் கொண்டு தலை நிமிர்ந்த பொழுதுதான் அவள் அவனைப் பார்க்க நேர்ந்தது.

கண நேரம் விழியைச் செலுத்தி அவனைப்பார்த்ததிலிருந்தே அவனை யாரென்று அவள் தெரிந்து கொண்டு விட்டாள். இவ்வளவு நேரமும் அவளை யாரென்று தெரிந்து கொள்ளாமல் மனத்தைப் பறிகொடுத்து மயங்கி நின்ற அவனும் அவளை யாரென்று தெரிந்து கொண்டு விட்டான்.

அவள் தாமதிக்காமல் தண்ணீரை எடுத்துக் கொண்டு வேகமாக நடந்தாள். அவன் மாத்திரம் நின்ற இடத்தை விட்டு அசையவே இல்லை,

அவள் யார்? அவன் யார்?

* * *

சில நாட்களல்ல; சில வருடங்கள். ஆனால் எத்தனையோ யுகங்கள் ஓடிவிட்டதுபோல் தானிருக்கிறது. இரவில் கண்ட கனவு பகலில் நினைவிலிருந்து நழுவி விடுவது போல எதையும் நினைவுக்குக் கொண்டு வருவது சிரமமாகத் தானிருந்தது. அரைகுறையாக அழிபட்ட ஓவியத்தின் முழு அழகையும் நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்து அனுபவிக்கும் நிலையில்தான் அவன் இருந்தான். சிறு வயதில் அவன் மிகவும் துடியாக இருந்தான். அப்பொழுது தணிகாசலத்துக்குப் படிப்பிலோ குடும்பத்திலோ, கவலையோ பொறுப்போ இல்லை. அந்த வயதிலேயே பல ஊர்களுக்குச் சென்று சுற்றிப் பார்க்க வேண்டுமென்று தோன்றிய ஆசைதான் விபரீதமாக முடிந்தது. ஒருநாள் வீட்டில் அவன் தகப்பனார் வசூல் செய்து வைத்திருந்த கிஸ்திப் பணம் ஆயிரம் ரூபாயை அப்படியே திருடிக் கொண்டு தேச யாத்திரை கிளம்பி விட்டான். அரசாங்க கஜானாவுக்குப் போய்ச் சேர வேண்டிய பணத்தைத் திருடிக் கொண்டு போனதினால் பட்டா மணியக்காரராகிய அவனுடைய தகப்பனார் எத்தகைய அல்லல்களுக்கு உள்ளாவார் என்பதை அவன் உணரவில்லை. உன்னதமாக இருந்த அந்தக் குடும்பம் தாழ்ந்த நிலைக்குச் சரிந்தது.

பல வருடங்களுக்குப் பின் அவன் தன் சொந்த ஊரில் காலடி எடுத்து வைத்தான். ஊர் தான் எவ்வளவு மாறி

விட்டது? மனிதர்கள் தான் எவ்வளவு மாறி விட்டார்கள்? முன்பு மதிப்போடு விளங்கிய குடும்பங்கள் எல்லாம் இப்பொழுது தாழ்ந்திருந்தன. முன்பு தாழ்ந்திருந்த குடும்பங்களெல்லாம் இப்பொழுது உயர்வாக விளங்கின. எல்லாவற்றையும் விட ரேணுகா எவ்வளவு மாறி விட்டாள் என்பது தான் அவனுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. அவன் ஊரை விட்டுப் போகும் போது தன் வீட்டுத் தோட்டத்தில் நட்டு விட்டுப் போன ரோஜாப் பதியம் பிழைத்து வளர்ந்து, இப்பொழுது மலர்களுடன் அழகாகக் காட்சியளிப்பது போல் தான் ரேணுகாவின் வளர்ச்சியும் அழகின் மலர்ச்சியும் அவனுக்கு ஆச்சர்யத்தை அளித்தன. அவன் ஊருக்கு வந்த பொழுது அவன் வைத்த ரோஜாப் பதியத்தைப் பற்றியோ ரேணுகாவைப் பற்றியோ ஞாபகம் இல்லை. அன்று காலை மலர்ந்து நிற்கும் ரோஜாச் செடியைப் பார்த்ததும் அவனுக்கு எல்லாம் நினைவுக்கு வந்தது. முதல் நாள் மாலை நீரருவிக்குச் சமீபத்தில் அவளைப் பார்த்ததை அவன் எப்படி மறந்துவிட முடியும்? பல வருடங்களுக்கு முன்னால் அவனுடைய பால்ய வயதில் அந்த ரோஜா பதியத்தை அவனுக்குக் கொடுத்தவள் ரேணுகா தான். குழந்தைப் பருவத்தில் அவனோடு விளையாடியவைகளையெல்லாம் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டு வர முயற்சித்தான். அந்த நெருங்கிய தொடர்புகளின் நினைவு இப்பொழுது அவள் அழகில் சொக்கிப் போயிருந்த அவன் மனத்துக்கு ஒரு பலத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. கனவு போலாகி விட்ட பழங்கால நினைவின் அடிப்படையில் காதலும் ஆசையும் துளிர் விட்டன.

அன்று மாலை ரோஜாச் செடியின் மேல் கிளை நுனியில் பூரணமாக மலர்ந்து பிரகாசித்த மலரைப் பறித்துக் கையில் எடுத்துக் கொண்டு மலையடிவாரத்தை நோக்கி வந்தான். அந்த ரோஜா மலரின் மூலமாக ரேணுகாவின் மனத்தில் கடந்த காலத்தின் நினைவை எல்லாம் எழுப்பிக் காதல் இன்பத்தில் சிறிது களைப்பாறுவோம் என்பது அவன் எண்ணம்.

அன்று அந்த மாலை வேளையும் எப்பொழுதும் போல் இன்பகரமாய்த்தான் இருந்தது. வழக்கம்போல் தண்ணீர் எடுக்க வந்த ரேணுகா எப்பொழுதும் போல் அந்த மாலை நேரத்தின் எழிலில் மயங்க வில்லை. அவள் மனத்தில் ஏதோ ஒரு பதைபதைப்பு உணர்ச்சி. அவள் எந்த அபாயத்தி லிருந்தோ தப்பிக்க நினைப்பவள் போல் தாமதிக்காமல் அருவியிலிருந்து நீரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். அவள் இடையில் குடத்தை வைத்துக் கொண்டு தலை நிமிர்ந்த பொழுது தணிகாசலம் அவள் எதிரில் தோன்றவே சிறிது திகைப்படைந்து தயங்கி நின்றாள். காம்போடு கிள்ளிக் கொண்டு வந்த அந்த ரோஜா மலரை விரல்களால் திருகிச் சுற்றிய வண்ணமே, "என்னைத் தெரிகிறதா ரேணு...?" என்று கேட்டான் தணிகாசலம் அவள் முகத்தை ஆர்வத்தோடு பார்த்த வண்ணமே.

"தெரியாமலென்ன? நன்றாகத் தெரிகிறது" என்றாள் ரேணுகா, வேறெங்கோ பார்த்த வண்ணம்.



"இந்தா ...... இதோ ரோஜாப் பூ. உனக்காகத் தான் கொண்டு வந்தேன்" என்று மலரை அவளிடம் நீட்டினான்.

அவள் அதைக் கை நீட்டி வாங்கி அலுங்காமல் பக்கத்திலிருந்த கற்பாறையின் மீது வைத்து விட்டாள்.

அவனுடைய செய்கை அவன் எதிர் பார்த்ததற்கு நேர்மாருக இருந்ததால் முகம் குன்றிப் போனுன். அவன் தன்னை ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு, "என்ன அதை அப்படி அங்கே வைத்து விட்டாய்?" என்ருன்.

"எது எங்கிருந்தால் என்ன?" என்ருள் அவள், கொஞ்சம் அலட்சியத்தோடு.

"ரேணு! அதன் கதை உனக்குத் தெரியாதா? நீ எல்லாவற்றையும் மறந்து விட்டாயா? நீ எப்போதோ கொடுத்த ரோஜாப் பதியம் வளர்ந்து செடியாகி அதில் மலர்ந்த மலர்தான் இது!"

"இருக்கலாம். எல்லாம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நீங்கள்தான் என்னிடமிருந்து ரோஜாப் பதியம் வாங்கிக் கொண்டு போகும் பொழுது என்ன சொன்னீர்கள் என்பதை மறந்து போய் விட்டீர்கள். இல்லையா?"

தணிகாசலம் யோசனையில் ஆழ்ந்தான். அவன் நினைவில் உதயமானதாகவே தோன்றவில்லை. "என்ன சொன்னேன்? எனக்குச் சரியாக ஞாபகமில்லை" என்ருன்.

"போகட்டும். நானுவது ஞாபகப் படுத்துகிறேன். நான் கொடுத்த ரோஜாப் பதியம் பிழைத்துப் பூத்தால் முதல் பூவை எனக்குக் கொண்டு வந்து கொடுப்பதாகச் சொன்னீர்கள். இல்லையா?"

"ஆமாம்! இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது. ஆனுல் இப்பொழுதுதான் என்ன குடிமுழுகிப் போய் விட்டது? நான் என் கண்களால் முதன் முதலாக அந்தச் செடியில் மலர் மலர்ந்திருப்பதைப் பார்த்ததும் முதன் முதலாக உனக்காகத் தானே பறித்துக் கொண்டு வந்தேன்...?"

"இருக்கலாம். ஆனுல் நீங்கள் முன்பு சொல்லிய விஷயம் நினைவுக்கு வந்து இதைக் கொண்டு வரவில்லையே......? போகட்டும். ஆனுல் இன்னெரு சமாசாரம் உங்களுக்குத் தெரியாது."

"என்ன...?"

"உங்களுக்கு நான் ரோஜாப் பதியம் கொடுத்த போது மருதவாணனும் ஒரு பதியம் கேட்டார். அவருக்கும் கொடுத்தேன். அவரும் அந்தப் பதியம் பிழைத்து மலர்ந்தால் முதல் மலரை எனக்குக் கொண்டு தருவதாகச் சொன்னுர்."

"அப்படியா...?"

"ஆம்! சொல்லியபடியே முதன் முதலாகச் செடியில் மலர்ந்த மலரை எனக்குக் கொண்டு வந்து தந்தார். அன்றிலிருந்து அவர் ஒவ்வொரு நாளும் எனக்கு ரோஜா மலர் கொண்டு வந்து தராமல் இருப்பதில்லை. இன்று நான் தலையில் வைத்திருக்கும் இரண்டு மலரும் அவர் கொண்டு வந்து தந்ததுதான்" என்ருள்.

அவள் தன் நீண்ட கேசத்தை முறுக்கி அழகான கொண்டையாகப் போட்டிருந்தாள். அக் கொண்டையில் இரண்டு ரோஜாக்கள் பக்கத்துக்கொன்ருக வைக்கப்பட்டிருந்தது அலாதி அழகாகத்தான் இருந்தது. அந்த அழகை அவன் கண்டான். ஆனுல் அந்த அழகை அமைதி நிறைந்த மனதோடு பார்த்து அனுபவித்து ஆனந்தப்படும் தன்மையில் அவன் இல்லை. அவள் கொண்டையில் வீற்றிருந்த இரு ரோஜா மலர்களும் அவனுடைய துரதிருஷ்டத்தை எண்ணிச் சிரிப்பது போல் தான் இருந்தன. அவன் மனம் ஏமாற்றத்தால் இடிந்து பொருமியது. வரும்போது இருந்த அவன் முகத்தின் ஒளி குன்றி இருள் கவிந்தது போல் இருந்தது. "ஏன் இந்த மலரையும் ஏற்றுக் கொள்வது தகாதா......?" என்று கேட்டான், தாழ்மையான குரலில்.

இதைக் கேட்டதும் அவள் முகத்தில் சட்டென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவள் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, "தகாதுதான். யார்கொடுக்கும் மலரையும் வாங்கிச் சூட்டிக் கொள்வது முறைப் பிசகு. மனம் எதை ஏற்றுக் கொள்கிறதோ; அதைத்தான் தலையும் ஏற்றுக் கொள்ளும்" என்று சொல்லி விட்டுச் சட்டென்று அந்த இடத்தை விட்டு வேகமாகப் போய் விட்டாள்.

கற்பாறையில் அந்த ரோஜா மலர் கிடந்தது. அவனும் அந்தப் பாறையருகே ஒரு பாறைபோல் அசையாது நின்ருன்.

ஏமாற்றமும் ஆசாபங்கமும் அடைந்து கலங்கி நின்ற அவன் எதிரில் மறுபடியும் ரேணுகா தோன்றியது. அந்தக் கலக்கத் திடையே வியப்பையளிப்பதாய்த் தான் இருந்தது. 'அவ்வளவு வேகமாகச்சென்றவள் ஏன் திரும்பி வந்தாள்?' என்று தான் அவனுக்குப் புரியவில்லை. அவன் அவளை உற்றுப் பார்த்த போது அவன் திகைப்பு இன்





ஏப்ரல் 25-ம் தேதி மாலை, சென்னை அடையாறு காந்திநகர் மாதர் சங்கத்தினரால் நடத்தப்படும் "பால பிருந்தாவனம்" என்னும் குழந்தைப் பள்ளியின் புதுக்கட்டடத்துக்கான அஸ்திவாரக் கல்லை ராஜாஜி தமது பொற் கரங்களால் நாட்டினார்.

இந்த வைபவத்தின்போது இப்பள்ளியின் சிறுவர்களும் சிறுமிகளும் வேடிக்கை பாட்டுகள் பாடியும், நாடகம் நடத்தியும், சபையோரை மகிழ்வித்தார்கள். ராஜாஜி "புதுப் புது நகரங்கள் எழும்பும்போது முதலில் இத்தகைய குழந்தைப் பள்ளிகளைக் கட்ட வேண்டும். பிறகுதான் மக்கள் வசிக்கும் வீடுகள் கட்ட வேண்டும்" என்றார். ஸ்ரீமதி ருக்மணி, ஸ்ரீமதி நடராஜன், ஸ்ரீமதி ஆர். பாலம் முதலிய அங்கத்தினர்களின் தீவிர முயற்சியின் பயனாக இக் கட்டடம் எழ இருக்கிறது என்று அறிந்து மகிழ்கிறோம்.

னும் அதிகமாகியது. சிறிது நேரத்துக்கு முன்பு அவள் கொண்டையில் பிரகாசித்த ரோஜா மலர்கள் இரண்டையும் இப்பொழுது காணோம். சிறிது நேரத்துக்குள் அவள் சித்தம் மாறி அந்த மலர்களை எடுத்து எங்காவது எறிந்து விட்டு வந்து விட்டாளா? அவன் மெதுவாக அவளை நெருங்கி, "ஏன் உன் தலையில் இருந்த ரோஜா மலர்களைக் காணோம்?" என்று வியப்புடன் கேட்டான்.

அவள் வியப்போடும் சிரிப்போடும் அவனை ஏற இறங்க ஒரு தடவை பார்த்து விட்டு, "ரோஜா மலரா? யார் வைத்திருந்தா? கொஞ்சம் பார்த்துப் பேசுங்கள்" என்றாள்.

"யார் ரோஜா மலர் வைத்துக் கொண்டிருந்தாளா? நீதான்...ரேணுகா அதற்குள்.." என்று அவன் இழுத்தான்.

"ஓஹோ! ரேணுகாவா? அவள் நான் இல்லை, ஐயா! எனக்கு ரோஜாப் பூ கொண்டு வந்து கொடுக்கிறவங்க யாருமில்லையே!" என்றாள், பரிகாசச் சிரிப்புடன்.

இதைக் கேட்டதும் அவனுக்குக் குழப்பத்துக்கு மேல் குழப்பம்தான் ஏற்பட்டது. துடிப்போடு அவளை உற்றுப் பார்த்தான். அவள் ரேணுகா இல்லையா? இவள் யார்? அதே உருவம். அதே தாவணிதான் உடுத்தியிருந்தாள். ரவிக்கையும் அப்படியே. இவள் தலையில் ரோஜா மலர்களைத்தான் காணோம். வேறு எவ்வித மாறுதலும் காணோம். அவனுக்குப் பித்துப் பிடித்து விடும் போலிருந்தது. இதற்கிடையே அவன் மனத்தில் ஒரு பீதியும் எழுந்தது. இந்த மலைப் பிரதேசத்தில் இப்படி ஏதாவது மோகினிப் பிசாசு ஒன்று இருந்து மனிதர்களை மயக்கி வஞ்சனையாகக் கொன்று திரிகிறதோ என்ற சந்தேகம் தான் அவனுக்கு. "நீ ரேணுகா இல்லையா? அவள் மாதிரியே இருக்கிறாயே ...?" என்று கேட்டான் தயக்கத்தோடு.

"அவள் மாதிரியே இருக்கிறேனா...? அவள் தங்கை என்றால் எப்படி இருப்பாள்...?" என்றாள் அவள் வெட்கத்தோடு.

"அவள் தங்கையா? அவள் தங்கை..."

"பெயர்கூட மறந்து விட்டதுபோலிருக்கிறது? மீனு" என்றான் அவன் மெதுவாக.

"நீ மீனுவா? எப்படி வளர்ந்து விட்டாய்? ரேணுகாவைப் பார்த்தே எனக்கு ஆச்சர்யமாய் இருந்தது" என்றான் அவன்.

"அவளை விட இரண்டு வயதுதான் நான் சின்னவள்" என்று சிறிது நாணத்தோடு சொல்லிக் கொண்டே அங்கு பாறைமீது கிடந்த ரோஜா மலரை எடுத்து முகர்ந்து பார்த்தாள்.

சிறிது நேரத்துக்கு முன்னால் ஏமாற்றத்தினால் இடிந்து போயிருந்த அவன் மனத்தில் இப்பொழுது ஒரு புது உற்சாகமும் ஆனந்தமும் கொந்தளித்தன. "அந்த ரோஜாப்பூ ஏது தெரியுமா?" என்றான்.

"உங்கள் வீட்டுச் செடியில் பூத்ததாய்த்தானிருக்கும்" என்று சொல்லி அம் மலரைத் தன் கொண்டையில் ஒரு பக்கமாகச் செருகிக் கொண்டாள்.

அந்த அழகில் மதிமயங்கி நின்ற அவன், "ஆமாம்" என்றான் பெருமிதத்தோடு.

"இது உங்கள் தோட்டத்தில் பூத்த பூவானாலும் இதில் எனக்கும் பாத்தியம் உண்டு" என்றாள் அவள்.

"நிச்சயம் உனக்குத்தான் முதல் பாத்தியம். உன் அக்காதானே எனக்கு ரோஜாப் பதியம் கொடுத்தாள்!"

"அக்கா கொடுத்தாள் என்பதுதான் உங்களுக்குத் தெரியும். அந்த ரோஜாப் பதியம் யாருடையதுன்னு உங்களுக்குத் தெரியாது. அக்கா மருதவாணருக்குத் தான் வைத்திருந்த பதியத்தைக் கொடுத்து விட்டு நீங்க கேட்ட போது என்னுடைய பதியத்தை எடுத்துக் கொடுத்தாள்—"

"அப்படியா......?" என்றான்.

"அப்படித்தான். எங்க அக்கா மருதவாணருக்குக் கொடுத்த பதியம் பிழைத்து மலர்ந்து, அதில் மலர்ந்த பூவைத் தினமும் அவர் பறித்துக் கொண்டு வந்து எங்க அக்காளிடம் கொடுக்கும் போது என் மனசு சொல்ல முடியாத சங்கடத்துக்கு ஆளாகும். என்னுடைய ரோஜாப் பதியமும் உங்கள் வீட்டில் நன்றாக வளர்ந்து பூத்துக் குலுங்கும் போது, எனக்கு அதில் ஒரு பூவைக் கொண்டு வந்து கொடுக்க யாரும் இல்லையே என்ற வருத்தம்தான்."

"சரி தான். இப்பொழுது அந்த வருத்தமெல்லாம் பறந்து போயிருக்கும்" என்றான் அவன், சிரித்துக் கொண்டே.

"எங்க அக்கா மருதவாணரைத் தான் கல்யாணம் செய்துக்கப் போகுது. உங்களுக்குத் தெரியுமா...?" என்றாள் அவள்.


"அப்படியா? அது ரொம்ப நியாயம். ஆனால் நீ?" என்று சொல்லிக் கொண்டே அவளுக்குச் சமீபமாக நெருங்கிப் பாறை மீது உட்கார்ந்தான்.

வெட்கத்தினால் அவள் கன்னம் சிவந்தது. ரோஜா மலர்போல தலை குனிந்த வண்ணம் நிற்கும் அவளது அழகிய கன்னத்தையும் அவள் கேசத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் ஒற்றை ரோஜா மலரையும் அவன் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். அவன் மெதுவாக மலர் போன்ற அவள் கரத்தைத் தொட்டு, "இனிமேல் தவறாமல் ஒவ்வொரு நாளும் உனக்கு ரோஜா மலர் கொண்டு வந்து கொடுப்பேன்" என்றான்.

அவள் மெதுவாகத் தன் கையை விடுவித்துக் கொண்டு "இந்தாங்க! இப்படியெல்லாம் விளையாடாதீங்க" என்றாள்.

"ஏன் இவ்வளவு வெட்கம் உனக்கு? இங்கே யார் இருக்கிறார்கள்?" என்று சொல்லி மறுபடியும் அவளுடைய கரத்தைப் பற்றினான்.

சலசலவென்று ஓடும் நீரருவியின் சப்தம் 'இங்கே நான் இருக்கிறேன்' என்று சொல்லிச் சிரிப்பது போலிருந்தது. 'நான் இன்னும் மறையவில்லை. நானும் இருக்கிறேன்' என்று கதிரவன் சொல்லிச் சிரித்ததினாலோ என்னவோ வானம் சிவப்பாகியது!



"பாஷைப் பிரச்னை !"

"பாஷைப் பிரச்னை" என்ற கட்டுரையைக் 'கல்கி'யில் வாசிக்கும் பேறு பெற்றோருள் யானும் ஒருவன். 'பாஷைப் பிரச்னை' அதன் உச்சஸ்தானத்தை அடைந்துள்ள காலத்தில் இக் கட்டுரையை எழுதியது மிகப் பொருத்தமாக இருக்கிறது.

மாணவனான நான் இக்கட்டுரை வாசித்த பின் சில சந்தேகங்கள் எழுந்ததால் அவற்றைக் கடிதம் எழுதித் தீர்த்துக் கொள்ளலாம் என்றெண்ணி எழுதுகிறேன்.

ஹிந்தி பள்ளிக்கூடம் செல்லும் பொழுதும், சென்று வந்த பின்னரும் அதைப் படிக்கத் தமிழர்கள் வீணாக்கும் நேரத்தைத் தமிழ்ப் படிப்பதில் செலவழித்தால் தமிழ் நன்கு முன்னேறும் அல்லவா ! ஹிந்தியின் ஸ்தானத்தை ஆங்கிலத்துக்குக் கொடுத்து அதை இரண்டாம் மொழியாக வைத்தால் சிரமம் எல்லாம் குறையும். ஒரு வளமான உலகப் பொது பாஷையான ஆங்கிலம் படித்தால் நாட்டுக்கு நலம் புரிந்தவர்களாவோம் !

இலங்கை
17-4-55
செ. பீர்முகம்மது

[தமிழ்நாடு ஒரு தனி சுதந்திர நாடாக இருப்பின் ஹிந்தியைப் பற்றிக் கவனிக்க வேண்டியதே இல்லை. தமிழ் நாட்டை அப்படித் தனி சுதந்திர நாடாகச் செய்ய முயல்வது தகாது. இந்தியாவுக்குள் ஒரு பாகமாக இருப்பதினால் ஹிந்தியையும் கவனிக்க வேண்டியது அவசியம். ஹிந்தி வேண்டியதில்லை, ஆங்கிலமே பொது பாஷையாக இருக்கலாம் என்று சொல்லுவது நியாயம் ஆகாது. சில விஷயங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லலாமே ஒழிய, முற்றிலும் பொது சுதேச பாஷை ஒன்று இல்லாமல் ஆங்கிலமே அதற்குப் பதிலாக வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வது சுதந்திர தேசிய உணர்ச்சிக்கு விரோதமாகும்.

அநேக பாஷைகள் கற்றுக் கொள்ளுவது கஷ்டம் என்பது உண்மை. ஆனால் அது பல பாஷைகள் அடங்கிய இந்திய நிலைமையில் பொறுத்துக் கொள்ள வேண்டிய கஷ்டம் !

ஆசிரியர்]

●

தலை அலங்கார நிலையங்கள்

சென்னை நகரத்திலுள்ள தலை அலங்கார நிலையங்களுக்கு, சில ஆண்டுகளாகச் சென்னை நகரசபை மூன்று நாற்காலிகள் வரை ஐந்து ரூபாயாகவும், அதற்கு மேலுள்ள ஒவ்வொரு நாற்காலிக்கும் இரண்டு ரூபாயாகவும் லைசென்ஸ கட்டணம் விதித்திருக்கிறார்கள்.

மேற்கண்ட கட்டணம் அமுலாவதற்கு முன் மூன்று நாற்காலிகளுக்கு ஒரு ரூபாயாகவும், அதற்குமேலிருந்தால் நாற்காலி ஒன்றுக்கு ஒரு ரூபாயாகவும் லைசென்ஸ கட்டணம் இருந்து வந்தது.

முதன் முதலில் சென்னை நகர சபை தலை அலங்கார நிலையங்களுக்கு இலவச லைசென்ஸ வழங்கி வந்திருப்பதாகவும் தெரிகிறது.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே, பொது மக்களின் சுகாதார நலனைக் கருதியும், தொழிலுக்கு இழிவில்லை என்ற பெரு நோக்கோடும், மருத்துவ சமூகத்தார்கள் இத் தொழிலை செய்து வருகிறார்கள். தலை அலங்காரத் தொழில் இழிவானது என்ற காரணத்தால் மற்ற சமூகத்தார்கள் யாரும் இத் தொழிலை கைகொள்ள இன்றுவரை முன் வரவில்லை. பண்டைக்கால மன்னர்கள் இத் தொழிலின் அவசியத்தை உணர்ந்து மருத்துவ சமூகத்தார்களுக்கு மானியம் வழங்கி இந்தத் தொழிலுக்கு பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். அத்தகைய மானியங்கள் இன்றும் ஒவ்வொரு கிராமங்களிலும் இருந்து வருகின்றன.

தற்சமயம் தலை அலங்கார நிலையங்கள் லாபகரமாக நடைபெறவில்லை. வரவுக்குள் செலவைச் சரி கட்டவே பிரம்மப் பிரயத்தனமாக இருந்து வருகிறது.

மேற்கூறிய காரணங்களை அறிந்த மதுரை, கோயமுத்தூர் நகரசபைகள் அங்குள்ள தலை அலங்கார நிலையங்களுக்கு நியாயமான முறையில் லைசென்ஸ கட்டணங்களை குறைத்திருக்கிறார்கள்.

சென்னை நகர சபையும் சென்னை நகர தலை அலங்கார நிலையங்களுக்கு லைசென்ஸ கட்டணம் உயர்த்தியிருப்பதை, ஏற்கெனவே இருந்தது போல் குறைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

சென்னை
5-5-55
நா. சிவானந்தம்

●

என் தவறு

தங்கள் 'கல்கி' இதழில் திரு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் எழுதி வரும் "ஆற்றங்கரையினிலே" என்ற கட்டுரையைத் தொடர்பாகப் படித்தும் சேர்த்தும் வருபவன் யான்.

27-2-55 வெளியீட்டில் 7-வது கட்டுரை வெளி வந்தது. 6-3-55 கல்கியில் 9-வது கட்டுரை வெளிவந்துள்ளது. அப்போது 8 வது கட்டுரை எங்கே ? இலக்கம் இட்டதில் அச்சுப் பிழை நேர்ந்ததோ அல்லது அக்கட்டுரை தவறி விட்டதோ என்பதனைத் தயை கூர்ந்து தெரிவிக்குமாறு பணிவோடு வேண்டுகின்றேன்.

கல்கத்தா
16-4-55
நா. ஞானசம்பந்தன்

[ஆற்றங்கரையினிலே கட்டுரையில் எண் அச்சுப் பிழையே தவிர, கட்டுரை விட்டுப் போகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் தொடரில் நேயர்கள் காட்டி வரும் இந்த விசேஷ கவனத்தைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். —ஆசிரியர்]



ரவிசந்திரிகா

சோமு

6. "சுண்டெலிக் கண்ணே!"

அப்புலிங்கம் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் பலமான யோசனையில் ஆழ்ந்திருந்தான். அந்த யோசனையை மிகத் தீவிரம் ஆக்கியது, குழந்தைகளின் பாடல்.

திருச்சி ஆண்டார் தெருவில் அப்புலிங்கத்தின் வீடு ஒரு விசாலமான மாளிகை. அந்த மாளிகையின் முற்றத்திலே அண்டை வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் கூடி 'மரப்பாச்சிக் கல்யாணம்' விமரிசையாக நடத்திக் கொண்டிருந்தார்கள்.

சிறுவர் சிறுமிகளுக்குள் மிகவும் சுட்டிக்கையான ஒரு பையன், அந்தப் பாடலைப் பாடினான். அதன் கருத்து அப்புலிங்கத்தை மிகவும் கவர்ந்தது.

அழகு நிரம்பிய ஆண் சுண்டெலி ஒன்று, அழகே உருவான ஒரு பெண் சுண்டெலியைக் காதலித்தது. எத்தனையோ நாளாக அதன் உள்ளத்தில் இந்தக் காதல் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால் அந்தக் காதலைப் பெண் சுண்டெலியிடம் எடுத்துச் சொல்வதற்குரிய ஒரு சந்தர்ப்பம், பாவம், சுண்டெலிக்குக் கிடைக்கவேயில்லை. கடைசியாக ஒரு பௌர்ணமி இரவில் பெரிய மாடி வீட்டு நிலா முற்றத்தில் வேகமாக ஓடிக் கொண்டிருந்த பெண் சுண்டெலியை வழி மறித்தது, ஆண் சுண்டெலி. அது வசந்த காலம்! சொல்ல வேண்டுமோ! சுண்டெலிக் காதலன் தன் சுண்டெலிக் காதலியிடம் இதயத்தைக் கொட்ட ஆரம்பித்தது.

ஆக்க வேணும் அரைக்க வேணும்
கண்டெலிக் கண்ணே—நீ
அருகிருந்தால் போதுமடி
கண்டெலிக் கண்ணே!

தூக்க வேணும் வைக்க வேணும்
கண்டெலிக் கண்ணே—நீ
சுத்தி நின்னாப் போதுமடி
கண்டெலிக் கண்ணே!

ஆறு வேணும் குளமும் வேணும்
கண்டெலிக் கண்ணே—நீ
அணைஞ்சிருந்தால் போதுமடி
கண்டெலிக் கண்ணே!

சோறு வேணும் தண்ணி வேணும்
கண்டெலிக் கண்ணே—உன்
சுகமிருந்தால் போதுமடி
கண்டெலிக் கண்ணே!

இந்தப் பாடலைப் பாடியவாறு சிறுவர்களும் சிறுமிகளும் ஒரே ஆட்டமாக ஆடிக் கொண்டிருந்தார்கள்.

மூதூர் பிராசுதார் வீட்டில் வேறு யாருமில்லை. கமலத்தின் கல்யாணத்துக்காக பிராசுதாரும் மனைவியும் லால்குடி சென்றிருந்ததால், அந்த ஏகாந்த பிரும்மச்சாரி அப்புலிங்கம் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே, பாடலின் கற்பனையில் மனத்தை ஓட விட்டான். பாடல் ஒரே குதூகலத்துடன் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது:—

அடுப்பு வேணும் துடுப்பு வேணும்
கண்டெலிக் கண்ணே—உன்

அன்பிருந்தாப் போதுமடி
கண்டெலிக் கண்ணே!

நடக்க வேணும் அனுக்க வேணும்
கண்டெலிக் கண்ணே—நீ

நாலு வார்த்தை சொன்னாப் போதும்
கண்டெலிக் கண்ணே!


அப்புலிங்கத்தின் மனம் ரவீந்திரனையும் சந்திரிகாவையும் பற்றிய எண்ணத்திலே தொடங்கிக் காதல் என்ற தத்துவத்திலே சுழல ஆரம்பித்தது.

அதிசயமான நமது தினசரி வாழ்க்கையில் சில மனிதர்களைச் சந்தித்ததும் நமக்குப் பிடித்து விடுகிறது. சில மனிதர்களைப் பார்த்ததும் ஏனோ வேண்டாத வெறுப்பு உண்டாகி விடுகிறது. சில மனிதர்களை வெறுக்க வேண்டும் என்று நினைக்கிறோம், முடிகிறதில்லை! இதற்கெல்லாம் காரணத்தை என்னவென்று சொல்ல?

அன்பு என்ற உணர்ச்சி எப்படி ஏற்படுகிறது? அதன் வித்து எது?

காதல் என்ற நுட்பமான உணர்ச்சியைப் பற்றிக் கூறாத காவியமே இல்லை. ஆதி மனிதனுடைய முதல் அனுபவத்திலிருந்து மனித ஜாதியின் வளர்ச்சியை விவரிக்கும் பௌதிக விஞ்ஞானிகள் எல்லாரும் இந்தக் காதல் தத்துவத்தை ஆராய்ந்திருக்கிறார்கள். ஆனாலும் இதைப் பற்றித் திட்டமான ஒரு முடிவுக்கு நம்மால் வர முடிகிறதா? காதலிலே ஆரம்பித்துக் கல்யாணத்திலே முடிந்த எத்தனையோ மனிதர்களின் வாழ்க்கையைப் பார்க்கிறோம். இவர்களில் சிலருடைய வாழ்க்கை ஆரம்பத்தில் இன்பத்திலே தொடங்கிப் பிறகு ஒரே துன்பமாக முடிவதையும் கவனித்திருக்கிறோம்! அப்படி யானல் லக்ஷ்யக் காதல்தான் எது?

மனித மனம் வானத்தின் வர்ணங்களைப் போல் மாறுகிறது. மனித மனத்தின் அன்பு சந்திரனைப் போல் வளர்கிறது. தேய்கிறது. ஆனால் சில சில தூய மனிதர்களுடைய உள்ளம் மட்டும் நித்திய சூரியனாக நின்று,



வளர்ச்சியும் தேய்வும் இல்லாத நிரந்தரமான பிரகாசத்தோடு ஒரு ஒழுங்குக் கிரமத்தில் இயங்குகிறது! இதெல்லாம் எதனால்?

எந்த விஷயத்தையும் தத்துவமாகப் பார்த்து ஆராய்கிற இயல்பு கொண்ட அப்புலிங்கத்தின் புத்தி இப்படியெல்லாம் மேலே மேலே சிந்திக்க ஆரம்பித்தது.

வயதான மனிதர்களின் மனந்தானே இப்படி வினோதச் சிக்கலாக இருக்கிறது! குழந்தை உலகத்தில் அன்பு என்பது எத்தனை புனிதமாக இயங்குகிறது! போட்டி, பூசல், சண்டை, பொறாமை, வெறுப்பு, கசப்பு என்ற கொடிய உணர்ச்சிகளேயில்லாமல் குழந்தைகள் எத்தனை இன்பமாக நாளும் பொழுதும் கழிக்கின்றன. பசுமையான உள்ளத்தின் பரிசுத்தம் எல்லாம் குழந்தைப் பருவத்தோடு மறைந்து விடுகிறதா? 'குழந்தைகள் தெய்வ அருளிலிருந்து வருகின்றன' என்று சொல்கிறார்களே, அது உண்மைதான் போலும்! அந்த தெய்வ ஸ்பரிசம் பசுமையாக இருப்பதனால்தான் குழந்தைகள் தெய்விக அன்போடு பழகுகின்றன போலும்!

அப்புலிங்கம் மனத்துக்குள்ளேயே எண்ணிப் பார்த்தான்.





அன்று மாலை கடை வீதியிலே ரவீந்திரன் என்ற அந்த விசித்திர மனிதனைச் சந்தித்ததும், அதன் பிறகு நாகரத்தினம் கண்டபடியெல்லாம் பேசி மனத்தைக் குழப்பியதும், அதன் பின்னர் அரங்கேற்றத்துக்குப் போகிற வழியில் கல்யாணியம்மாளைப் பார்த்துத்



துணுக்குற்றதும், அப்புலிங்கத்தின் உள்ளத்தைக் குமைத்துக் கொண்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, அன்று அரங்கேற்றத்தில் சந்திரிகாவைப் பார்த்த பிறகு அப்புலிங்கத்தின் குழப்பம் நூறு மடங்கு அதிகம் ஆகியிருந்தது. அந்த இளம் பெண்ணின் முகமும், அந்தத் தெளிவான முகத்தில் ஓடிய உணர்ச்சிச் சாயல்களும், அவளை ஒரு அசாதாரணமான பெண் என்று கூறின. கலையின் அழகோடு, மேனியின் அழகோடு, குணத்துக்கு என்று ஒரு தனியான அழகு, அற்புதமான சோபை இருக்குமே, அந்த அழகும் சோபையும் சேர்ந்து சந்திரிகாவின் கிளிபோன்ற முகத்தில் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தன. இப்படிப்பட்ட ஒரு பெண்ணா, ரவீந்திரனுக்கும் கல்யாணிக்கும் மத்தியில் இம்மாதிரியான ஒரு பெரும் புயல் வீசுவதற்குக் காரணமாக இருக்கிறாள்? அப்புலிங்கத்தால் அதை நம்பவே முடியவில்லை!

குழந்தைகள் பாடிய சுண்டெலிப் பாட்டு அவனுடைய மனத்திலே புரண்டது. ஆக்கவும், அரைக்கவும், தூக்கவும், வைக்கவும் வேண்டாம், தன் அருகிலேயே இருந்தால் போதும் என்று இந்தச் சந்திரிகாவை அவன் தன் வீட்டு மாடியிலேயே வைத்திருக்கிறானா? உண்மையில் ரவீந்திரனுக்கும் சந்திரிகாவுக்கும் இடையே இருந்த தொடர்புதான் என்ன? கல்யாணிக்கு எத்தனை விசனம் ஏற்படும்படி செய்திருக்கிறது இந்த உறவு? உண்மையில் நாகரத்தினம் சொன்னதெல்லாம் மெய்யாக இருக்குமானால், கண்ணால் கண்ட அந்த ரூபவதியின் அழகெல்லாம் வெறும் பகட்டா? என்ன உலகம் இது? என்ன மனிதர்கள் இவர்கள்? என்ன மன இயல்புகள் இவர்களுக்கு?—ஒரே குழப்பமாக அல்லவா இருக்கிறது!

"என்ன அப்புலிங்கம்! ஏது யோசனை வெகு பலமாக இருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராமநாதன்.

"ராமநாதனா? அடாடா! உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஒரு வாரமாக எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீயே வந்து விட்டாய். பேஷ்!!" என்று அவனை எழுந்து வரவேற்றான் அப்புலிங்கம்.

"அப்படியென்ன சமாசாரம், அவ்வளவு ஆவலோடு என்னைப் பார்க்க வேண்டும் என்று நீ ஆசைப்பட—"

"நீ தாயுமானவர் தெருவில் தானே இருக்கிறாய்?"

"ஆமாம். தாயுமானவர் தெருவில்தான் இருக்கிறேன். ரவீந்திரன் வீட்டுக்கு எதிர் வீட்டிலேதான்!"

"எப்படி? ரவீந்திரன் வீட்டுக்கு எதிர் வீட்டிலா!" என்றான் அப்புலிங்கம்.

"நீ எந்த மனிதனுடைய புல்லாங்குழலை ஈடு பிடித்திருக்கிறாயோ அதே மனிதனுடைய வீட்டுக்கு எதிரில்!"

"உனக்கு எப்படித் தெரியும் நான் புல்லாங்குழல் ஈடு பிடித்த சமாசாரம்?"

"ரவீந்திரனே சொன்னான்!"

"அதெப்படி அவனுக்கு அத்தனை ஞாபக சக்தி?"

"உன்னை ஒரு வர்ணனை கொடுத்தான், செட்டியார் கடையில் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்ததாக! உடனே கண்டு பிடித்து விட்டேன்!" என்று சொன்னான் ராமநாதன்.

அப்புலிங்கம் ராமநாதனைப் பார்த்துச் சொல்லுவான்:

"உன்னைச் சந்தித்து அந்த ரவீந்திரனைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று விரும்பினேன்."

"என்ன தெரிந்து கொள்ள வேண்டும்? அவன் யோக்கியனா அல்லது அயோக்கியனா என்றுதானே?"

அப்புலிங்கம் இதற்குப் பதில் சொல்லத் தயங்கினான்.

"அப்பு! ஒன்று சொல்கிறேன், கேள். இந்தத் திருச்சியில், ஏன், இந்தத் தமிழ் நாட்டிலேயே, அந்தமாதிரி ஒரு அற்புதமான உத்தமக் கலைஞனைப் பார்ப்பது கஷ்டம்!" என்றான் ராமநாதன்.

"அப்படியானால் சந்திரிகா?"

"அவளைப் போன்ற ஒரு நடனமணி ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறைதான் பிறக்கிறாள். இது ஏதோ புகழ்ச்சி யில்லை. முக்காலும் உண்மை!"


ராமநாதனுடைய வார்த்தைகளில் உறுதி தொனித்தது. அப்புலிங்கத்துக்கு மீண்டும் மூளை குழம்பியது!

"அப்படியானால் கல்யாணி?"

"அவளைப்போல ஒரு உத்தமமான மனைவி உலகிலேயே இருக்க முடியாது! அதனால்தான், மூன்று பேருமே நல்லவர்களாக இருப்பதால்தான், இத்தனை குழப்பம்! வாழ்வின் புதிர் என்பதே அதுதானே அப்புலிங்கம் — உனக்குத் தெரியாத தத்துவமா!"

அப்புலிங்கம் மௌனமாக ஒரு கணம் யோசித்து விட்டுக் கேட்டான்: "ராமநாதா, இவர்களுடைய எதிர்காலம் என்ன ஆகப் போகிறது என்றுதான் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது!"

CPG. 1468 (A)



நீங்கள் சும்மா உட்கார்ந்திருக்கும் போது கூட உங்கள் சக்தி செலவாகிக் கொண்டு வருகிறது

இழந்த சக்தியை க்ளுகோவிடா எவ்விதம் ஈடு செய்ய உதவி, உங்களுக்கு தெம்பும் சுறுசுறுப்பும் ஊட்டுகிறது.

இரவு பகல் ஒவ்வொரு நிமிஷமும், நீங்கள் விச்ராந்தியுடன் இருப்பதாக நினைக்கும்போது கூட, உங்கள் இருதயமும் மற்றும் முக்கியமான உறுப்புகளும் கடுமையாக வேலை செய்கின்றன. அவைகள் தூங்குவதுமில்லை, களைப்பாறுவதுமில்லை. உங்கள் சக்தியை விரயமாக்கிக்கொண்டே வருகின்றன. தினசரி வேலைகளோடு இப்படி வீணாகும் சக்தியும் சேர்ந்து உங்கள் உடல் வலிமையை பாதிக்கக் கூடுமாதலால், உங்களுக்கு அதிகப்படி சக்தி கிடைப்பதற்கு ஒரு மார்க்கம் தேவையாவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதற்கு க்ளுகோவிடா உட்கொள்வதைவிட சிறந்தவழி கிடையாது.

க்ளுகோவிடாதான் சக்தியூட்டும் இயற்கை உணவாகிய சுத்தமான க்ளுகோஸ். அதில் விடமின்களும் தாதுப் பொருள்களுங்கூட சேர்க்கப்பட்டுள்ளன. பிரதிதினமும் இரண்டு ஸ்பூன் அளவு க்ளுகோவிடா, தேநீர், காப்பி அல்லது ஏதாவது குளிர்ந்த பானத்துடன் சேர்த்துப் பருகவும். அது உங்கள் தினப்படி வேலையை எதிர்த்து நிற்கவும் ஓய்ந்த வேளைகளை அதி உற்சாகமுள்ளதாகவும் செய்ய உதவியாயிருக்கும்.



க்ளுகோஸ் மிக எளிதில் ஜீரணமாகிறது—உடனடியாக சக்தி தருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு அகில இந்திய ஆராய்ச்சியின் மூலம் 10 டாக்டர்களில் 9 பேர் வழக்கமாக இதையே சிபார்சு செய்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவ்வன்றாட அலுவல்களில் எவ்வளவு சக்தி செலவழிகிறதென்பதை பாருங்கள்!


(ஒவ்வொரு வேலையும் அதனால் விரயமாகும் சக்தியை ஈடுசெய்யக்கூடிய க்ளுகோஸின் அளவைக்கொண்டு மதிப்பிடப்பட்டிருக்கிறது)



கடற்கரையில் காற்று வாங்குதல் மணி 1-க்கு 2 அவுன்ஸ்



ஒரு கடிதம் டைப் அடித்தல் மணி 1-க்கு 4 அவுன்ஸ்



நீந்துதல் மணி 1-க்கு 7 அவுன்ஸ்

உங்களுக்கு **க்ளுகோவிடா** அவசியம்

—இன்றே ஒரு டின் வாங்குங்கள்!

காரன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட், பம்பாய் 1-கல்கத்தா 1.

"மனிதனுடைய எதிர் காலத்தைத் தெரிந்து கொள்வதில் உனக்கு ஏன் இத்தனை அக்கறை?"

"அந்த அக்கறை யாருக்குத்தான் இல்லை இந்த உலகில்? ஜோதிஷம் என்றும் ஆருடம் என்றும் எத்தனை சாஸ்திரங்கள் நமது தென்னாட்டில் உதித்திருக்கின்றன. இந்த அக்கறை மகான்களுக்குக்கூட உள்ள அறிவுத் தாகம் ஆயிற்றே!" என்று பதில் சொன்னான் அப்புலிங்கம்.

"அப்படியில்லை. வாழ்க்கையின் எதிர் காலம் ஒரு புதிராக இருப்பதினால்தான் அதில் ரஸம் இருக்கிறது. முன்னாடியே எல்லாம் தெரிந்து விட்டால் அதில் ரஸம் இல்லை!" என்றான் ராமநாதன்.

"இல்லவே இல்லை. முன்னதாகவே நாம் படித்த ஒரு கதையை நாடகமாகப் பார்ப்பதில் ரஸம் இருப்பதில்லையா? படித்த ஷேக்ஸ்பியர் நாடகங்களையே திரும்பப் பார்க்கும்போது, நாம் எதிர் பார்க்கும் சம்பவங்கள், எதிர்பார்க்கும் சம்பாஷணைகள் அப்படி அப்படியே மேடையில் நடக்கும்போது நம்முடைய ரஸாநுபவம் அதிகந்தான் ஆகிறது. குறை வதில்லை. ராமாயணத்தில் நாம் எதிர் பார்த்தபடி சீதையை ராவணன் தூக்கிப் போகும்போது அவளுடைய சோகத்தில் நாமும் கண்ணீர் வடிக்கிறோம். திரும்பி அவள் ராமனிடம் செல்லப் போகிறாள் என்று தெரிந்திருந்தாலுங்கூட, அந்தச் சமயத்தில் நம்முடைய கண்ணீர் நின்று விடுகிறதா என்ன? இல்லவே இல்லை! இது போலத்தான் எதிர் காலத்தைப் பற்றிய ஜோதிஷ அறிவும்! தெரிந்த கதையை நாடகமாகப் பார்ப்பதுபோல இருக்கும் அது!" என்று பலமாக ஒரு போடு போட்டான் அப்புலிங்கம்.

அப்பொழுது "'கிணுங் கிணுங்......... கிணுங் கிணீங்' என்று டெலிபோன் மணி அடித்தது. வேகமாக எழுந்து உள்ளே போன அப்புலிங்கம், டெலிபோனைக் காதில் வைத்ததும் அப்படியே பதறிப் போய் விட்டான்! அவனால் அதை நம்பவே முடியவில்லை:

திருச்சி ஆஸ்பத்திரியிலிருந்து யாரோ பேசினார்கள். "உங்கள் அப்பாவும் அம்மாவும், இன்னொரு அம்மாளும் கார் விபத்திலே சிக்கி இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்!" என்ற செய்தியை, கையும் காலும் முறிந்து போன ஒரு கொண்டி ஆங்கிலத்தில் யாரோ அரை குறைப் படிப்பாளி ஒருவன் பெருமூச்சு விட்டுக்கொண்டே டெலிபோனில் உரத்த குரலில் சொன்னான்.

போட்டிருந்த சட்டையைக் கூட மாற்றவில்லை அப்புலிங்கம். "ராமநாதா! ஒரு விபத்து நேர்ந்திருக்கிறது. கொஞ்சம் என்னோடு புறப்படு" என்று சொல்லிக் கொண்டே அப்படியே கார் ஷெட்டுக்குள்ளே போய்த் தன்னுடைய ஆஸ்டின் காரை வேகமாக எடுத்து வெளியே வந்து ராமநாதனையும் காரில் ஏற்றிக் கொண்டு, ஆஸ்பத்திரியை நோக்கிச் சிட்டாகப் பறந்தான் அப்புலிங்கம்.

* * *

திருச்சியின் எல்லையிலேதான் நடந்தது அந்தக் கார் விபத்து. பள்ளத்துக்குள்ளே சிவப்புக் கார் இறங்கியதும், பின் கதவு படார் என்று திறந்ததும் எல்லாம் ஒரு விநாடியில் நடந்த சம்பவங்கள். கல்யாணி வெளியே எறியப்பட்டுக் கீழே உருண்டு விழுந்தாள். "ஐயோ! கல்யாணி" என்று மிராசுதார் மனைவி கதறியதுதான் தெரியும். அடுத்த விநாடி அவள் மூர்ச்சையாகி விட்டாள்.

முருகானந்தம் கார் விபத்துகளைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் காரை விட்டு வெளியே குதிப்பது பெரிய ஆபத்தாக முடியும் என்று அவருக்குத் தெரியும். என்றாலும் கையிலும் காலிலும் பலமாக அடிபட்டு விட்டது. வெளியே குதிக்காததால் தப்பித்துக் கொண்டார். அவருடைய மனைவி மூர்ச்சையாகி விட்டதால், குப்புறச் சரிந்த காரின் பின் சீட்டில் சுருட்டி மடக்கிக் கொண்டு அப்படியே கிடந்தாள். [illegible]மை அடி பட்டிருந்தது. மற்றப்படி ஆபத்து ஒன்றும் இல்லை.

கல்யாணி மட்டும் கார் சரிந்து கிடந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவிலே ஆற்று மணலில் உருண்டு போய்ப் பிரக்ஞையற்ற நிலையில் கிடந்தாள். அப்பொழுது, ஏரும் கலப்பையும் கொண்டு வயலை நோக்கி நடந்து கொண்டிருந்தான் ஒரு குடியானவன். விபத்து நடந்ததைத் தொலைவிலே பார்த்ததும், அப்படியே மாட்டையும் கலப்பையையும் விட்டு விட்டு அங்கே வேகமாக ஓடோடி வந்தான்.

விபத்துக்குக் காரணமாக அமைந்த பார வண்டிக்காரன் வண்டியிலிருந்து கீழே குதித்தான். இருவருமாகப் பாய்ந்து சென்று, சரிவிலே கிடந்த மோட்டாருக்குள் இருந்த மனிதர்களை மிகப் பிரயாசைப்பட்டு வெளியே கொண்டு வந்து சேர்த்தார்கள்.

இதற்குள் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பல குடியானவர்கள் அங்கே வந்து விட்டார்கள். எல்லாரும் சேர்ந்து கல்யாணியம்மாளைப் பள்ளத்திலிருந்து தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

தண்ணீர் தெளித்ததால் முகத்தைச் சற்றுத் திருப்பிக் கண்களைத் திறந்து பார்த்த மிராசுதார் மனைவி, முனக ஆரம்பித்தாள். இடுப்பில் பலமாக அடிபட்டிருந்தது அவளுக்கு. குடியானவர்கள் அவளையும் மிராசுதாரையும் தூக்கி எடுத்துக் கொண்டு மேட்டிலே ஏறிச் சாலைக்கு வந்தார்கள். கல்யாணி அம்மாளுக்கோ எவ்வளவு தூரம் தண்ணீர் தெளித்தும் மூர்ச்சை தெளியவில்லை. குப்புறக் கிடந்த மோட்டாருக்குள் இருந்து ஒரு சால்வையை எடுத்து வந்து அதைத் தரையிலே விரித்தார்கள். கல்யாணி அம்மாளை அதில் படுக்கப் போட்டார்கள். தலைப்பாகையை அவிழ்த்து உதறி, மிக்க அன்போடும் கவலையோடும் அந்தக் குடியானவர்கள் கல்யாணி அம்மாளுக்கு விசிறினார்கள்.

பஸ் வருகிற நேரம் அது. எல்லாருடைய பார்வையும் சாலையிலேயே நின்றது.

பத்து நிமிஷத்துக்கெல்லாம் 'ஹாரன்' சத்தம் கேட்டது.

லால்குடியிலிருந்து திருச்சிக்குச் செல்லும் முதலாவது பஸ் அந்த எல்லையை அணுகிக் கொண்டிருந்தது. விபத்து நேர்ந்து விட்டது என்பதைச் சற்றுத் தொலைவிலேயே கவனித்த பஸ் டிரைவர், வேகத்தை நிதானித்தான். பார வண்டி கலைந்து போய்ப் பாதையிலே அப்படியே நின்றதைப் பார்த்ததும், டிரைவர் ப்ரேக்கைப் போட்டு பஸ்ஸை நிறுத்தினான். அடுத்த கணம், பிரயாணிகள் எல்லாரும் கீழே இறங்கினார்கள்.

மூர்ச்சையாகிக் கிடந்த கல்யாணி அம்மாள் கண்ணைத் திறக்கவே இல்லை. மிராசுதார் மட்டும் அந்த அதிர்ச்சியிலும் நன்றாக நினைவோடுதான் இருந்தார்.

"எங்கள் மூன்று பேரையும் திருச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுங்கள். அவசரமாகச் சென்றால் தான் கல்யாணி பிழைப்பாள்!" என்றார் முருகானந்தம்.

பஸ் மூவரையும் ஏற்றிக் கொண்டு திருச்சி ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கி விரைவாகப் புறப்பட்டது.

* *

அன்று ஒரு முக்கிய தினம். ரவீந்திரனுடைய நெடு நாளையக் கனவு ஒன்று நனவாகும் மகத்தான நாள். திருச்சி 'தேவர் ஹாலி'ல் சந்திரிகாவின் நடனம், ஜில்லா கலெக்டரின் தலைமையில் நடக்க இருந்தது. அந்த அபூர்வ நாட்டிய நங்கையின் திறமையைப் பாராட்டி, 'நாட்டிய மணி' என்ற பட்டத்தை வழங்குவதாக ஏற்பாடு. எனவே, சூரியன் உதித்ததுமே அவசரம் அவசரமாக எழுந்து ரவீந்திரன் விழாவுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் முனைந்திருந்தான். அந்த சந்தர்ப்பத்திலேதான் அவனைத் தேடிக் கொண்டு, ஆஸ்பத்திரிப் பையன் சைக்கிளில் அலைந்து கொண்டிருந்தான்!

அன்று ரவீந்திரன் தேடிச் சென்று பார்க்காத பெரிய மனிதர்களே திருச்சியில் இல்லை. தன்னுடைய வாழ்வின் லக்ஷ்யப் பெண் 'நாட்டிய மணி'யாகத் திகழ்வதைக் கண்டு களிப்பதிலேதான் அவனுக்கு எத்தனை ஆனந்தம்!

திருச்சித் தேவர் மன்றம் ஒரே கோலாகலமாகக் காட்சி தந்தது. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் என்று கூட்டம் தேவர் ஹாலைச் சுற்றி முட்டி மோதிக் கொண்டிருந்தது. மன்றத்துக்கு உள்ளே நெருக்கமான ஜனத் திரள்!

திரை தொங்கியது. மின்சார விளக்குகள், நிலவை உருக்கிக் கொண்டு வந்து அந்த ஹாலிலே ஓட விட்டமாதிரி ஒரே ஒளிப் பிரவாகமாகப் பொழிந்து கொண்டிருந்தன. 'கண கண' என்று மணி அடித்தார்கள். வாத்தியங்கள் இணைந்து ஒலித்தன. நாட்டை ராகத்தில் 'தாயுமானவனே' என்ற துதி கீதம் முழங்கியது. சலங்கையின் ஒலி 'கல கல'



என்றது. திரை உயர்ந்தது. சந்திரிகா 'கனீர் கனீர்' என்று அரங்கத்திலே வந்து தோன்றிக் கைகூப்பி நின்றாள். அடுத்த கணம் மத்தளம் முழங்கியது. புல்லாங்குழலும் வீணையும் துதி கீதத்தை எடுத்து இயம்பின. "தாம் தித் தாம் தை" என்று சொற்கட்டு கேட்டது. மூடி விழிக்கும் நேரத்தில், பக்தனுக்கு இரங்கி இறைவன் தாயாக வந்து மருத்துவம் செய்து 'தாயுமானவர்' என்று திருநாமம் சூட்டிக் கொண்ட அந்த தெய்விக லீலையை அபிநயமாக அரங்கிலே மிக்க எழிலோடு சித்திரித்தாள் சந்திரிகா!



துதி கீதத்தைத் தொடர்ந்து கீர்த்தனைகளும், பதங்களும், 'விறு விறு' என்று அரங்கிலே குதித்துக் கொண்டு வந்தன. தென்னாட்டு இசைப் பரம்பரையின் சங்கீதச் செல்வங்கள் எல்லாம் அரங்கிலே தலைநிமிர்ந்து நின்று ஸப்த ஸ்வரங்களிலே பேசின! ரவீந்திரனுடைய பெருமையைச் சொல்லி முடியாது.

ஜில்லா கலெக்டர் எழுந்து 'நாட்டிய மணி' என்று பட்டம் சூட்ட ஆயத்தமானார். வெள்ளிக் குழல் ஒன்றில் அந்தப் பட்டத்தைத் தாங்கிய இதழ் ஒன்று சுருட்டி வைக்கப் பட்டிருந்தது. அழகான அலங்காரங்களோடு கூடிய அந்த வெள்ளிப் பேழையை ஒரு கனவான் எடுத்துக் கொண்டு வந்து கலெக்டரிடம் கொடுத்தார். அதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு நாலு வார்த்தை சந்திரிகாவைப் பற்றிப் பேசுவதற்கு முனைந்தார் ஜில்லா கலெக்டர். அப்பொழுது, அரங்கத்தின் இடது பக்கத்து வாசல் வழியாக ஆஸ்பத்திரிப் பையன் உள்ளே நுழைந்தான். நாகரத்தினத்தின் கைப்பட எழுதிய கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து ரவீந்திரனிடம் கொடுத்தான் அவன். "அக்காள் கல்யாணிக்கு ஜன்னி அதிகமாக இருக்கிறது. உடனே இங்கு வரவும்" என்று அதில் கண்டிருந்தது.

லால்குடிக்குப் போன மனைவி திருச்சி ஆஸ்பத்திரிக்கு எப்படி வந்தாள்? நாகரத்தினம் எங்கே இங்கு வந்து சேர்ந்தான்? ஒன்றுமே புரியாமல் தலை சுற்றியது ரவீந்திரனுக்கு. இதற்குள்ளே கலெக்டர் எழுந்து நின்றதற்கு அறிகுறியாக, ஜனங்கள் பலமாகக் கை தட்டினார்கள். எழுந்து நின்ற கலெக்டர் ரவீந்திரனைக் கூப்பிடும்படி பக்கத்தில் இருந்தவரிடம் சொல்லிக் கொண்டே, அவன் அங்கு வருவதற்காக ஒரு நிமிஷம் காத்து நின்றார். (தொடரும்)

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்,
29—1—48

ஒரு பழம் பாடல் :—நாயகியும் தோழியும் ஒரு தனியான அழகான இடத்தில் இருக்கிறார்கள். நாயகனை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் நாயகி. ஆனால் அவன் வரவில்லை. மனசில் பயம் எப்படி எப்படியோ வந்து கொண்டிருக்கிறது—மோசம் பண்ணி விட்டானோ என்றெல்லாம். இத்தனை நாளும் உண்மையா யிருந்த நாயகன்தானே என்றெல்லாம் உள்ளம் தத்தளிக்கிறது.

மாருக் காதலர்
வரல்மறந் தனரே!
ஆருக் கட்பனி
வரல் ஆ னவ்வே!
வேரும் என் தோள்
வளைநெகி ழும்மே!
கூருய் தோழி, யான்
வாழும் ஆறே.

[மாருக் காதலர் : இதுவரையும் மனம் மாறுபடாமல் அன்பாய் இருந்த காதலர் ; ஆருக் கட்பனி : ஆற்று வெள்ளம் போலக் கண்ணீர் ; வரல் ஆனவ்வே : வர ஆரம்பித்து விட்டதே ; வேரும் என் தோள் வளை : வேறொரு தோள் என்று சொல்லும்படி மெலிந்த என் தோளில் அணிந்துள்ள வளையம் ; நெகிழும்மே : நெகிழ்ந்து விழப் பார்க்கின்றனவே; கூருய் தோழி : நீதான் சொல்லேன் தோழியே ; யான் வாழும் ஆறே : நான் உயிரை இழந்து போகாமல் வாழுவதற்கான வழியைத்தான்]

பாடல் வெகு அருமையான பாடல். வார்த்தைகளும் தானங்களுமாகச் சேர்ந்து சோகத்தை அப்படியே கசிய வைக்கின்றன. நாடகப் பண்பு வெகு தெளிவாய்ப் பிரகாசிக்கிறது.

அன்புள்ள
டி.கே. சிதம்பரநாதன்



உ

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருக்கோயில் திருப்பணி

மஹா கும்பாபிஷேகம்

மன்மத வருஷம் ஆனிமீ 23உ

(7-7-55) வியாழக்கிழமை

○●○

சிவத்தலங்களுள் 'கோயில்' என்ற சைவத் திருமறைகளில் சிறப்பித்துப் போற்றப் பெறுவது தில்லையம்பதியாகும். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும் சைவத் திருமுறை யாசிரியர்களும், வேந்தர், குறுநில மன்னர், படைத் தலைவர். அமைச்சர், செல்வர், பொதுமக்கள் ஆகிய எல்லா மக்களும் இப்பதியில் உள்ள பொன்னம்பலத்தில் ஆடல் புரியும் நடராஜப் பெருமானை வழிபட்டு இம்மை மறுமை இன்பங்களை அடைந்துள்ளார்கள். "மூர்த்தியம்பலக் கூத்தனது உருவே, எத்திறுக் தலம் எழில் புலியூரே தீர்த்தமென்பது சிவகெங்கையே" என மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்றினுலும் முதன்மை பெற்று விளங்குவது பெரும் பெற்றப் புலியூராகிய இச் சிதம்பரமாகும். ஆதலால் தில்லைப் பெருங்கோயில் "பூலோக கைலாயமென ஆன்றோர்களால் போற்றப் பெறுவதாகும்.

இத்தலத்தின் இறைவன் உலகெலாம் உய்யத் திருநடனம் செய்யும் அருள் நிலையமாக விளங்குவது கனகசபையாகிய பொன்னம்பலமாகும். ஞான ஆகாசமாகத் திகழும் இப் பொன் மன்றத்தை முடிவேந்தர் பலரும் செம் பொன்னுல் வேய்ந்து வழிபட்டுள்ளார்கள்.

தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் ஆடல் புரியும் கூத்தப்பிரானது அருட் கலையே உலகிலுள்ள திருக்கோயில்கள் எல்லாவற்றிலும் நிலைபெற்று உயிர்களை உய்விக்கின்றது எனவும், ஒவ்வொரு நாளும் அர்த்தயாமத்தில் அவ்வருட் கலைகள் எல்லாம் மீண்டும் இத் தில்லையம்பலத்திலே வந்து ஒடுங்குகின்றன எனவும் பாரதநாட்டு அருள் நூல்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இத் திருக்கோயிலுக்கு 63 ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அறுபது ஆண்டுகளுக்கொருமுறை புனருத்தாரணமும் மகா கும்பாபிஷேகமும் செய்து வழிபாடு செய்ய வேண்டும் என்ற சாத்திர முறையை யொட்டி இப்பொழுது திருப்பணி செய்ய வேண்டியுள்ளது.

அதற்கு இணங்கத் திருவருள் கூட்டுவிக்கின்ற இவ்வரிய பேற்றைத் துணை கொண்டு, இவ்வாலயத்துட் சிற்சில இடங்களைத் திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகம் செய்ய ஆன்றோர்களால் "கும்பாபிஷேகக் கமிட்டி" யொன்று நிறுவப் பெற்றுள்ளது. மேற்படி கும்பாபிஷேகம் நாளது மன்மத ஆண்டு ஆனித் திங்கள் 23உ (7-7-55) வியாழக்கிழமை யன்று நடைபெற ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருளைத் துணை கொண்டு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.


எல்லாத் திருத்தலங்கட்கும் பொது நிலையமாக விளங்குவதால் 'பொது' எனப் போற்றப் பெறும் இத் திருக்கோயில் திருப்பணியில் இந்நாட்டிலுள்ள எல்லா மக்களும் பங்கு கொள்ளுதற்கு உரியவராவர். எனவே இவ்வரிய பணியில் சிவநேசச் செல்வர்களும் சிறிய அன்பர் பெருமக்களும் பங்கெடுத்துக் கொண்டு தத்தம் ஆற்றலுக்கேற்ப பொருளுதவி புரிந்துதவ வேண்டுகிறோம்.


மேற்படி சத் கைங்கரியத்திற்கு உரிய தொகைகள் "பொக்கிஷதார், ஸ்ரீ சபாநாயகர் கோயில் திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டி, சிதம்பரம்" என்கிற விலாசத்திற்கு அனுப்பும்படி கோரப்படுகிறது.


இங்ஙனம்,

சிதம்பரம் 4-3-55 | ஸ்ரீ சபாநாயகர்கோயில் திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டியார்


ஹாஸ்யக் களஞ்சியம்



தம்பதிகளை வைத்துக் கல்யாணம்....
... தம்பதிகளுக்காகவே பலத்த சண்டை....
... ஆனால் அந்தத் தம்பதிகளோ!?


பரீட்சையில் பெரிய பெரிய மார்க் வாங்கிக் கொண்டு வரேன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்.



"என்ன? துணியெல்லாம் துவைத்தாச்சா! சப்தமே கேட்க வில்லையே?"
"கேட்கவில்லையா? நாளையிலிருந்து அங்கு ஒலி பெருக்கி வைத்து விடுங்கள்."


"நான் பொய் சொல்வதையே விட்டு விட்டேன்."
"பொய்! பொய்! சுத்தப் பொய்."



பிரசவ ஆஸ்பத்திரி.
"நீங்கள் தானே காத்திருக்கிறீர்கள்? உங்களுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றது."
"ஐயையோ! நான் இங்கு வெய்யிலுக்காகச் சற்று ஒதுங்கி யிருக்கிறேன்"


மூனு பேர் இரண்டு ரூபாய்! பில் யாரிடம் கொடுப்பது.. சீக்கிரம் சொல்லுங்கள்.!


"இரண்டு அடி மூன்று அங்குலம் ஒரு பாம்பு பார்த்தேன்."
"என்ன 'கரெக்டா' சொல்றே? பாம்பின் மேல் அங்குலம் மார்க் பண்ணி இருந்ததோ?"


①
②
சமத்து, ரொம்பச் சமத்து!
③
④

சாமா



34. பிழைத்து விட்டார்கள்!

துறவி சமீபத்தில் வந்தவுடன் பிரபாகரனும் உமாவும் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்து வணங்கினார்கள்., "ஐயா, நீங்கள் இங்கு வந்தது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இங்கு எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டான் பிரபாகரன்.

"பிரபாகரா! உனக்கு நான் வந்தது ஆச்சரியமாக இருக்கும். ஆனால் இப்பொழுது நடக்கப் போகிறதே, அது எல்லாவற்றையும் விட பெரிய ஆச்சரியத்தைக் கொடுக்கப் போகிறது. சற்றுப் பொறு'' என்றார் பெரியவர்.

"ஐயா, நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் இங்கு நடக்கப் போகும் விஷயத்தைப் பற்றி உங்களுக்கு முன்பாகவே தெரியும்போல் இருக்கிறதே? நீங்கள் யார்? உங்களுக்கும் இங்குள்ள கல்லறைத் தீவுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று வியப்புடன் கேட்டான் பிரபாகரன்.

உடனே உமா, "நீங்கள் எங்களுக்கு வில் கொடுத்து உதவி செய்ததற்கு மிகவும் வந்தனம். உங்கள் வில், அம்பு ஜாக்கிரதையாக எங்களிடமே இருக்கின்றன'' என்றாள்.

துறவி சிரித்துக் கொண்டே உமாவின் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"பிரபாகரா, நான் யார் என்று நீ தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாய் அல்லவா? ஆனால் நீயும், உமாவும் யார் என்று நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையே? நான் யார், நீங்கள் யார்? இதோ அடுத்த நிமிஷத்தில் உயிர் பெற்று வெளியே வரப் போகும் ஆனந்த தீர்த்தரும் அவர் மனைவி சியாமளா தேவியும் யார் என்பதெல்லாம் இப்பொழுது உங்களுக்கு விளங்கும்'' என்று கூறினார் துறவி.

அந்தச் சமயத்தில் கண்ணாடிப் பெட்டியில் இருந்த ஆனந்த தீர்த்தருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு வர ஆரம்பித்தது. மெதுவாகக் கண் விழித்தார். உடனே கண்ணாடிப் பெட்டியைத் தம்கைகளினால் பலமாகத் தூக்கினார். கண்ணாடிக் கதவுக்கு நூறாக உடைந்து சற்று தூரத்துக்கப்பால் போய் விழுந்தது. உடனே ஆனந்த தீர்த்தர் மிகுந்த கோபத்துடன் எழுந்தார். அவசரம் அவசரமாகச் சியாமளா தேவியின் பெட்டியின் அருகில் சென்றார். அந்தப் பெட்டியின் கதவையும் திறந்தார். அப்பொழுதுதான் மயக்கம் தெளிந்தவள் போல் கண்களை விழித்துக் கொண்டே அவள் இப்படியும் அப்படியுமாகத் திரும்பிப் பார்த்தாள். "சியாமளா, எழுந்திரு'' என்று மெதுவாக அவளைக் கண்ணாடிப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்தார் ஆனந்த தீர்த்தர். பிறகு இருவரும் ஒருவருக்கொருவர் ஒன்றும் புரியாமல் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

"சியாமளா! ஏன் மௌனமாக இருக்கிறாய்? இதெல்லாம் நீ செய்த காரியம் தான். 'சித்தப்பா, சித்தப்பா' என்று வீரசிம்மனை அரண்மனையில் வைத்துக் கொண்டாடியபடியால் கடைசியில் அவன் நம்மையே சிறைப்படுத்தி விட்டான்!'' என்றார் ஆனந்த தீர்த்தர். அவர் முகம் கடுமையாயிருந்தது.

"நம்முடைய குழந்தைகள் பிரபாகரனின் கதியும், உமாவின் கதியும் என்ன ஆயிற்று?'' என்று சியாமளா தேவி சொன்னதுதான் தாமதம்; ஆவேசம் கொண்டவர்போல் ஆனந்த தீர்த்தர், "பிரபாகரன் எங்கே? என் குழந்தை உமா எங்கே?'' என்று கத்திக்கொண்டே கல்லறைக்கு வெளியே வந்தார். ஆனந்த தீர்த்தரைப் பின் தொடர்ந்தாள் சியாமளா தேவி. வெளியே வந்த ஆனந்த

தீர்த்தர் அங்கு நின்று கொண்டிருந்த துறவியைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டார். ஆனந்த தீர்த்தரும், சியாமளா தேவியும் அவரை நமஸ்காரம் செய்தார்கள்.

"குலகுருவே, இங்கு உங்களைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் எதற்கு இங்கு வந்தீர்கள்? என் குழந்தைகள் பிரபாகரனும், உமாவும் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள்? அவர்களைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று பதைபதைப்புடன் கேள்விகள் கேட்டார் ஆனந்த தீர்த்தர்.

உடனே துறவி, "ஆனந்த தீர்த்தரே, எல்லாம் உங்கள் க்ஷேமத்தை நோக்கியே நான் இங்கு வந்தேன். அதோ நிற்கிறார்களே, அவர்கள் யார் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"தெரியவில்லையே! இவர்கள் யார்?" என்றார் ஆனந்த தீர்த்தர். உடனே சியாமளா தேவி, 'இவர்களை நான் எங்கேயோ பார்த்தாற்போலிருக்கிறதே' என்று யோசித்த வண்ணமாக நின்று கொண்டிருந்தாள்.

"இவர்கள்தான் உங்களது புதல்வனும் புதல்வியும்; பிரபாகரனும் உமாவும்!" என்றார் துறவியாகிய குலகுரு.

"என் கண்மணிகளாகிய பிரபாகரனும் உமாவுமா! என்ன ஆச்சரியம்!" என்று ஓடோடியும் சென்று முதலில் அவர்களை அணைத்துக் கொண்டாள் சியாமளா தேவி. அப்பொழுது அவளது எதிர்பாராத ஆனந்தத்தினால் அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்தது.

துறவி சொல்லியதைக் கேட்ட பிரபாகரனுக்கும் உமாவுக்கும் எப்படி இருந்திருக்கும்? தாங்கள் வெகு சிரமப்பட்டுச் சிறையிலிருந்து விடுதலை செய்தது தங்களது தாயாரும் தகப்பனாரும் என்று அறிந்த உடனே அவர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். தங்கள் தகப்பனாராகிய ஆனந்த தீர்த்தரை அவர்கள் ஆவலுடன் தழுவினார்கள்.

அப்பொழுது சியாமளா தேவி, "குருதேவா! நீங்கள் சொல்லிய பிறகுதான் நான் இரண்டு பேர்களையும் அடையாளம் தெரிந்து கொண்டேன். நான் முன்பு பார்த்ததற்கும் இப்போது இவர்களைப் பார்ப்பதற்கும் வயதில் மிகுந்த வித்தியாசம் தோன்றுகிறதே!" என்றாள்.

"ஆமாம், அம்மா! உண்மையிலேயே இவர்களை நீங்கள் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பாகத்தான் பார்த்திருக்க முடியும்" என்று பதிலளித்தார் குலகுரு.

"நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் நாங்கள் இந்தக் கல்லறையில் பத்து வருஷங்களாகவா அடைபட்டு இருக்கிறோம்? ஆச்சரியமாக இருக்கிறதே! அப்படியானால் நாங்கள் அந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் பத்து வருஷங்களாகவா தூங்கிக் கொண்டிருந்தோம்?" என்று கேட்டார் ஆனந்த தீர்த்தர்.


"நீங்கள் தூங்கவில்லை. உயிரற்ற பிணமாகத்தான் இருந்தீர்கள். உங்களுக்கு இப்பொழுது உயிர் கொடுத்தவன் உங்கள் புதல்வன் பிரபாகரன் தான். அதைப் பற்றிப் பிரபாகரனே உங்களிடம் சாவகாசமாகச் சொல்லுவான்" என்றார் குலகுரு.

"நாங்கள் எப்படி இங்கு கொண்டு வரப்பட்டோம்?" என்று கேட்டார் ஆனந்த தீர்த்தர்.

"உள் நாட்டுக் கலகத்தை உண்டாக்கி உங்களை இரகசியமாக உங்கள் சித்தப்பா வீரசிம்மன் கைது செய்தானல்லவா?" என்றார் குலகுரு.

"ஆமாம்!"

"அப்பொழுது உங்கள் இருவருடைய உயிருக்கும், உங்களது குழந்தைகளான பிரபாகர், உமாவின் உயிருக்கும் தீங்கு இழைக்கத் திட்டமிட்டிருந்தான் வீரசிம்மன். அதைத் தெரிந்து கொண்ட நான் அவனுக்குப் பல புத்திமதிகளை எடுத்துரைத்தேன். அவன்தான் மிகவும் பிடிவாத குணம் உள்ளவன் என்று உங்களுக்குத் தெரியுமே? ஆதலால் என் புத்திமதிகளைப் புறக்கணித்தான். பிறகு, 'நீங்கள் அரசாங்க விஷயத்தில் எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் ஆனந்த தீர்த்தர் உயிருக்கும், அவரது மனைவியார் உயிருக்கும், பிரபாகரன், உமா இவர்கள் இருவரின் உயிருக்கும் ஒரு



இந்தப் பூவும் மொட்டும் நாய்க்குட்டியாக மாறுகிறது. திருப்பிப் பாருங்கள்!

சிறுவர்கள் சித்திரப் போட்டி



1. ஆர். லலிதா, வயது 11½, கும்பகோணம். 2. எஸ். பாலசுப்பிரமணியன், வயது 10, குடந்தை, தஞ்சை ஜில்லா. 3. கே. லலிதா, கோபாலபுரம், சென்னை.

நீங்கும் நேரிடக் கூடாது' என்று மன்றாடினேன். பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் என் வேண்டுகோளுக்கிணங்கி உங்களை இரகசியமாகக் கல்லறைத் தீவுக்கு அனுப்பி விட்டான். பிரபாகரனையும், உமாவையும் நம்ம பட்டணத்தில் பெயர் பெற்ற மந்திரவாதி வயல்காட்டுக் கிழவியின் வீட்டில் அவள் பாதுகாப்பில் இரகசியமாக வைத்திருந்தான். பிறகு நடந்த சம்பவங்களெல்லாம் நாம் ஆச்சரியப்படும் படியான விஷயங்கள்'' என்று கூறிப் பிரபாகரனை நோக்கிச் சிரித்தார் துறவி.

உடனே குலகுருவைப் பார்த்து ஆனந்ததீர்த்தர், ''இங்கே எங்கே பார்த்தாலும் சிலைகளாகவே இருக்கின்றனவே!'' என்றார் வியப்புடன்.

''ஆமாம்; நான் சொல்ல மறந்துவிட்டேன். இவைகளும் அந்த மந்திரவாதி வயல்காட்டுக் கிழவியின் வேலைகளே. உங்களைக் கல்லறைச் சிறையில் ரகசியமாக வைத்திருந்த உண்மையை அறிந்த நம் வீரர்கள் பலர் மாயாமூகேந்திரபுரப் பட்டணத்திலிருந்து கல்லறைக் கதவை உடைத்து உங்களை விடுவிக்க யத்தனித்தார்கள். அதைக் கண்ட வீரசிம்மன், மந்திரவாதி வயல்காட்டுக் கிழவியின் உதவியை நாடினான். அவள் தனது விசேஷ மந்திர சக்தியினால் ஓர் அற்புத நாயை இந்தத் தீவில் சிருஷ்டித்தாள். அந்த நாயின் விழிகளை யார் பார்க்கிறார்களோ அவர்கள் உடனே சிலையாக மாறிவிடுவார்கள். இந்தச் சூழ்ச்சி செய்ததற்குக் காரணம், கல்லறைத் தீவுக்கு வருபவர்கள் திரும்பிப் பட்டணத்துக்கு வந்து நீங்கள் கல்லறையில் அடைபட்டிருப்பதின் ரகசியத்தை வெளியே தெரியாமல் வைத்திருப்பதற்குத்தான். அதுவுமல்லாமல், உங்களுடைய சரீரங்களை மாத்திரம் கண்ணாடிப் பெட்டியில் வைத்திருந்தானே தவிர, உங்களது இருவருடைய உயிரையும் தன் மந்திர சக்தியினால் தன்னிடமே வைத்திருந்தான். அந்த உயிரைத்தான் பிரபாகரன், நீங்கள் அவனது தந்தை என்று தெரியாமலே உங்களிடம் கொண்டு வந்து சேர்த்தான்'' என்றார் குலகுரு. (தொடரும்)

நீங்கள் இதுவரை அருந்தாத

மிகச்சிறந்த காப்பி...



சுத்தமான காப்பி வாங்குவது அனுகூலமானது. அது உங்களுக்கு வேண்டிய நறுமணத்தையும், தரத்தையும், அதிக அளவு காப்பியையும் கொடுக்கிறது. ஆதலால்தான் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்டேன்ஸ் சிகப்பு லேபின் சுத்தமான காப்பியையே வாங்குகிறார்கள். அது காற்றுப்புகாமல் பாக் செய்யப்பட்டு புத்தம்புதியதாக ½ பவுண்ட், 1 பவுண்ட், 3 பவுண்ட் 7 பவுண்ட் டின்களில் கிடைக்கிறது. இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

தீ யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிட்.
கோயம்புத்தூர், தென் இந்தியா

THE PICK OF THE SOUTH

Stanes

ஸ்டேன்ஸ் சிகப்பு லேபிள்
சுத்தமான காப்பி

எல்லோரும் வாங்கக்கூடிய
நல்ல காப்பி

விஜயவாடா ஏஜண்ட்: ஸ்ரீ எஸ். எச். மல்லப்ப ராஜு
பக்கிங்காம்பேட்டை போஸ்ட், விஜயவாடா

திருச்சிராப்பள்ளி ஏஜண்ட்: மெஸர்ஸ். ஆறுமுகம் & கோ.,
காரனேஷன் கார்டன் லேன்ஸ், தெப்பக்குளம், திருச்சி

திருட இயலாத குடும்ப சைஸ் பாக்கில்

'அனாஸின்'

வாங்குங்கள்



'அனாஸின்' 32 வில்லைகள் கொண்ட டப்பா ஒவ்வொரு முறையும் நீங்கள் வாங்கும்பொழுது 4 அணாக்கள் மிச்சமாகின்றன. அனாஸினை எப்பொழுதும் கையோடு வைத்துக்கொள்ளும் குடும்பங்களுக்காகவே இந்த டப்பாவை பிரத்தியேகமான முறையில் அமைத்திருக்கிறோம். அனாஸினை அவர்கள் சதா வைத்திருப்பதற்கு காரணம் அதில் வலி நிவாரணத்தை விரைவில் அளிக்கும் 4 மருந்துகள் அடங்கியிருப்பதே:

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினாஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனாஸினில் அடங்கியிருக்கும் இந்த நான்கு மருந்துகள் நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து, பத்திரமாகவும், நிச்சயமாய், விரைவில் நிவாரணமும், தலைவலி, ஜுரம், ஜலதோஷம், பல்வலி மற்றும் தசை நார்களில் நோவு முதலியவற்றை போக்குகின்றது.

'அனாஸின்' 2 வில்லைகள் கொண்ட பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்.

எப்பொழுதும் **அனாஸின்** வில்லைகள் வேண்டுமென்றே கேளுங்கள்

A. 43



கோகிலா

ரமண்லால் வசந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு: ரா. வீ

53. அறிந்தவர் யார்?

இரண்டு மூன்று மணி நேரம் ரமேஷும் டாக்டரும் கோகிலாவின் அறையில் இருந்தனர். அவளுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தனர். பிறகு இருவரும் ஜகதீஷ் படுத்திருந்த அறைக்கு இளைப்பாறுவதற்காகச் சென்றனர்.

அவர்கள் போனபொழுது ஜகதீஷ் தூங்கிய வண்ணமே யாருடனோ பேசிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. மெதுவாக இருவரும் அவன் அருகில் போய் நின்றனர். ஜகதீஷ் தனக்குத்தானே தனியாகச் சொல்லிக் கொண்டிருந்தான்:— 'தனியாகவா? கூடாது, கூடாது! அப்புறம் நான் யாருக்காக உயிர் வாழவேண்டும்? இவள் எனக்குச் சொந்தமானவள். நீ எதற்காக இவளை அழைத்துச் செல்ல முயற்சிக்கிறாய்...? அங்கே இவளுக்குப் பேரின்பம் காத்துக் கொண்டிருக்கிறதா? ...உண்மை...நான் இவளுக்கு மிகத் துன்பம் கொடுத்து விட்டேன் என்பது உண்மைதான்...இருந்தாலும் அப்புறம் எனக்கு இங்கே யார் இருக்கிறார்கள்? கோகிலா! கோகிலா! இப்படிச் சிரித்து மழுப்பி விட்டு என்னை விட்டு ஓடிவிடப் பார்க்கிறாயே!...இது உனக்கு அழகா?... சொல், சொல்!'

ஜகதீஷ் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். டாக்டர் மெதுவான குரலில் அழைத்தார்: "ஜகதீஷ்!"

"ஓ! என்னைக் கூப்பிட்டாயா? நானும் உன்னோடு வரட்டுமா? என்ன? வேண்டாமா? என்னை விட்டு விட்டுப் போக மாட்டாய் அல்லவா? என்ன 'ஊஹும்' என்கிறாய்? ஒருநாளும் உன்னைவிட மாட்டேன். உடும்புப் பிடியாகப் பிடித்து என்னோடு வைத்துக் கொள்வேன். உன் பாச்சா என்னிடம் பலிக்காது. என்னைத் தனியே விட்டு விட்டு எப்படிப் போகிறாய் என்பதை ஒரு கை பார்க்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே ஜகதீஷ் தன் இரு கைகளையும் உயர நீட்டிப் பிறகு யாரையோ பிடித்து இழுப்பது போன்ற பாவனையில் இழுத்துக் கொண்டான்.

"ஜகதீஷ் கனவு காண்கிறான். மிகவும் தன் மயமான ஆழ்ந்த கனவு காண நேர்ந்தால் மனிதன் நடக்கக்கூடத் தொடங்கி விடுவது உண்டு!" என்றார் டாக்டர்.

ரமேஷ் அவன் அருகில் சென்று, "ஜகதீஷ், ஜகதீஷ்!" என்று கூப்பிட்டு உடலைப் பிடித்து உலுக்கினான்.

"அடா! நீ இங்கே எங்கே வந்தாய்?" என்று கேட்ட ஜகதீஷ் கண்களைக் கசக்கிக் கொண்டான். தான் அத்தனை நேரமும் கண்டது கனவு என்பதும், ஆனால் அந்தக் கனவுக்குள், தான் ரமேஷைக் காணவில்லை என்பதும், உண்மையாகவே ரமேஷ் தன் முன் தோன்றிக் கனவைக் கலைப்பதற்காக உடலைப் பிடித்து உலுக்குகிறான் என்பதும் அவனுக்கு விளங்கக் கொஞ்ச நேரம் பிடித்தது. சுய உணர்வு பெற்றுத் தன் நிலைக்கு வந்த அவன் டாக்டரைப் பார்த்து, "இப்பொழுது கோகிலா எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"சௌகரியமாயிருக்கிறாள். நீ நன்றாகத் தூங்கு!" என்றார் டாக்டர்.

"என்றால் தூங்க முடியாது. கண்ணை மூடினால் பயங்கரக் கனவுகள் தோன்றுகின்றன. அதனால் நான் கோகிலாவுக்கு அருகிலேயே போய் உட்காருகிறேன்!" என்று சொல்லி ஜகதீஷ் எழுந்து கோகிலாவின் அறைக்குச் சென்றான்.

தூக்கம், கனவு ஆகியவற்றின் அறிவுக்குப் புலனாகாத ரகசியங்களைப் பற்றி டாக்டர் யோசனை செய்ய ஆரம்பித்து விட்டார். வாழ்க்கைக்கும் இவற்றுக்கும் என்ன தொடர்பு? இறந்த காலம், நிகழ்

கால, வருங்கால எல்லேகளே ஒன்ருக்கும் இந்தக் கனவின் அற்புதத்தை என்ன வென்று சொல்வது?

"இந்த உலகமுமே ஒரு மாபெரும் வாழ்க்கையின் கனவுதானே?"

இந்தக் கேள்வி எழுந்ததுதான் தாமதம்; சிகிச்சையில் சிறந்த டாக்டர் பெரிய சிரிய சிந்தனேயாளராக உருமாறித் தம்மை மறந்து விட்டார்!

இத்தனே நாட்களும் நாத் பாபாவின் ரகசிய அறையென்று சொல்லப்பட்டு வந்த அந்த அறையின் கதவு எல்லோருக்குமே திறந்து விடப்பட்டு விட்டது. அந்த அறைக்கு யார் வேண்டுமாளுலும் வரலாம், போகலாம். அந்த அறை திறக்கப்பட்டு விட்டது போலவே நாத் பாபாவின் வாழ்க்கையின் ரகசிய அறைகளும் திறந்து விடப்பட்டன.

முதலில் அவர் ரஷ்மிகாந்தன் என்ற பெயரோடுதான் விளங்கினுர். செல்வச் சீமாளுக இருந்ததால் சுக புருஷராக வாழ்க்கை நடத்தினுர்; இன்ப போகங்களில் திளேத்தார். தம் மனேவியை அன்புக் கண்பாக நேசிக்கவும் செய்தார்.

ஆனுல் அவர் மனேவி மிகச் சீரிய கொள்கைகள் படைத்தவள்; அழுத்தமான மனே பலமும் கொண்டவள். அதனுல் அவரால் அவளது இருதயத்தைத் தமது அன்புத் திரையைக்கொண்டு போர்த்திக் கொள்ளே கொள்ள முடியவில்லே.

அவரது ஆப்த நண்பர்களில் ஒருவர் தான் பிஹாரிலால். அவர் அடக்கமே உருவானவர்; அமைதியையே அணிகலனுகக் கொண்டவர். அதோடு நற்குண நற்பண்புகளும் நிறைந்தவர். எதிலுமே கன கணக்கானவர். கச்சிதமாக நறுக்குத் தெறித்தாற் போல் பேசுவதிலும் பலே கைகாரர். நல்ல விஷயங்களே ரசிப்பதிலும் நல்லொழுக்கங்களில் தேர்ந்தவருமான அவரைச்



சாந்தா கௌரிக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. அதனுல் அவரோடு வெகுவாக நெருங்கிப் பழகத் தொடங்கினுள். ஆனுல் நடத்தையில் குறை சொல்லும்படியாகவோ, ஒழுக்கத்துக்குப் புறம்பாகவோ அவள் எள்ளளவும் நடந்து கொண்டதில்லே; நடந்து கொள்ளவும் முயன்றதில்லே.

ஆனுல்...!

சந்தேகமே உருவான ரஷ்மிகாந்தனுக்கு எடுத்ததற்கெல்லாம் அவள் மேல் சந்தேகம் பிறந்தது. அந்தச் சந்தேகம் சச்சரவுக்கு ஆஸ்பதமாக முடிந்தது. அதன் பலனுக விஷயம் வெகு தூரம் முற்றி நண்பர்களின் நட்புரிமைக்கே பங்கம் விளேவிக்கத் தொடங்கி விட்டது. கடைசியில் அன்பு வெறுப்பாக மாறி எதிர்த் திசையில் ஓடத் தொடங்கி விட்டது.

கணவனும்—மனேவியும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து உதார குணத்துடன் பழக முற்பட்டிருந்தால் தங்கள் தாம்பத்திய வாழ்க்கையை வீணில் குட்டிச் சுவராகாமல் காப்பாற்றி யிருக்கலாம். ஆனுல் அவசியமான பொழுது அதுதானே நடப்பதில்லே? விதி குறுக்கிட்டுப் பற்பல சதிகளே அல்லவா செய்து விடுகிறது?

சாந்தாகௌரிக்குப் பிள்ளே பிறந்தது. நண்பர் என்ற ஹோதாவில் பிஹாரிலால் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி விளேயாடினுர். ஒருநாள் குழந்தையின் அழகைப் புகழ வேண்டும் என்ற எண்ணத்துடன், "இவன் முகம் யாரைப் போலிருக்கும்?" என்று கேட்டு வைத்தார்.

சாந்தா கௌரி சும்மா இருக்கக் கூடாதா? தன் கணவர் தன்னேச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தது அவளுக்கு ஏற்கெனவே பிடிக்கவில்லே. அவர் தன் மீது அநியாயமாக அபாண்டம் சுமத்தத் துணியவே, அவள் மனம் மிகவும் புண்பட்டுப் போயிருந்தது. அதனுல் தன் உள்ளத்தைப் புண்ணுக்கிய தன் கணவரிடமே பழி வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி உந்தித் தள்ளியது. அதன் பலனுக அவள், "இவன் முகம் உங்கள் முகத்தைப் போலிருந்தால் நன்ருயிருக்கும்!" என்று பிஹாரிலாலைப் பார்த்துச் சொல்லி வைத்தாள்.

அவ்வளவுதான்; அடுத்த கணமே ரஷ்மிகாந்தன்-சாந்தா கௌரி இவ்விருவரது தாம்பத்திய வாழ்க்கைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது. இனி ஒருவரையொருவர் முகாலோபனம் செய்வதின்லே

என்று முடிவு கட்டினர். அதை ஒட்டினாற் போல் லர் பிஹாரிலால் சாந்தா கௌரி இரண்டு பேரிடமும் பயங்கரப் பழி வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி ரஷ்மி காந்தனின் மனத்தில் வேர் பிடித்து விட்டது. கோபத்தினால் கொதித்தெழுந்த அவர் அன்று இரவுக்கிரவே எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டார். பிறகு சில நாட்கள் கழித்து ஜுகல் கிஷோர், காத்பாபா என்ற இரு பெயருடன், இரு உருவங்களில் மறுபடியும் இப்புவியில் அவதரித்து நடமாடத் தொடங்கினர்.

இருவரைப் பழிவாங்க வேண்டும் என்று ஆரம்பித்த அவருக்கு நாளடைவில் மானிட சாதியினிடத்திலேயே அசாத்திய வெறுப்பு ஏற்பட்டது. க்ஷத்திரியர்களைப் பூண்டோடு ஒழித்துத் தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வீறுடன் புறப்பட்ட பரசுராமரைப் போல் மானிட சாதியையே தீர்த்துக் கட்டி விடுவது என்ற தீர்மானத்துடன் அவர் புறப்பட்டார்.

ஜுகல் கிஷோரின் வேஷத்தில் உலகத்தில் உள்ள குடும்பத்தாரின் வாழ்க்கையில் கோடரிப் பிரயோகம் செய்யவும், அற்புதச் செயல்கள் நிறைந்த துறவியின் வேடம் புனைந்து உலகத்தாரிடையே வேரூன்றியிருந்த தர்ம உணர்ச்சி, பக்தி, சிரத்தை ஆகியவற்றை அநுசிதமான முறையில் பயன்படுத்திக் கொண்டு அடியோடு களைந்தெறியவும் முற்பட்டார்.

இந்த உலகத்திலே இருட்டில் பார்வை பெறும் மனிதர்களுக்கு ஒரு குறைவு கிடையாது. அவர்கள் அஞ்ஞானமாகிய இருட்டில் எல்லாம் தெரிந்தவர்களைப் போல் உழன்று, தோன்றியதைச் செய்து விடுவார்கள். அத்தகையவர்களை நன்றாகப் பயன் படுத்திக் கொண்டு உலகத்தினிடமுள்ள தமது விரோத பாவத்தைத் தீர்த்துக் கொள்ள அவர் எத்தனையோ முயன்றார். அவருக்குத் தமது அந்த நீண்ட வெற்றிகரமான முயற்சிகளில் எல்லாங்கூடத் தோல்வியின் சாயையே படர்ந்திருப்பதாகத் தோன்றியது.

தம் மனைவி, நண்பன் ஆகியவர்களிடம் பழி வாங்குவதற்குப் பல சந்தர்ப்பங்கள் அவருக்கு வாய்த்தன. அச்சமயங்களிலெல்லாம் அவர் கை தளர்ந்து செயலாற்றத் தயங்கினவே ஒழியத் தைரியமாகக் காரியத்தில் இறங்க வில்லை. அதை நினைத்துப் பார்க்கும் பொழுதெல்லாம் அவருக்குத் தம் மீதே தாங்க மாட்டாத வெறுப்புத் தோன்றி யிருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் தம் உள்ளத்தில் விரோதத் தீயை வேண்டுமளவு நெய் விட்டு வளர்த்துக் கொண்டுதான் செயலில் இறங்க முயன்றிருக்கிறார். ஆனால் எதிரி வகையாக மாட்டிக் கொண்டு விட்டாலுங் கூட அவரது கைகள் பழி வாங்க எழும்பியதில்லை. பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து அவர் உள்ளம் ஒரு விதமான திருப்தியில் ஆழ்ந்து விடுவது தான் அதற்குக் காரணம். இம்மாதிரி சந்தர்ப்பங்கள் கிடைத்து அடிக்கடி எதிராளியைப் பயத்தில் ஆழ்த்தி ஒரு கிலியிலேயே வைத்திருந்தால் போதும் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு அவர் தமது உள்ளத்தில் குமுறும் விரோதத் தீயை அதிகமாக வளர வொட்டாமல் தணித்தே வந்தார்.

ஆனால் இந்தப் பொல்லாத உலகம் அவரைத் தன் வசப்படுத்திக் கட்டிப்போட முயற்சிக்கிறது என்பதை அவர் வெகு நாட்களுக்குப் பிறகுதான் உணர்ந்தார். அன்பு என்னும் பெயரால் உடல் இன்பத்தை நுகர நினைக்கும் மனிதன் மிருகமாகி விடுகிறான். கடைசியில் அதிலேயே உழன்று களைத்துச் சலித்து ஆய்ந்து ஓய்ந்து விடுகிறான். இருந்தாலும் அந்தப் பழைய வாசனை அவனை விட்டு இலேசில் அகலுவதில்லை. மேலும் மேலும் கவர்ச்சி பெற்று உடல் இன்பத்தில் நப்பாசை கொள்ளவே செய்கிறது. ஆயினும், பல சமயங்களில் அவன் கொண்ட சலிப்புக்குத்தான் வெற்றி கிட்டுகிறது என்பதையும் அவர் அநுபவ வாயிலாகக் கண்டார்.

துஷ்டத்தனத்திலேயே ஊறித் திளைத்த அரக்கன் எத்தனைதான் முயன்றாலும் நற்குணம் பொருந்திய துறவியாக ஆகி விடுவதில்லை. ஆனால் என்றைக்காவது ஒருநாள் அவன் தனது துஷ்டத்தனத்



தையே கண்டு அஞ்சி அதனிடமிருந்து விடுதலை பெற விரும்புகிறான் என்பதும் அவருக்கு வெளிச்சமாகியது.

அவரை அண்டிப் பிழைத்து வந்த கொள்ளைக்காரன் தன் தொழிலைத் துறந்து குடியானவனாகி உழவுத் தொழிலை மேற்கொண்டு விட்டான். அதோடு அவனே அவருக்கு அன்புக்கு அன்பான நண்பனாகவும் தவறுகளை எடுத்துக் காட்டும் நல்லாசிரியனாகவும் வேறு ஆகி விட்டான். இதிலிருந்து என்ன தெரிகிறது? எத்தனை அதிகமாக உயிர்ப் போர் நடந்த பொழுதிலும் முன்னேற்றத்தை நோக்கியே மானிட ஜாதி செல்கிறது என்பதுதானே? —யோசித்துப் பார்த்ததில் காத்பாபாவுக்கும் அப்படித்தான் தோன்றியது.

இருந்தாலும் உள்ளத்தில் ஊறும் அந்த எண்ணங்களை அடக்கிக் கொண்டு அவர் பழி வாங்குவது என்ற உறுதியுடன் தான் கடைசித் தடவையாகச் சென்றார். ஆனால் நண்பனைக் கொல்லுவதற்குப் பதிலாகத் தமது கத்தியையே முறித்துக் கொண்டு வீடு திரும்பினார்.

அப்பொழுதுதான் தம் நிழலைக் கண்டு தாமே அஞ்சுபவர்களைப் போல் அவருக்குத் தம்மிடமே பயம் தோன்றியது.

மனைவியைத் தீர்த்துக் கட்டி விட்டுத் திரும்புவது என்ற தீர்மானத்துடன் புறப்பட்ட பொழுது அவருக்கு, உலகத்தைப் பழி வாங்கியே தீருவது என்ற தீர்மானத்தை விடாப் பிடியாகக் கொண்ட ஜகதீஷ் உறுதுணையாகக் கிடைத்தான்.

ஆனால்......!

அப்பொழுதும் அவருக்குக் கிட்டியது தோல்விதான். அந்தத் தோல்வி அவருக்குக் கொஞ்சநஞ்சம் இருந்த துணிச்சலையும் போக்கி விட்டது. பயங்கரமே உருவான பைத்தியக்கார வெறி கொண்டு அவர் செய்யத் துணிந்த செயலுக்கு இடையூறாக அந்த ஜகதீஷே நின்றான்; அவர் கையைக் கெட்டியாக இப்படி அப்படி அசைக்க விடாமல் பிடித்துக் கொண்டு விட்டான். தமக்கு இந்தக் கடைசி முயற்சியில் கட்டாயம் வெற்றிதான் என்று எண்ணி அவர் இறுமாந்திருந்தார். அவரது நினைப்பு என்னவாயிற்று? ஜகதீஷ் செய்த கூத்தினால் அது கோமாளித்தனமாக அல்லவா முடிந்து விட்டது!

இத்தனைக்கும் இடையில் ஜகதீஷிடம் அவருக்கு ஒரு இனம் தெரியாத கவர்ச்சி உணர்ச்சி தான் ஏற்பட்டது. தம்மையறியாமலே அவர் அவனை நேசிக்கத் தொடங்கினார். இந்த உலகத்தில் எத்தனையோ பேர் எண்ணற்கரிய குற்றங் குறைகளுக்கு ஆளாக இருந்த பொழுதிலும் அன்பு செலுத்துவதற்கு உகந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்! காரணம் வேறு எதுவாக இருக்க முடியும், அவர்களுடைய தோற்றமும் சுபாவமும் அன்பின் அலைகளைத் தாமாகவே எழுப்பி விடுவதைத் தவிர?

எதிலுமே தோல்வியைக் கண்ட ஜகதீஷ் வாழ்வின் எளிமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினான். எண்ணத்தையும் செயலையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்துக் காணும் திறன் பெறாத இந்தச் சமூகத்தின் பல இடையூறுகளையும் தாண்டி அவன் எப்படியாவது நீந்திக்கரை சேர முயற்சித்துக் கொண்டிருந்தான். அவனுடைய அந்தத் துடிப்பும் பரபரப்பும் யாரையுமே கவர்வதாக அமைந்தன. அப்படியிருக்கும்பொழுது காத்பாபாவைப் பற்றிக் கேட்பானேன்?

ஆத்மானந்தத்தைப் பெறுவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுது ஜுகல்கிஷோருக்கு ஒரு கணம் கோகிலாவைத் தன் பெண்ணாகப் பாவித்தால் என்ன என்று தோன்றியது. அடுத்த கணமே அந்த எண்ணம் செயலாகவும் முகிழ்த்தது. அன்று முதல் அப்படியே செய்வதாக அவன் தனக்குத்தானே பிரதிக்ஞையும் செய்து கொண்டான்.

ஆனால்......! ஜுகல்கிஷோரின் சுபாவம்தான், எத்தகைய பிரதிக்ஞையாக இருந்தாலும், தேவையான பொழுது அதைக் காற்றில் பறக்க விடுவதாயிற்றே! ஆயினும் ஏனோ தெரியவில்லை, அவனால் அந்தப் பிரதிக்ஞையைக் காற்றில் பறக்க விட முடியவில்லை. காரணம் கோகிலாவும் ஜகதீஷும் கொண்டிருந்த தூய அன்பின் பெருமையைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? 'அன்பு என்றால் இதுதான் அன்பு!' என்றே கூட அவன் எண்ணி விட்டான்.

ஆதி காலத்தில் அன்பிலும் அதன் தூய்மையிலும் அவனுக்கு அறவே நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் ஜகதீஷும் கோகிலாவும் கொண்டிருந்த நேசத்தைக் கண்ட பின் சுரங்கத்தில் கரிக் குவியலுக்கு இடையில் சுடர் விட்டு ஒளி வீசும் வைரத்தைப் போல், அன்பு விஷயத்திலும் ஒரு விதி விலக்கு இருக்கலாமோ என்றே அவனுக்குத் தோன்றியது. எனவே அவர்களது அன்பின் தூய்மையையும் உண்மையையும் அருகிலிருந்து கண்காணிப்பதென்று திட்டமிட்டான்.

அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு உண்மை விளங்கியது. அதை அவனுக்குக் கிடைத்த பெரும் நல்லுபதேசம் என்று சொன்னால் கூட மிகையாகாது.

தூய அன்பில் பழி வாங்க வேண்டும் என்ற தீய நோக்கம் எழுவதற்கே இடம் கிடையாது ஆத்மானந்தம் ஒன்று மட்டுமேதான் உண்டாகும். தூய அன்பில்

பிரஷால் தேய்ப்பதால்
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஈறுகளைப் பலப்படுத்துகிறது



இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்.....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனாமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.



* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

தன்னலம் குறுக்கிடாது; குறுக்கிட்டுத் தடை விதிக்காது. ஏனெனில் அன்பு தூயதாக இருந்தால் அத்துடன் உதார குணமும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தாமாகவே வந்து சேர்ந்து கொள்ளும்—இதுதான் அவனுக்குக் கிடைத்த அந்த நல்லுபதேசம்.

கடவுளைக் காதலனாகக் கருதி வழிபடும் பக்த கவிகள் கடவுளின் கல் நெஞ்சத்தை நொந்து கவி பாடுகிறார்கள். ஆயினும் அவரைத் தேடுவதிலேயே அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்து விடுவதில்லையா? அன்புப் பெருக்கின் தூய்மைக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன சான்று வேண்டும்?

உள் அறையில் நாத்பாபாவும் ஜகதீஷும் உட்கார்ந்திருந்தார்கள்.

"இன்று ஸர் பிஹாரிலால் இங்கே வருவதாகச் சொல்லியிருந்தாரே! ஆனால் இத்தனை நாழிகையாகியும் வரக் காணோமே! காரணம் விளங்கவில்லையே!" என்றார் நாத்பாபா.

"கிராமத்துப் பாதைகள் சீர்கெட்டுக் கிடக்கின்றன. வண்டிகள் சரிவரப் போய் வர முடிவதில்லை. கிராமத்துப் பாதைகளைச் செப்பனிட்டுச் சரி செய்தால்தான் பல தொல்லைகள் தீரக் கூடும்!" என்று ஆரம்பித்தான் ஜகதீஷ்.

நாத்பாபா கேட்ட கேள்வி என்ன? அவன் சொன்ன பதில் என்ன? கிராமத்து வாழ்க்கையிலேயே கருத்தைச் செலுத்தியிருந்த அவனுக்கு அந்தப் பெரிய சிக்கலான பிரச்னைதான் கண்களெதிரே வந்து நின்றது.

"நீ பேசுவதைப் பார்த்தால் உனக்குக் கிராமத்து வாழ்க்கை ரொம்ப ரொம்பப் பிடித்துப் போய் விட்டாற் போலிருக்கிறதே!" என்றார் நாத்பாபா.

"உண்மை. எனக்குக் கிராம வாசம் மிகவும் பிடித்துத்தான் போயிருக்கிறது. இதை விட்டுப் போக எனக்கு மனமே இல்லை!" என்றான் ஜகதீஷ்.

"உனக்குப் பிடித்திருக்கலாம். ஆனால் கோகிலாவுக்குப் பிடித்திருக்க வேண்டுமே! அவளுக்குத்தான் இப்பொழுது உடம்பு குணமாகி விட்டது! நாம் நகரத்துக்குத்தான் போக வேண்டும் என்று அவள் சொன்னால்...?" என்றார் நாத்பாபா.

"அவள் இழுத்த இழுப்புக்கு நான் போக வேண்டியவன்தான்! ஆனால் அவள் ராதாவின் கிராமத்தைப் பற்றி ஏகமாகப் புகழ்வதைப் பார்த்தால் அப்படிச் சொல்ல மாட்டாள் என்றே தோன்றுகிறது."

"அவள் யோசனை இருக்கட்டும்; உன் யோசனை என்ன என்று சொல்லு. ஸேட்டிடமிருந்து இரண்டு மூன்று கடிதங்களுக்கு மேல் வந்து விட்டன. அவருக்குச் சட் புட்டென்று ஏதாவது ஒரு பதில் சொல்ல வேண்டாமா? அவருக்குக் காரியதரிசியாக இருப்பதில் உனக்கு என்ன ஆட்சேபனை?" என்று கேட்டார் நாத்பாபா.

"சுவாமி! எனக்கு ஐந்தாறு ஏக்கர் நிலம் ஏற்பாடு செய்து கொடுத்து விடுங்கள். விவசாயத்தில் இறங்கி விடுகிறேன். தோட்டம்-துரவு, வயல்-வாய்க்கால் என்று......!" என்றான் ஜகதீஷ்.

"நல்ல பைத்தியக்கார மனுஷ்யன் அப்பா, நீ! நல்ல உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தாய். அது போய் விட்டது. இனி அது வேண்டுமென்று விரும்பினாலும் கிடைக்காது. தேசத் தலைவனாக ஆகலாம் என்று கனவு கண்டாய்! நீ இப்படி விவசாயத்தில் இறங்கி விட்டால் அப்புறம் தேசத் தலைவன் என்ற பெயரையும் பெற முடியாது. இப்பொழுதே சொல்லி விட்டேன்!" என்றார் நாத்பாபா.

"சுவாமி! எனக்குத் தேசத் தலைவனாக வேண்டும் என்ற ஆசையும் இப்பொழுது



திருப்போரூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற படி உற்சவத்துக்குச் சென்னைக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சென்றிருந்தார்கள். கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் பரிவட்டம் அணிந்து நிற்பதையும், அருகில் சபாநாயகர் திரு சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் இருப்பதையும் இந்தப் படத்தில் காணலாம்.

இல்லை. நான் நேர்மையான விவசாயி ஆனால் போதும்!" என்றான் ஜகதீஷ்.

"நீ இப்படி மறுத்தால், அப்புறம் விஜயலக்ஷ்மியின் நிலைமை என்ன ஆவது? அவள் செத்தாலும் செத்து விடுவாள்!" என்று சொல்லிச் சிரித்தார் நாத்பாபா.

தெய்வ வசமாக அதற்குப் பதில் சொல்லித் தப்ப வேண்டிய அவசியம் ஜகதீஷுக்கு நேரவில்லை. அதற்குக் காரணம், அவன் பிஹாரிலாலைப் பார்த்து விட்டது தான். "அதோ, பிஹாரிலால் வருகிறார்!" என்று சொல்லி அந்தப் பேச்சுக்கு அப்படியே முற்றுப்புள்ளி வைத்து விட்டான்.

அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் ஸர் பிஹாரிலால், குஸுமா, ரமேஷ் மூவரும் உள்ளே நுழைந்தார்கள். அந்த அறையிலேயே தூரத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த சாந்தாகௌரியும் எழுந்து அருகில் வந்தாள்.

அவள் குஸுமாவைத் தன் அருகில் அழைத்து உட்கார வைத்துக் கொண்டாள். அதைப் பார்த்த நாத்பாபா சிரித்தவாறே பிஹாரிலாலின் பக்கம் திரும்பிக் கண் ஜாடை காட்டினார். அதைப் புரிந்து கொண்டவர் போல் பிஹாரிலாலும் புன்னகை புரிந்தார். பிறகு, "எனக்கு என்ன? எப்படியும் நான் சாக வேண்டியவன் தானே?" என்றார் அலட்சியமாக.

அதைச் செவியுற்ற நாத்பாபா கடகடவென்று சிரித்தார். பிறகு, "பிஹாரி! நீ சொன்னால் சொல், சொல்லாவிட்டால் போ! உன் பெண்ணைச் சாந்தாகௌரிக்குப் பிடித்துப் போய் விட்டது என்பதையாவது ஒப்புக் கொள்கிறாயா?" என்றார்.

நிமிர்ந்து பார்த்த சாந்தாகௌரிக்கு ரஷ்மிகாந்தனின் அந்தச்சிரிப்பில் விரோத பாவம் முற்றிலும் மறைந்து விட்டது என்பது நன்கு விளங்கியது. இருந்தாலும் அவள் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஸர் பிஹாரிலாலும் பதில் பேசாமல் இருந்து விட்டார்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின், "குஸுமாவுக்கு எப்பொழுது கல்யாணம் செய்வதாக உத்தேசம்?" என்று ஸர் பிஹாரிலாலைப் பார்த்துக் கேட்டாள் சாந்தாகௌரி.

"இரண்டு மாதத்தில் நடக்கப் போகிறது. அவள் அண்ணி கோகிலா நகரத்துக்குத் திரும்பி வர வேண்டுமாம். அது வரை கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று ரமேஷ் பிடிவாதமாயிருக்கிறான்! அதனால்தான் இந்தத் தயக்கம்!" என்றார் பிஹாரிலால்.

ரமேஷுக்கு அந்தப் பேச்சின்பொழுது அங்கே இருப்பது உசிதமாகத் தோன்றவில்லை. அதனால் வெளியே செல்லும் உத்தேசத்துடன் எழுந்தான். ஆனால் ரஷ்மிகாந்தன் அவனை நிறுத்தி, "ரமேஷ்! அந்த மாந்தோலுக்கு அடியில் ஒரு பத்திரம் இருக்கிறது, பார்! அதைக் கொஞ்சம் இங்கே எடுத்து வா!" என்றார்.

ரமேஷ் அந்தப் பத்திரத்தை எடுத்துப் போய் அவரிடம் கொடுத்தான்.

"இது யாருடைய தஸ்தாவேஜு என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் நாத்பாபா.

"தெரியும். என் எசமானர் பெரும்பாலான சொத்தைத் தங்கள் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறார். அந்தத் தஸ்தாவேஜுதான் இது!" என்றான் ரமேஷ்.

"இதோ பார்! இந்தச் சொத்தை நான் உனக்கும் குஸுமாவுக்கும் தருகிறேன்!" என்று சொன்ன நாத்பாபா அந்தப் பத்திரத்தை அப்படியே சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டார். அதைக் கண்டு எல்லோரும் ஏக வியப்பில் ஆழ்ந்தார்கள்.

"இந்தத் தாராள மனப் பான்மையை இருபது வருஷங்களுக்கு முன்பே நீ கற்றுக் கொண்டிருந்தால்....!" என்று ஆரம்பித்தார் ஸர் பிஹாரிலால்.

நாத்பாபா அவரைத் தமது வாக்கியத்தை முடிக்க விடவில்லை. அவருக்கு முன்னால் தாமே முந்திக் கொண்டு, "இன்று அநுபவிக்கும் இந்தப் பேரானந்தத்தை நான் அப்பொழுது எங்கேயாவது அநுபவித்திருக்க முடியுமா?" என்று கேட்டுப் பூர்த்தி செய்தார்.

ஜகதீஷும் ரமேஷும் அவர்களை அப்படியே பேசிக் கொண்டிருக்க விட்டு விட்டுக் கோகிலா இருந்த அறைக்குச் சென்று விட்டனர். குஸுமாவும் சாந்தாகௌரியும் தோட்டத்துக்கு உலாவப் போய் விட்டார்கள். போய்ப் பார்த்தால் வத்ஸராஜின் உதவியைக் கொண்டு பீயூஷும், அமரனும் புஷ்பம் பறிப்பதில் முனைந்திருந்தார்கள். அங்கே போனவர்கள் குழந்தைகளின் அந்தச் செய்கைகளைக் காண்பதில் மனத்தைச் செலவிட்டு மெய்ம் மறந்து போனார்கள்.

ராதா கோகிலாவின் அருகில் உட்கார்ந்திருந்தாள். ஜகதீஷும் ரமேஷும் அறைக்குள் வந்துவிடவே, அவள் எழுந்து வெளியே சென்றாள். அவள் தந்தை பூபதாஜி அவளைக் காண வந்திருந்தான்.

கோகிலா நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் வாடியிருந்தது. இருந்தாலும் ரமேஷைப் பார்த்ததும் பழைய பிள்ளைப் பிராயத்தின் குறுகுறுப்பு அவள் முகத்தை ஆட்கொண்டது. "என்ன ரமேஷ்! எதற்காக இங்கே தனி



வாலாஜாபாத் ஹிந்துமத பாடசாலைக்கு மூன்று ஏக்கர் மாந்தோட்டத்தை திரு யு. வி. கந்தசாமிச் செட்டியார் பூதானமாகக் கொடுத்தார். இந்த பூதான வைபவம் சென்ற மாதம் முதன் மந்திரி திரு காமராஜ் முன்னிலையில் திருமுருக கிருபானந்தவாரியாரால் தொடங்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, நாற்பதினாயிரம் ரூபாய் செலவில் கட்டிய மாணவர் விடுதியின் புதுக் கட்டடத்தை முதன் மந்திரி திரு காமராஜ் திறந்து வைத்து மேற்படி பாடசாலையின் நிர்வாகி திரு மாசிலாமணி முதலியாரைப் பாராட்டினார்.

யாக வந்தீர்கள்? திரும்பிப் போங்கள்! தனியாக வருபவர்களுக்கு இங்கே வர அநுமதி கிடையாது!'' என்று கண்களில் குறும்பு தாண்டவமாடச் சொன்னான்.

''எங்கே தனியாக வந்திருக்கிறேன்? உங்கள் ஜகதீஷும்தான் என்னோடுகூட வந்திருக்கிறாரே!'' என்று யதார்த்தமாகப் பதில் சொன்னான் ரமேஷ்.

''உங்களிடம் நான் இதையா கேட்டேன்? நீங்கள் ஏன் தனியாக வந்தீர்கள் என்று கேட்டால் ஏதோ சாக்குப் போக்குச் சொல்கிறீர்களே? குஸுமாவை விட்டு விட்டுத் தனியாக வருவதாயிருந்தால் நீங்கள் என் அறைக்குள்ளேயே வரக்கூடாது. தெரிந்ததா?''

''ஏன், கோகிலா! இவனைப் போட்டு இப்படித் துன்புறுத்துகிறாய்? முதலில் கல்யாணம் ஆகட்டும். அப்புறம்......!'' என்று இழுத்தான் ஜகதீஷ்.

''கல்யாணம் ஆகி விட்டால் இவரை அப்புறம் நாம் இப்படிப் பார்க்க முடியுமா? அல்லது துன்புறுத்தத்தான் முடியுமா? அப்புறம் இவர் இந்தப் பக்கம் எதற்காகத் தலைகாட்டப் போகிறார்? 'ஆளாவது ஆள்; அம்மாப் பேட்டை ஆள்' என்பார்களே, அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர் இவர்! இன்றைக்கே நீங்கள் கல்யாணம் செய்து வைப்பதாயிருந்தாலும் இவர் தயார்! இவர் சுபாவம் எனக்குத் தெரியாதா?'' என்றாள் கோகிலா.

கொஞ்ச நேரம் அவர்கள் இப்படி வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்குள் மாலைக் கதிரவன் மலைவாயில் மறைந்து தனது மஞ்சள் வெய்யிலை வான வீதியில் பரப்பி விட்டான். ஜகதீஷையும் கோகிலாவையும் அந்த அறையில் தனியே விட்டு விட்டு ரமேஷ் திறந்த வெளியில் உலாவுவதற்காக எழுந்து சென்று விட்டான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கோகிலா அடுத்த அறைக்கு அருகில் இருந்த மொட்டை மாடிக்குப் போக விரும்பினாள். ஜகதீஷ் அவளை மெதுவாகக் கைப்பிடியாகத் தூக்கி நிறுத்தினான்.

அவர்கள் இருந்த அறையின் கதவு திறந்திருந்தது. எதிர்த்தாற் போலிருந்த அறையிலும் ஆள் நடமாட்டம் இருப்பதாக இங்கிருந்த தம்பதிகளுக்குத் தெரியவில்லை. என்னதான் பலவீனமுற்றிருந்த பொழுதிலும் தனிமை கிடைத்தால் இளம் தம்பதிகளின் மனத்திலே பற்பல ஆவல்கள் குமிழியிட்டுக் கொண்டு வெளி வருவது இயற்கைதானே? கோகிலா தன் தலையை ஜகதீஷின் தோள்மீது சாய்த்திருந்தாள். எதிரில் உள்ள அறைக் கதவில் பொருத்தப்பட்டிருந்த நிலைக்கண்ணாடியில் மாலை நேரத்து மங்கிய மஞ்சள் வெய்யிலில் அவர்களது பிரதிபிம்பம் லேசாக விழுந்தது.

இருவரது கன்னங்களுக்கிடையே நெருக்கம் தோன்றினால் இன்ப முத்திரை பதிக்க வேண்டும் என்ற ஆவல் எல்லை மீறி விடுவது இயல்பு என்ற ரஸ மீமாம்ஸையில் வல்லுனர்கள் கூறுகிறார்கள். அதோடு நிலைக் கண்ணாடி செய்யும் அற்புத திருஷ்டியும் சேர்ந்து கொண்டு விட்டால் இளம் தம்பதிகளின் இன்பப் பெருக்கைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

ஜகதீஷ் ஆவல் அதிகரிக்கவே வெகு நாட்களுக்குப் பிறகு கோகிலாவின் இதழ்களில் தன் முத்திரையைப் பதித்தான்.

கோகிலா களுக்கென்று நகைத்தாள். ''அடாடா! கண்ணாடியில் தோன்றுவது நமது பிரதி பிம்பம் என்று ஏமாந்து விட்டீர்களே! எதிர்ப் புறத்து அறையில் குஸுமாவும் ரமேஷும் அல்லவா நின்று கொண்டிருக்கிறார்கள்!'' என்றாள்.

உண்மையாகவே, ரமேஷும் குஸுமாவும் எதிர்ப் புறத்து அறையின் வாசற்படியில் ஒருவரை யொருவர் அணைத்தவாறு நின்று கொண்டிருந்தார்கள். மாலை வேளையின் மங்கலான ஒளியில் கோகிலாவும் ஜகதீஷும் கண்ணாடியில் தங்கள் பிரதி பிம்பம்தான் விழுந்திருக்கிறது என்று எண்ணி முதலில் ஏமாந்துதான் போய் விட்டார்கள். ஆனால் அன்பில் தேர்ந்த கோகிலாவுக்கு விவரத்தைப் புரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை.

என்ன இருந்தாலும் ரமேஷும் குஸுமாவும் அன்பு செலுத்துவதில் அநுபவம் பற்றாதவர்கள்தானே? பக்கம் பார்த்துப் பயந்து பயந்து அன்பு புரியும் புதுக் காதல் தம்பதிகள்தானே? அதனால் அவர்களது அந்தத் திருட்டுச் செய்கையை அதிகச் சிரமமில்லாமல் கோகிலா கையும் மெய்யுமாகக் கண்டு பிடித்து விட்டாள்!

ஜகதீஷ் அவள் இதழ்களில் முத்தம் ஈந்த பொழுது அவள் எதிர்ப்புறத்துக் கண்ணாடியைக் கவனித்தாள். அவர்களுடைய அந்தச் செய்கையைக் கண்ணாடி காப்பி அடிக்கவில்லை. அதற்குப் பதிலாக இருவர் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு நிற்பதையே படம் பிடித்துக் காட்டியது. அப்புறம் உண்மையை உணர்ந்துகொள்ள அவளுக்கு நேரம் பிடிக்கவில்லை.

கோகிலாவின் குரலைக் கேட்டதும் கைகோத்து நின்ற ரமேஷும் குஸுமாவும் மானைப்போல் துள்ளி மின்னலைப் போல் பாய்ந்து மறைந்து விட்டனர்.

இதே சமயம் கோகிலாவோடு ஓங்காரியாவுக்கு வந்திருந்த குருட்டுக் கிழவர் தம் மாலைப் பிரார்த்தனையைத் தொடங்கினார்.

"அரங்கா! உன் மகிமையை
அறிந்தவர் யார்?"

பக்த மீராவின் அந்தப் பக்தி கீதம் பரந்தாமனின் பெருமையைப் படம் பிடித்துக் காட்டியது. அன்பே உருவான மீராவுக்குக் கிரிதர கோபாலன் தரிசனம் தந்ததோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அவளை ஆட்கொள்ளவும் அல்லவா செய்தான்! அதே கண்ணன்தான் இன்று ஜகதீஷாக உருமாறிக் கோகிலாவையும் ஆட்கொண்டானோ? ஆனால்......

இந்த ஆசைக்கு மட்டும் ஓர் அளவில்லை. அது சிற்சில சமயம் பூர்த்தியுறாமல் அரைகுறையாகவே மடிந்து விடுகிறது. கண்களுக்குப் புலனாகாத கண்ணனிடம் பக்தி பூண்ட மீராவைப் போலவேதான் விஜயலக்ஷ்மியும் ஜகதீஷிடம் அன்பு வைத்திருந்தாள். அவன் நினைவில் ஆழ்ந்து அவள் தன் ஒரு கையில் உள்ள பொன் வளையலை இன்னொரு கையினால் சுற்றுவாள்.

அப்பொழுது அவள் கண்களுக்கு ஜகதீஷின் உருவம் அதில் தெரிவது போன்ற மயக்கம் உண்டாகும். அடுத்த நிமிஷம் அப்படியே மெய்ம்மறந்து சிலையாகி விடுவாள்.

லால்ஜி ஸேட்டின் உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளாமலேயே சிற்சில சமயம் ஜகதீஷ் அவருடைய பிரசங்கங்களைத் தயார் செய்து கொடுத்துவந்தான் என்பது மறுக்க முடியாத உண்மை. அம்மாதிரி சமயங்களில் கோகிலாவும் ஜகதீஷும் தாங்கள் வசித்து வந்த அதே பழைய வீட்டுக்கு வருவதும் விஜயலக்ஷ்மியின் விருந்தினர்களாக இருப்பதும் உண்டு.

குஸுமாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீவிர ஆசை கொண்டு பிஹாரிலாலின் வீட்டைப் பழியாகப் படையெடுத்த சுகபாலும் சாந்திப்பிரியனும் இன்னும் இணைபிரியாமல் சுற்றத்தான் செய்கிறார்கள். இருந்தாலும் அவள் கிடைக்கவில்லையே என்பதற்காக அவர்கள் உள்ளம் உடைந்து போகவில்லை. வாழ்க்கையே அஸ்தமித்து விட்டதாக எண்ணி மருக வில்லை. அவர்களது தைரியத்தைக் கண்ணுற்ற கடவுள் அவர்களுக்கு ஒரு வழிவகை செய்து விட்டார். அவர்கள் இருவரும் தங்கள் தங்களுக்கேற்ற பெண்களைத் தேடி மனைவிமார்களாக அடைந்தார்கள். தேச சேவைக்கும் குடித்தன வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டும் முறையில் குடித்தனம் நடத்தவும் தொடங்கினார்கள். ஆண் பிள்ளைகளுக்கு அதுதானே அழகு! குடித்தனம் என்று ஒன்று இருந்தால்தானே துரைத்தனமும் ஒரு ஒழுங்கு முறையுடன் நடைபெறும்?

ஆம்! மனோஹர்...? ரஞ்ஜிகாந்தனுக்கும் அவனுக்கும் ஒத்துக் கொள்ள வில்லை. அவனைப் பொறுத்த வரை இந்த எல்லா வரலாறுகளும் ரகசியமாகவே இருந்தன; ஒரு மூடுமந்திரமாகவே தோன்றின.

அவனுக்கென்றுதான் ஏராளமான சொத்தும் சுதந்திரமும் இருந்தனவே! அதனால் தம் அதிகாரத்தில் இருந்த நிலங்களையும் ஆசிரமத்தின் உடைமைகளையும் நாத்பாபா தம் சொத்துக்கு வாரிசான மனோஹருக்குக் கொடுக்காமல் தம்முடன் ஆத்மீகத் தொடர்பு கொண்டு தமது ஆத்ம வாரிசாகி விட்ட ஜகதீஷுக்கும் கோகிலாவுக்குமே கொடுத்து விட்டார்.

கொஞ்ச நாட்கள் குஸுமாவின் நினைவாகவே இருந்த மனோஹர், "நான் சுகமாக இருக்கிறேன் என்று யார் சொல்வது? நான் துயரமாக இருந்தால்தான் யாருக்கு என்ன?" என்றெல்லாம் பிதற்றிக்கொண்டிருந்தான். முற்றும் துறந்த முனிவர்களைப் போல் விரக்தி மனப்பான்மையைக் கைக்கொண்டிருந்தான். ஆனால் அந்த விரக்தி மனப்பான்மை வெகு நாட்கள் நீடிக்கவில்லை.

கடைசியில் பெரியவர்களுடைய ஆலோசனையைத் தட்ட முடியாமல் ஒரு பெண்ணைத் தேடி மணந்து கொண்டான். அதோடு அவளுக்குக் குஸுமா என்றும் பெயர் வைத்தான். இது போல் நினைவைப் பசுமையாக வைத்துக் கொள்வதில் யாராவது அதிக அக்கறை காட்டினால் அவனிடம் ரசிகத்தன்மை குறைவு என்று இன்னொருவர் எதற்காகக் குறைப் பட்டுக் கொள்ள வேண்டும்? (முற்றும்)


துரித சேவைக்கு
சிறந்த சைக்கிள்
ஒரு ஹெர்குலிஸ் சைக்கிள் இருந்தால், வேலை விளையாட்டாகிறது. தூரத் தொலைவுகளும் மிகவும் சமீபமாகின்றன.
HERCULES
MADE IN INDIA
ஹெர்குலிஸ்
உறுதியான உழைப்பிற்கு
தயாரிப்பவர்கள் :
டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்,
மதராஸ்.
எல்லா பிரதான வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
TICBLP


இதைப்போன்ற டூத் பிரஷ் வேறில்லை!
உங்களுக்கேற்றடிசைன்! உங்கள் வாய்க்கு பொருத்தமானது!
பற்களை உறுதிப்படுத்தும் புது அம்சங்கள்
• முற்றிலும் ஸ்டரிலைஸ் செய்யப்பட்டது
• கால்கேட் டூத் பிரஷ்களின் ஹாண்டில்கள் தனி வர்ண முள்ளவை; உங்களுக்கு ஏற்றதை லகுவில் அறியலாம்
• பிளாஸ்டிக் ஹாண்டிலில் நிஜ நைலான் நார்கள்
• மிருதுவாக பாலிஷ் செய்கிறது; இளுமல் சிதையாது
• பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது
குழந்தைகளுக்கு
ஸ்திரீகளுக்கு
ஆண்களுக்கு
2 சைஸ்கள்
பெரியவர்களுக்கு குழந்தைகளுக்கு
ஹார்ட், மீடியம், சாப்ட் டப்ட்ஸ்
COLGATE
NYLON TOOTH BRUSH
AN EXCELLENT QUALITY TOOTH BRUSH WITH GENUINE NYLON BRISTLES - FIRMLY FASTENED
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
"துவண்டு" போவதில்லை

புஷ்பாவின் திருமணம்

டி. எஸ். சங்கரன்



என்றும் போலத்தான் அன்றும் என் வார்டுகளைப் பரிசோதித்துக் கொண்டு வந்தேன். சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்னால் என் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த ஒரு இளம் வாலிபன் மட்டிலும் என் மனத்தை வெகுவாகக் கவர்ந்திருந்தான். ஏதோ ஒரு கார் விபத்தில் சிக்கிக்கொண்டு ஒரு நாள் இரவு ஒரு மணிக்கு மேல் வந்து சேர்க்கப்பட்டான்.

வழக்கம் போலவே அவன் கால் பக்கம் கட்டி விடப்பட்டிருந்த அட்டையைப் பார்த்தேன். அங்கிருந்த நர்ஸ் அப்பொழுதுதான் அவனுக்கு 'தர்மாமீட்டர்' வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் அவனிடம் சென்றதும் அவன் பேசவில்லை. தர்மாமீட்டரை வாங்கிப் பார்த்தேன். சாதாரணமாகத்தான் இருந்தது. ஜுரம் ஒன்றும் இல்லை.

"என்ன மிஸ்டர் வாசு! ஜுரமெல்லாம் விட்டுப் போச்சு! காயங்களெல்லாம் சரியாகிக் கொண்டு வருகின்றன! இன்னும் ஒரு வாரத்தில் 'டிஸ்சார்ஜ்' செய்து விடலாம் என்று நினைக்கிறேன். அப்புறம் நீங்கள் வந்து காயங்களுக்கு மருந்து போட்டுக் கட்டிக் கொண்டு போனால் போதும்" என்றேன் நான்.

"ரொம்ப வந்தனம், டாக்டர்! நான் இன்னும் என் சொந்தக்காரர்களில் ஒருவருக்குக் கூட இதைப் பற்றி எழுதவில்லை. இன்றுதான் எழுதி வைத்திருக்கிறேன்......" என்று இன்னும் மேலே ஏதோ சொல்ல வந்தவன் அப்படியே நிறுத்தி விட்டான்!

"ஏன் இதுவரையில் எழுதவில்லை!" என்று கேட்டேன் நான்.

"எழுதியிருந்தால் அவ்வளவுதான் டாக்டர்! என் சொந்தக்காரர்கள், புஷ்பா எல்லாரும் திரண்டு வந்து இந்த ஆஸ்பத்திரியையே இரண்டாக்கி விருப்பார்கள்!"

மற்ற படுக்கைகளையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்ப எனக்குச் சுமார் அரை மணி நேரம் பிடித்திருக்கும். எல்லாரையும் பார்த்து விட்டுத் திரும்பி வரும்போது வாசு மறுபடியும் என்னுடன் ஏதோ பேசக் காத்துக் கொண்டிருந்தது எனக்குத் தெரிந்தது.

"டாக்டர் ஸார்!" என்றான் வாசு.

"என்ன வாசு!"

"தயவு செய்து இந்தக் கவரை ஒட்டி இன்றைய தபாலில் சேர்த்து விடுவீர்களா!" என்று கேட்டுக் கொண்டே ஒரு தபால் கவரை என்னிடம் நீட்டினான் வாசு.

"ஓ, அதற்கென்ன!" என்று சொல்லிக் கொண்டே அதை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டேன். நேராக என் அறைக்கு வந்து உட்கார்ந்தேன். நான் எழுத வேண்டியிருந்த இரண்டு மூன்று கடிதங்களை எழுதி முடித்து விட்டு அத்துடன் வாசுவின் கவரையும் சேர்க்கப் பையினுள் கை விட்டு எடுத்தேன்.

அதில் எழுதியிருந்த விலாசத்தைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது! அடி வயிற்றில் 'பகீர்' என்றது! திடீரென்று என் இருதயம் அப்படியே அறுபட்டுக் குடலின் மத்தியில் அகப்பட்டுத் திண்டாடுவது போல் இருந்தது.

வாசு நேசிக்கும் புஷ்பாதான், நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் நிச்சயித்திருந்த என் அக்கா சாவித்திரியின் மகள்! ஆமாம்! வாசுவின் காதலியும் என் புஷ்பாவும் ஒருத்தியேதான்! அப்படியென்றால் புஷ்பா எனக்காக வாழ்கிறவள் என்று நினைத்துப் பலபல கோட்டைகள் கட்டினதெல்லாம் வீண்தானா!

ஒரு விநாடி என் நெஞ்சு நின்று விட்டது. அந்த ஒரு விநாடியில் இந்த பூலோகம் மட்டிலுமில்லாமல், பிரபஞ்சத்திலுள்ள எல்லா உலகங்களும் ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டதைப் போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. மீண்டும் நான் என் சுய உணர்வுக்கு வரக் கொஞ்ச நேரம் பிடித்தது.

நெற்றியில் நிறைந்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு அந்தக் கவரை ஒரு முறை மீண்டும் பார்த்தேன்! கவரில் உள்ள கடிதத்தைப் பார்க்கலாமா, வேண்டாமா என்று யோசித்தேன். அவளுக்கு என்னதான் எழுதியிருக்கிறான் என்று பார்க்க என் உள்ளம் துடித்தது. தன் இதயத்தையே இந்தக் கடிதத்தில் அவன் கொட்டியிருப்பான் போலிருக்கிறதே!

இப்படியெல்லாம் நான் எண்ணிக் கொண்டு இருக்கும்போதே ஏதோ ஒரு உணர்ச்சி என்னையும் அறியாமல் அந்தக் கடிதத்தைப் பிரித்து வாசிக்கச் சொல்லியது.

"அன்புள்ள புஷ்பாவுக்கு,

உனக்கு இதுநாள் வரை எழுதாததற்கு மன்னிக்கவும். நான் என்ன எழுதப் போகிறேனோ என்று உன் மனம் இப்பொழுது

துடிப்பதை நான் இந்த ஆஸ்பத்திரிக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டே பார்க்க முடிகிறது! புஷ்பா, அதைரியப் படாதே, சொல்கிறேன்.

ஒரு நாள் இரவு நானும் என் நண்பர்களும் ஒரு சினிமா பார்த்து விட்டு மெதுவாக ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தோம். அந்தச் சமயம் எங்கள் பின்னாலிருந்து ஒரு கார் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தது. கார் வருவதை எங்கள் உற்சாகத்தில் நாங்கள் கவனிக்கவில்லை. ஹாரன் சத்தம் திடீரென்று கேட்டதும் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடினோம். எனக்கு ஒரு வினாடி என்ன செய்வதென்றே புரியவில்லை! ஆனால் அடுத்த நிமிஷம் மலை உச்சியிலிருந்து பூமியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதுபோல எனக்குத் தோன்றியது.

பிறகு நான் திரும்பவும் கண் திறந்தபோது இந்த ஆஸ்பத்திரிப் படுக்கையில் இருப்பதைக் கண்டேன். காயம் ஒன்றும் அப்படி அதிகமாகப் பட்டுவிடவில்லை. இலேசாகப் பல இடங்களில் சிராய்த்திருந்தது.

புஷ்பா! இந்த ஆஸ்பத்திரி டாக்டர் மட்டும் அன்று உடனடியாக என்னைக் கவனிக்கவில்லையென்றால், நான் நிச்சயம் என்ன ஆகியிருப்பேனோ, தெரியாது!

வீணாக இப்பொழுது என்னைப்பற்றி அலட்டிக் கொள்ளாதே. ஏதோ வந்தது, போச்சு. உன் பரீக்ஷைகளில் கவனம் செலுத்திப் படி. நானே உன்னை வந்து கூடிய சீக்கிரம் பார்க்கிறேன்.

வாசு."

ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, பத்து தடவைகளுக்கு மேல் படித்திருப்பேன். ஒவ்வொரு எழுத்திலுமல்லவா அவன் தன் இருதயத்தைத் திறந்து காட்டி யிருக்கிறான்!

அப்படி யென்றால் புஷ்பாவும் இவனை நேசிக்கிறாளா! ஏன் இருக்காது! திடீரென்று ஒரு வருஷத்துக்கு முன் நடந்ததொரு நிகழ்ச்சி எனக்கு ஞாபகம் வந்தது.

அப்பொழுது நான் திருச்சி ஆஸ்பத்திரியில் சர்ஜனாக நியமிக்கப்பட்டிருந்தேன். நான் திருச்சியிலிருந்த போதிலும் என் தமக்கை சாவித்திரியின் வீட்டில் நான் தங்கி யிருக்கவில்லை. தனியாகத்தான் இருந்தேன். ஆனால் என் அக்காவின் வீட்டுக்கு அவ்வப்போது போய்க் கொண்டிருப்பேன்!

ஒரு நாள் அப்படிப் போயிருந்த போது புஷ்பா எங்கேயோ வெளியே போகத் தன்னை அவசரமாகச் சிங்காரித்துக் கொண்டிருந்தாள்.

"வாருங்கள் டாக்டர், ஏது அத்தி பூத்தாற் போல்!" என்று புஷ்பா வரவேற்றாள்.

"எங்கேயோ அவசரமாய்ப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறதே!" என்றேன் நான்.

"ஆமாம், ஒரு நண்பரைப் பார்க்க..."

"புஷ்பா! நான் வரும் போதெல்லாம் நீ வீட்டி லிருப்பதில்லையே! என் மேல் உனக்கு ஏதாவது கோபமா!"

"கோபமா! உங்கள் மேலா! எனக்கா! உங்கள் மேல் கோபித்துக் கொள்ளக் காரணம்!"

இந்தச் சமயத்தில் புஷ்பாவின் தாயார் சாவித்திரி அங்கே வந்தாள். புஷ்பா புறப்படத் தயாரா யிருப்பதைக் கண்டு, "உன்னைப் பார்க்கணும்னு வந்துட்டு, வந்துட்டுப் போகிறான் ராகவன். நீ என்னடான்னா வீட்டிலேயே அரை நாழிகூடத் தங்குவதில்லை! இப்போ ராகவன் வந்திருக்கான். அவனுடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிரு!" என்றாள் சாவித்திரி.

"அம்மா! நீ சொல்வது வேடிக்கையாக இருக்கின்றதே! இவருடன் பேச நானும் என்ன ஒரு டாக்டரா! கடவுள் புண்ணியத்திலே இப்போ எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை!... மாமாகூடப் பேசவேண்டுமானால் நோயைப் பற்றிப் பேச வேண்டும், அப்பொழுதுதான் அவருக்குப் பிடிக்கும்! என்ன மாமா, அப்படித்தானே!" என்று சொல்லி 'களுக்'கென்று பரிகாசமாய்ச் சிரித்தாள் புஷ்பா.

"சரிதாண்டி! நீயும் நீ பேசற அழகும்! நாளைக்கு உனக்கும் ராகவனுக்கும் கல்யாணம் நடந்தாச்சுன்னா அப்புறம் என்ன செய்வாயாம்!" என்றாள் சாவித்திரி.


"என்னம்மா! எனக்கும் மாமாவுக்குமா கல்யாணம்!" என்று திடுக்கிட்டவளாகக் கேட்டாள் புஷ்பா.

"என்னடி இது! நீ கேட்கிற கேள்வி நன்றாய்த்தானிருக்கு, போ! அவனுக்காக நீ வளர்ந்தவள்! ஏன்! அவனுக்கென்ன குறைச்சல்? பணமில்லையா, அழகில்லையா, படிப்புத்தான் இல்லையா!" என்று அடுக்கிக் கொண்டே போனாள் சாவித்திரி.

"அதுக்கில்லையம்மா! ஒரு டாக்டருக்கு மற்றொரு லேடி டாக்டர்தான் மனைவியாகவேண்டும். வெறும் வறட்டுப் பட்டதாரியாகிய நான் அதற்கு லாயக்கில்லையம்மா! சரி, நேரமாச்சு, நான் வருகிறேன்" என்று பதிலையும் எதிர் பார்க்காமல் சென்று விட்டாள் புஷ்பா!

ஆயிரம் சம்மட்டி கொண்டு அடித்தாற் போன்றதொரு உணர்ச்சி எனக்கு அப்பொழுது ஏற்பட்டது! எத்தனை ஆசையுடன் நான் அங்கு போனேன்! ஆனால் எனக்கு அங்கு புஷ்பாவிடம் கிடைத்த வரவேற்பு!...... என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று சொல்லாமல் அல்லவா சொல்லி விட்டாள்!

எஜமான விசுவாசம்!



மேலே கண்ட சம்பவம் என் நினைவுக்கு வந்தவுடன் ஒரு பெருமூச்சு என்னையும் அறியாமல் வெளி வந்தது. இப்பொழுதல்லவா புரிகின்றது புஷ்பாவின் மனம்! அன்று என்னை நிராகரித்ததன் காரணம்.......ஆமாம்....அவள் அன்று பார்க்கச் சென்றது வாசுவாகத்தானே இருக்க வேண்டும்!

உடனே எனக்குக் காரணமறியாததொரு கோபம் வாசுவின்மேல் உண்டாயிற்று. எங்கிருந்தோ திடீரென்று வந்து என் மன நிம்மதியைக் கெடுத்து என் வாழ்க்கையையு மல்லவா பாழாக்கி விட்டான்!

சே! என்ன அசட்டுத்தனம்! உண்மையில் இவன்பேரில் கோபித்துக் கொள்வதில் என்ன பயன்! இவனையல்லவா புஷ்பா காதலிக்கிறாள்!

"புஷ்பா! வாசு உன்னைப் பரிபூரணமாகக் காதலிக்கிறான். அவனையும் என்னைப்போல் கைவிட்டு விடாதே!" என்று என்னையும் அறியாமல் என் வாய் முணுமுணுத்தது.

உடனே அந்தக் கவரில் கடிதத்தைப் போட்டு ஒட்டி அன்றையத் தபாலில் சேர்த்தேன்.

* * *

அது முதல் என் மனத்தில் எண்ண முடியாத பல எண்ணங்கள் உதிக்கலாயின. நான் ஏதோ ஒரு அசட்டுத்தனம் செய்துவிட்டதாக என்னுள் வெட்கப்பட்டுக் கொண்டேன்!

இரண்டு நாட்கள் இப்படிச் சென்றன. வாசுவைவிட ஆவலாகத் தினம் தபால்காரனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என் மனம். வேறு என்ன! புஷ்பாவின் கடிதத்தைத்தான்! அன்று வழக்கம்போலத் தபால்காரன் ஒரு கட்டுக் கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்தான். அவற்றைப் புரட்டிப் பார்த்ததில் புஷ்பா வாசுவுக்கு எழுதிய கடிதம் இருந்தது! நல்ல வேளை. கார்டுதான்! வாசிக்கலானேன்.

"என் அருமை வாசுவுக்கு,

புஷ்பா அன்புடன் எழுதும் கடிதம். உங்கள் கடிதம் கண்டதிலிருந்து என் மனம் ஒரு நிலையில் இல்லை! நீங்கள் இதுவரை எனக்குத் தெரிவிக்காமல் வேறு இருந்து விட்டீர்களே!

வாசு! உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. பாழாய்ப் போன இந்தப் பரீக்ஷை இந்தச் சமயத்தில்தானா வரணும்! உங்களுக்குச் சீக்கிரமே குணமாகி விடும்.

வாசு! என்ன எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லை! அந்த டாக்டரைக் கடவுள்தான் அனுப்பி வைத்து நம்மை மீண்டும் சேர்த்து வைத்திருக்கிறார்! வாசு! இன்னும் ஒரே வாரத்தில் என் பரீக்ஷைகள் எல்லாம் முடிந்து விடும். பிறகு நீங்கள் என்ன சொன்னாலும் சரி, உங்களைப் பார்த்து விட்டுத்தான் மறு காரியம்!

புஷ்பா."

உண்மையான காதலைக் கண்டு என்னையும் மறந்து வியந்தேன்! நேசம் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! அக்காவின் பலவந்தத்தால் எனக்கும் புஷ்பாவுக்கும் கல்யாணம் நடந்திருந்தால் அவளிடமிருந்து உண்மையான அன்பைத் தான் பெற்றிருக்க முடியுமா! மீண்டும் ஒருமுறை அவளது அன்புக் கடிதத்தைப் படித்தேன்.

இச்சமயம் நான் படிக்கும்போது எனக்குப் புஷ்பாவின் மேலிருந்த ஆத்திரமும் வாசுவின் மேலிருந்த கோபமும் மாறி விட்டன.

இந்த விபத்தை ஏற்படுத்தி வாசுவை என்னிடம் கொண்டு சேர்த்த எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்தேன். இந்தக் கார் விபத்தில்லாமல் இருந்தால் புஷ்பாவினுடைய மனத்தை நான் அறிந்திருக்க முடியுமா!

இன்னொரு காரணத்தாலும் நான் இறைவனுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன். வாசு இங்கு அடிபட்டு வருவதற்கு முன்பே இவர்களது இணைபிரியாக் காதலை நான் பார்த்திருப்பேனென்றால் என் ஆத்திரத்தில் வாசுவை நான் ஏதாவது செய்திருப்பேனோ என்னவோ! நல்லவேளையாகக் கடவுள் என் பக்கமிருந்து அவனைக் குணப்படுத்தி எனக்கும் அவர்கள் நேசத்தைப் பற்றித் தெரியும்படி செய்தார்.

எனக்கு ஒரு பெரிய பாரம் என்னை விட்டு நீங்கியதுபோல இருந்தது.

உற்சாகம் எங்கிருந்தோ வந்து என்னைப் பற்றிக் கொண்டது. மறு நிமிஷம் வாசுவின் படுக்கையை நோக்கி ஓடினேன்.

"மிஸ்டர் வாசு! புஷ்பா பதில் போட்டிருக்கிறாள்!" என்றேன்.

"எங்கே!" என்று கேட்டு வாங்கி ஒரே மூச்சில் படித்து முடித்தான். அவன் முகத்தில் தான் எத்தனை குதூகலம்!

"வாசு! என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் அனுமதி யில்லாமல் இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டேன்!" என்றேன்.

"அதனாலென்ன டாக்டர், பரவாயில்லை. நானைக்கு உங்களையே புஷ்பாவுக்கு அறிமுகப் படுத்தி வைக்கப் போகிறேனே!"

"வாசு! நீங்கள் எனக்குப் புஷ்பாவை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே யில்லை!"

"என்ன, டாக்டர்! புஷ்பாவை உங்களுக்குத் தெரியுமா! இதுவரை சொல்லவே யில்லையே!"

"புஷ்பாவை எனக்கு நன்றாகத் தெரியும், வாசு! சின்னக் குழந்தையிலிருந்து அவளைத் தெரியும். அவளுக்கு ஒரு மாமா இருப்பதாக உங்களிடம் அவள் சொல்ல வில்லையா!"

"ஆமாம்! ஒரு மாமா இருப்பதாகச் சொல்லியிருக்கிறாள். அவர்கூட ஏதோ ஒரு வைத்தியர்போல இருக்கிறது!"

"ஆமாம்! வைத்தியரேதான். உங்கள் முன்னால் நிற்கும் உங்கள் டாக்டர்தான் அந்தப் புஷ்பாவின் ஒரே மாமன்! வாசு! என் அக்கா மகள்தான் புஷ்பா!"

"என்ன, டாக்டர், உண்மையாகவா!"

"ஆமாம், வாசு! அதுசரி; உங்களுக்கு உதவி செய்ததற்குப் பதில் ஒன்று நீங்கள் எனக்குச் செய்ய வேண்டுமே!"

"என்ன, டாக்டர்! உடனே சொல்லுங்கள். செய்கிறேன்!"

"வேறு ஒன்றும் இல்லை, வாசு! உங்களுக்கும் புஷ்பாவுக்கும் கல்யாணம் வெகு சீக்கிரமே நடக்க வேண்டும்—அதை நான் கண்டு களிக்க வேண்டும்!" இப்படி நான் என் மனம் விட்டுச் சொல்லும்போது எனது நா தழுதழுத்தது.

"டாக்டர், நீங்கள் ஒரு டாக்டர் மாத்திரம் அல்ல! எங்கள் தெய்வமும் கூட!" என்றான் வாசு, உணர்ச்சி மிகுந்தவனாக.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor: Mi. Pa., Somasundaram.



நாளுக்கு நாள் அதிக
மிருதுவான எழிலோங்கும்
சருமம் . . .
கேடில்* கலந்த
ரெக்ஸோனா மறைந்
திருக்கும் உங்கள்
அழகை வெளிப்படுத்
தட்டும்
ரெக்ஸோனாவின் கேடில்
கலந்த நுரையை உங்கள் சரு
மத்தில் மெதுவாகத்தேய்த்து,
பிறகு கழுவுங்கள். உங்கள்
சருமம் நாளுக்கு நாள் அதிக
மழமழப்பாயும், மிருதுவா
வதையும் காண்பீர்கள். அத
னால் புதுப் பொலிவுடன்
விளங்குவீர்கள்.
பெரிய சைஸிலும்
கிடைக்
கிறது
Rexona
ரெக்ஸோனா
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும்
எண்ணெய்களின் பிரத்தியேக கலவையின்
ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
RP. 130-50 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon



